# கல்வெட்டில் சமணம்



ஏ.ஏகாம்பர நாதன்

ஜைன இளைஞர் மன்றம், சென்னை-600017

மன்ற வெளியீடு : 17
(மறுஅச்சு)

# கல்வெட்டில் சமணம்

ஏ.ஏகாம்பரநாதன் க.மு.
அகழ்வாய்வாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மன்னார்குடி தாய் – தனயன்
திருமதி.இராஜம்மாள் அய்யண்ண உபாத்தியாயர்
திரு.அ.மல்லிநாத உபாத்தியாயர்
நினைவு வெளியீடு

வெளியீடு:
**ஜைன இளைஞர் மன்றம்**
5, தெற்கு போக் சாலை,
தி.நகர், சென்னை – 600 017
**2012**

JYF Pub. No. 17

# BIBLIO GRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | **KALVETTIL SAMANAM** |
| Author | : | **A.Ekambaranathan** |
| Language | : | Tamil |
| Copy right | : | Jain Youth Forum, Chennai - 600 017 |
| Edition | : | Reprint |
| Date of Publication | : | 30.12.2012 |
| Paper used | : | Maplitho |
| Size of the Book | : | Demmy |
| Number of Pages | : | 148 + VII |
| Printer | : | Parameswari Graphics, Chennai. |
| Type Setting | : | **Tmt.Kavitha Madhisagar**<br>Cell : 9444227315 |
| Publisher | : | Jain Youth Forum,<br>No.5, South Boag Road, T.Nagar,<br>Chennai - 600 017 |
| Subject | : | **Archaeology, Epigraply**<br>A collection of articles on Jain epigraphs, history, iconography, paintings and other related subjects. |
| Price | : | **Rs.80.00** |

# பதிப்புரை

**மெய்ப்பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகித்**
**துக்கம் கெடுப்பது நூல்**

**- அருங்கலச்செப்பு**

**சமணம் ஆன்மீயத்தை இலக்காகவும் அறிவியலை இயல்பாகவும் கொண்ட அறிவுச் சமயம்.** அறப்புணைவோர்களாம், அறுநால்வர், இருபத்து நான்கு **தீர்த்தங்கரர்கள்** ஆன்மீய விடுதலை எனும் உயர்நிலை அடைய வழிகாட்டினர். மும்மணி நெறி நின்றனர்; நிற்றலைப் பாரதம் எங்கும் பரவச் செய்தனர்; இனம், மொழி, திசை கடந்து பரவியது. தமிழகத்தில் மக்களை நன்னெறிப் படுத்தி இலக்கியம், கலை, மொழி வளர்ச்சிக்கும் வளமைக்கும் வழிகோலினர். அருளறம் பூண்ட இச் சமயச் சான்றோர்கள் ஆற்றிய அருளறத் தொண்டுகளும் கலை இலக்கிய பண்பாட்டு நன்கொடைகளும் இலக்கியங்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள், முதலிய வரலாற்று மூலங்களாக விளங்குகின்றன; பண்டைய சமணசமய வரலாற்றினை விளக்குகின்றன.

சமண சமயம் பற்றி தொல்லியல் கண்ணோட்டத்துடன் 33 ஆண்டுகளுக்கு முன் அகழ்வாய்வாளராக சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த திரு.ஏ.ஏகாம்பரநாதன் 15 கட்டுரைகளை எழுதி சமண சமயக் காவலர் **ஜீவபந்து T.S.ஸ்ரீபால்** வழி மன்றத்தினருக்கு அனுப்பி வைத்தார். இவற்றின் அருமை கருதி தனி நூலாக வெளியிட விழைந்தபொழுது **திரு.ஏ.ஏகாம்பரநாதர்** பதிப்புரிமையுடன் அனுமதி தந்து உதவினார். மன்றம் வெளியிட்ட அவரது முதல் நூல் '**கல்வெட்டில் சமணம்**' என தலைப்பிடப்பட்டது.

திரு.ஏ.ஏகாம்பரநாதன் தொடர்ந்து அவரது கல்வி தகுதிகள், பணியிடங்களின் உயர்வு என வளர்ந்து சென்னைப் பல்கலைக்கழக

தொல்லியல் துறைத் தலைவர் **பேரா.Dr.ஏகாம்பரநாதன்,D.Lit.** எனும் உயர் நிலை அடைந்தார். கடந்த 33 ஆண்டுகளில் சைன தொல்லியல் துறையில் தொடர்ந்து ஈடுபாடு காட்டி வருகிறார். இதுவரை ஜைன இளைஞர் மன்றத்திற்கு 7க்கும் மேற்பட்ட நூல்களை எந்தவித எதிர்ப்பார்ப்புமின்றி எழுதி தந்துள்ளார்கள். அவரது நூல்கள் பலவும் இன்றும் ஆய்வு மாணவர்கள், ஆய்வாளர்கள் இடையில் மிக இன்றியமையாத மறுபார்வை நூல்களாக திகழ்வன. பலரும் மன்றத்தினரை தொடர்பு கொண்டு நூலின் படிகள் உள்ளனவா? என கேட்கின்றனர். இவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் **'கல்வெட்டில் சமணம்'** எனும் நூலின் மறுஅச்சினை வெளியிடுகிறோம். நூலாசிரியருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். இந்நூலின் முதல் பதிப்பு 1979 ஆம் ஆண்டில் வெளிவந்த பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவை உரிய இடங்களில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் வரலாற்று மூலங்களில் எவ்வித மாற்றமும் இன்றி தொடர்வது சிறப்பாகும். தமிழக சைனத்தின் பொதுவானதொரு படத்தினை இந்நூல் காட்டுகிறது.

நன்கொடை பெற்று நூல் வெளியிடும் பணியின் தொடர்ச்சியாக இந்நூல் **புரவலர் பொறியாளர் திரு.ம.பூபாலன்** அவர்களின் பொருள் உதவியுடன் வெளிவருகிறது. மன்றத்தின் 17ஆவது வெளியீட்டின் மறுஅச்சினை **திருமதி.இராஜம்மாள் அய்யண்ண உபாத்தியாயர் - திரு.அ.மல்லிநாத உபாத்தியாயர்** நினைவு வெளியீடாக **தீபங்குடி** நல்ஞான தீபவிழாவில் வெளியிடுவதில் பெரு மகிழ்வு கொள்கிறோம். திரு.ம.பூபாலன் அவர்களின் கரம்பற்றி நன்றி தெரிவிக்கிறோம்; தொண்டு சிறக்க வாழ்த்துகிறோம்.

இந்நூலினை கணினி தட்டச்சு செய்து உதவிய திருமதி.கவிதா மதிசாகர், மற்றும் அச்சிட்ட பரமேஸ்வரி கிராபிக்ஸ் ஆகியோருக்கும் நன்றி.

தமிழ்கூறும் நல்லுலகம் **'கல்வெட்டில் சமணம்'** நூலினை வரவேற்று ஊக்குவிக்கும் என நம்புகிறோம்.

- ஜைன இளைஞர் மன்றத்தினர்.

# முன்னுரை

நம் நாட்டில் தோன்றிய பல்வேறு சமயங்களுள் சமணசமயமும் தொன்மை வாய்ந்த ஒன்றாகும். கொல்லாமை, வாய்மை, அன்புடைமை முதலிய அறநெறிக்கருத்துக்களை அடிப்படையாகக்கொண்ட சமண சமயம் இந்தியப் பெருநிலப்பரப்பின் வெவ்வேறு பகுதிகளிலும் வேரூன்றித் தழைத்து நிற்கின்றது. இச்சமயத்தவர் எண்ணிறந்த இலக்கிய, இலக்கண நூற்களைப் படைத்தது மட்டுமின்றி அணிதிகழ் அருகன் கோயில்களையும், அழகுமிக்க கலைச் செல்வங்களையும் தோற்றுவித்துள்ளனர். அருளறம் பூண்ட இச்சமயச் சான்றோர் தமிழன்னைக்கும், தமிழ்ச்சமுதாயத்திற்கும் ஆற்றியுள்ள அருந்தொண்டுகள் போற்றுதற்குரியனவாகும். சமணசமயம் பற்றி தொல்லியல் கண்ணோட்டத்துடன் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இப்புத்தகத்தில் இடம் பெறுகின்றன. கல்வெட்டுச் சான்றுகளை மிக்கவாறும் அடிப்படையாகக் கொண்டுள்ளமையால், இப்புத்தகத்திற்குக் 'கல்வெட்டில் சமணம்' என்னும் தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

சமணசமயம் பற்றிய இவ்வாய்வினை மேற்கொள்ளும்போது சிறந்த கருத்துக்களை வழங்கி ஊக்கம் அளித்த பேராசிரியர் ஆர்.சம்பகலட்சுமி அவர்களுக்கும், சமணக் கோயில்கள் பற்றிய ஆய்வினைத் தொடருதற்குத் துணைநின்ற **ஜீவபந்து டி.எஸ்.ஸ்ரீபால்** அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும், இப்புத்தகத்தினைச் சீரியமுறையில் வெளியிட்டு உதவிய ஜைன இளைஞர் மன்றத்திற்கும் எனது நன்றி உரித்தாகுக!

சென்னை
20.10.1979

ஏ.ஏகம்பரநாதன்

## திருமதி இராஜம்மாள் அய்யண்ண உபாத்தியாயர்
## திரு. அ.மல்லிநாத உபாத்தியாயர்

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஜினாலய உபாத்தியாயர் குடும்பங்களில் முக்கியமாக இருந்த குடும்பம் **திரு. அய்யண்ண உபாத்தியாயர்** குடும்பமாகும். இவர் மேல்சித்தாமூர் ஜினகாஞ்சி மடாதிபதிகளுக்கு முழுநேர சேவை ஆற்றிவந்தார். இவரது துணைவியார் சோலை அருகாவூர் **திருமதி.இராஜம்மாள்** ஆவார். இவர்களுக்கு **1914** ஆம் ஆண்டு திரு.மல்லிநாத உபாத்தியாயர் பிறந்தார். தன் தந்தையார் போன்று இவரும் மன்னார்குடி ஆலயத்திற்குச் சேவை செய்தார். கரந்தை கிராமத்தைச் சேர்ந்த **யஸஸ்வதி** அம்மாளை திருமணம் புரிந்தார். இருமகள்களையும் ஒரு மகனையும் பெற்றெடுத்தனர். மகன் பிறந்தவுடன் யஸஸ்வதி மரணம் அடைந்தார். **திரு.மல்லிநாத உபாத்தியாயர்** தனது தாயார் **திருமதி.இராஜம்மாள்** அவர்களின் துணையுடன் மக்களை வளர்த்து ஆளாக்கி திருமணம் செய்து வைத்தார். **திருமதி.இராஜம்மாள் 1978** ஆம் ஆண்டு தனது 85 வது வயதில் சுகதி அடைந்தார். **திரு.மல்லிநாத உபாத்தியாயர்** மன்னார்குடி மல்லிநாதர் ஜினாலயத்தில் பூஜா மந்திரங்களை படிப்பதைத் தன் இறுதிகாலம் வரை தொடர்ந்தார். **01.10.1995** அன்று சுகதி அடைந்தார். இவரது ஒரே மகன் **பொறியாளர் ம.பூபாலன்.** தந்தை நினைவாகவும், தன்னைக் கண்ணும் கருத்துமாகப் பாசத்தோடும் பரிவுடனும் வளர்த்து ஆளாக்கிய தன் பாட்டியார் **திருமதி.இராஜம்மாள்** நினைவாகவும் '**கல்வெட்டில் சமணம்**' எனும் நூலை வெளியிட பொருள் உதவி செய்து பெறற்கரிய நல்வினையைப் பெற்றுள்ளார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சமண சமயக் கல்வெட்டுகள் | 1 |
| 2. | கல்வெட்டுப் பாடல்கள் | 11 |
| 3. | பட்டாரகர் பட்டாரியர் | 21 |
| 4. | கோயில்களுக்கு அளித்த நிவந்தங்கள் | 27 |
| 5. | சமண சிற்பங்கள் படிமங்கள் | 39 |
| 6. | சமண சமய ஓவியங்கள் | 54 |
| 7. | சமண திருவுருவ விளக்கம் | 62 |
| 8. | குமரி மாவட்டத்தில் சமணம் | 83 |
| 9. | பகவதிமலையில் பண்டைய சமண சான்றுகள் | 91 |
| 10. | சரவணன்பேடு பார்சுவநாதர் கோயில் | 96 |
| 11. | புழல் ஆதிநாதர் கோயில் | 99 |
| 12. | சம்பந்தரும் சமணமும் | 103 |
| 13. | சமண சமயத்தில் யக்ஷி | 108 |
| 14. | சிலப்பதிகாரத்தில் சமணம் | 116 |
| 15. | மெக்கன்சி தொகுப்பில் சமணம் | 130 |

# 1. சமண சமயக் கல்வெட்டுகள்

நம் நாட்டின் பண்டைய வரலாற்றினை அறிவதற்கு அக்கால இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், சிற்பங்கள், அகழ்வாய்வில் கிடைத்த பொருட்கள் முதலியன பெரிதும் துணை புரிகின்றன. இவற்றுள் இலக்கியங்களும், கல்வெட்டுகளும் அக்கால அரசியல் அமைப்பு, சமுதாய அமைப்பு, மக்கள் வாழ்க்கை முறை, சமயம் போன்றவற்றை அறிவுறுத்தும் உரிய மூலங்களாகத் திகழ்கின்றன. இலக்கியங்களில் பிற்காலத்தில் இடைச் செருகல் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. ஆனால் பொதுவாக முந்திய கல்வெட்டுகளில் பிற்காலத்தில் எதையும் புதியதாகப் புகுத்துதல் என்பது இயலாத காரியம். நம் நாட்டிலுள்ள பல்வேறு சமயங்களைப் பற்றியும், அச் சமயங்களின் வளர்ச்சி, அதனால் சமுதாயதில் ஏற்பட்ட மாறுதல்கள் முதலியனவற்றையும் கல்வெட்டுகளின் மூலம் அறியவருகிறோம். இக்கட்டுரையின்கண் தமிழகத்திலுள்ள சமண சமயக் கல்வெட்டுகளின் வாயிலாக அறியப்படும் சில செய்திகளைக் காணலாம்.

## சமணம் தமிழகத்தில் பரவியமை

கி.மு.4–ம் நூற்றாண்டில் சந்திரகுப்தமௌரிய அரசனும், பல சமணத் துறவிகளும் கர்நாடக மாநிலத்திலுள்ள சரவணபெல்கோலா என்னுமிடத்திற்கு வந்து சமண சமயம் பரவ வழிகோலினர் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். பின்னர் கி.மு.3–ம் நூற்றாண்டில் கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்குச் சமணம் கொங்கு நாட்டின் வழியாகப் பரவியிருக்க வேண்டும் என்பது அறிஞர் பலரது கருத்துரையாகும். இதற்குச் சான்றாக கொங்கு நாட்டில் கி.மு.3–ம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமி கல்வெட்டு புகழியூர் என்னுமிடத்தில் காணப்படுகிறது. கொங்கு நாட்டிலிருந்து சமண சமயச் சான்றோர் தெற்கு நோக்கி பாண்டிய நாட்டிற்கும் , பின்னர் கிழக்கு நோக்கி தொண்டை மண்டலத்திற்கும் சென்றுள்ளமையை ஆங்காங்கு காணப்பெறும் பிராமி கல்வெட்டுகளால் அறியவருகிறோம்.



பாண்டியநாட்டுப் பிராமி கல்வெட்டுகளுள் சில கி.மு.3,2–ம் நூற்றாண்டுகளையும், தொண்டை மண்டல பிராமிக் கல்வெட்டுகள் கி.பி.3–ம் நூற்றாண்டையும், அதற்குப் பிற்பட்ட காலத்தையும் சார்ந்தவையாக இருப்பதால் கொங்கு நாட்டிலிருந்து முதலில் பாண்டிய நாட்டிற்கும், பின்னர் தொண்டை நாட்டிற்கும் சமணம் பரவியிருக்க வேண்டும் என்று கூறலாம்.[1]

பிராமி கல்வெட்டுக்குப் பின்னர் கி.பி.7–ம் நூற்றாண்டிலிருந்து சமண சமயத் தலங்களிலும், கோயில்களிலும் வட்டெழுத்து தமிழ் கல்வெட்டுகள் ஏராளமாக காணப்படுவதிலிருந்து பிற்காலத்தில் சமண சமயம் சீரும் சிறப்பு முற்றிருந்ததை அறிய முடிகிறது.

## மறைந்த சமணப் பள்ளிகள்

தமிழகத்தில் முன்பிருந்த பல சமணக் கோயில்கள் காலப் போக்கினாலும், சரிவர கண்காணிக்கப்படாமையாலும், சமயக் காழ்ப்பினாலும் அழிந்துள்ளன. ஆனால் இக்கோயில்கள் அழிவுற்ற போதிலும் அவை இருந்ததமை பற்றிய செய்திகளை வேறுபகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகள் வாயிலாக அறிய வருகிறோம். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த **கீரைபாக்கம்** என்னும் ஊரிலுள்ள ஏரிக்கருகில் காணப்படும் கி.பி.9–ம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றிலிருந்து இவ்வூருக்கும் வடக்கில் **தேசவல்லப சினாலயம்** ஒன்று இருந்ததென்றும், இதனை மகாவீரகுருவின் மாணாக்கராகிய அமர முதல்குரு கட்டினார் என்றும் அறியலாம்.[2]

தென்னார்காடு மாவட்டத்திலுள்ள **ஜம்பை** என்னும் ஊருக்குச் சற்றுத் தொலைவில் காணப்படும் கல்வெட்டில் **கண்ட ராதித்தப் பெரும்பள்ளி**யைப் பற்றியும், இதனைக் கண்காணித்து வந்த நேமிநாதரைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன.[3] இது போன்று திருச்சி மாவட்டத்திலுள்ள சம்புகேசுவரர் கோயிலில் **கவிராசப் பெரும்பள்ளி** குறிக்கப்பட்டுள்ளது.[4]

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த சமணர் திடல் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டில் 'திருவெண்ணாயில் ஐஞ்நூற்றுவப் பெரும்பள்ளி திருத்தலமாடம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளமையால், இங்கு

ஐஞ்னூற்றுவப் பெரும்பள்ளி என்னும் சமணக் கோயிலும், மடமும் இருந்திருக்க வேண்டும் என்று தெரிய வருகிறோம்.[5]

தஞ்சை மாவட்டத்திலுள்ள சுந்தரேசுவரர் கோயில் கல்வெட்டொன்றிலிருந்து இப்பகுதியில் சமணப்பள்ளி ஒன்றிருந்ததையும், [6] மருத்துவக் குடி சிவன் கோயில் கல்வெட்டிலிருந்து **சேதிகுலமாணிக்கப் பெரும்பள்ளி, கங்கருள சுந்தரப் பெரும்பள்ளி**[7] ஆகிய பள்ளிகள் இருந்தமையையும் அறிய முடிகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்து விளாப் பாக்கத்திலுள்ள நாக நாதசுவாமி கோயிலின் முன்பு காணப்படும் கற்பலகையில் பொறிக்கப்பட்டுள்ள முதற்பராந்தக சோழன் காலக் கல்வெட்டு, **திருப்பாண்மலை** அரிட்டநேமி பட்டாரகரின் மாணவியாகிய **பட்டினிக் குரத்தியடிகள்** என்பவரால் விளாப்பாக்கத்தில் பெண் பள்ளியில் உள்ளவர்களுக்குப் பயன்படும் வகையில் கிணறு ஒன்று வெட்டப்பட்டது என்று கூறுகிறது.[8] இதிலிருந்து சமண சமயப் பெண் துறவிகளுக்கெனத் தனியாகப் **பெண்பள்ளி** ஒன்றிருந்தமை அறியற்பாலதாகும், இவ்வாறு முன்னர் அழிந்துபோன பள்ளிகளைப் பற்றி அறிய பிற இடங்களில் காணப்படும் கல்வெட்டுகள் மிகவும் துணைபுரிகின்றன.

## சமய மாற்றம் செய்யப்பட்ட கோயில்கள்

சமண சமயம் செல்வாக்குற்றிருந்த காலை அதன் வளர்ச்சியினைக் குன்றச் செய்யும் பொருட்டு இந்து சமயத்தவர் காழ்ப்புணர்வு கொண்டு சில முயற்சிகளைக் கைக்கொண்டனர். அவற்றுள் ஒன்று சமணக் கோயில்களை இந்து சமயக் கோயில்களாக மாற்றியமைத்தமையாகும். மேலும், பல சமணக் கோயில்களை முற்றிலும் அழித்தாகவும், அக்கோயில்களிலுள்ள கற்களைக் கொண்டு இந்து சமயக் கோயில்களைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளன. முன்பு சமணக் கோயில்களாக இருந்து பின்னர் இந்து சமயக் கோயில்களாக மாற்றியமையை அறிவதற்குக் கல்வெட்டுகள் சான்றுகளாக திகழ்கின்றன.

குமரி மாவட்டத்திலுள்ள **நாகர்கோயில்** என்னும் ஊரில் தற்போது இந்துக்களால் வழிப்படப்பட்டுவரும் **நாகராசர் கோயில்** முன்பு சமணக் கோயிலாக திகழ்ந்திருக்கிறது. இதற்கு இக்கோயிலில்

காணப்படும் **பார்சுவநாதர், மகாவீரர், பத்மாவதி** ஆகியோரது சிற்பங்கள் சான்றாக விளங்குகின்றன. இவையன்றி இக்கோயிலிலுள்ள **16, 17 –** ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் சில நாகதேவருக்கு வழிபாடு நடத்தப் **பள்ளிச் சந்த நிலங்கள்** வழங்கியமையையும், அந்நிலங்கள் **கமலவாகன பண்டிதர், குண வீரபண்டிதர்** என்னும் இரு சமணப் பெரியோர்களிடம் ஒப்படைக்கப்பட்டமையையும் குறிப்பிடுகின்றன.[9] இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது முன்பு இக்கோயில் சமணக் கோயிலாக இருந்ததென்பதும், கி.பி. 17–ம் நூற்றாண்டிற்குப் பின்னரே இந்து சமயக் கோயிலாக மாற்றப்பட்டிருக்க வேண்டுமென்பதும் நன்கு புலனாகும்.

இதனைப் போன்று **சிதரால்** மலையிலுள்ள கோயில் ஒன்றும் பிற்காலத்தில் இந்து சமயத்தவரால் **பகவதி கோயிலாக மாற்றப்பட்டுள்ளது.** இம்மலையில் ஏராளமான சமணத் திருவுருவங்களும், அடுத்தடுத்து மூன்று கருவறைகளும், இரண்டாவது கருவறையில் பகவதியம்மனின் திருவுருவங்களும் இடம் பெற்றுள்ளன. பகவதியம்மன் என வழிபடப்பட்டு வரும் திருவுருவின் மீது சுதை பூசப்பட்டுள்ளதால், அதன் உள்ளிருக்கும் சிற்பம் சமண சமயத்தில் எவரைக் குறிக்கிறதென்று அறிவதற்கில்லை. இங்குக் காணப்படும் கி.பி. 9–ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் பகவதி அம்மனைப் பற்றிய குறிப்புகளில்லை. அதற்கு மாறாக பட்டாரியார் என்னும் தெய்வத்தைப் பற்றியும், அதற்குச் சமண சமய குரத்தியர் அணிகலன்கள் வழங்கிய செய்திகளும் உள்ளன. எனவே இது சமண சமய யக்ஷியின் கருவறையாக இருந்திருக்க வேண்டும். கி.பி.1250–ம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் தான் இத்தெய்வம் பகவதியம்மன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நடுவிலுள்ள இக்கருவறை முன்பு சமண சமய யக்ஷியின் கருவறையாகத் திகழ்ந்து, கி.பி.13–ம் நூற்றாண்டில் பகவதியம்மன் கோயிலாக மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயம் இல்லை.

சமய மாற்றம் செய்யப்பட்டமைக்கு கல்வெட்டுகளைப் போன்று சில இந்து சமயக் கோயில்களில் காணப்படும் சமண சமய சிற்பங்களும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## பள்ளிச் சந்தம்

சமணசமயக் கோயில்களுக்குத் தானமாக விடப்பட்ட நிலங்கள் பள்ளிச் சந்தம் எனப்பெயர் பெறும். இவ்வாறு தானமாக விடப்பட்ட நிலங்களைப் பற்றி ஏராளமான கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. சமணசமயக் கோயில்கள் அழிந்தபின்னரும், அக்கோயில்களுக்குத் தானமாக விடப்பட்ட நிலங்களைப் பற்றிய செய்திகள் வேறு இடங்களிலும், இந்துக் கோயில்களிலும் உள்ள சில கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகின்றன.

சைதாப்பேட்டையைச் சார்ந்த மாங்காட்டிலுள்ள காமாட்சி கோயில் கல்வெட்டொன்றில் பள்ளிச்சந்த நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது.[10] இப்பகுதியில் தற்போது சமணக் கோயில் எதுவும் இல்லை எனினும் முன்பு இங்கிருந்த அல்லது வேறொரு பகுதியில் இருந்த சமணக் கோயிலுக்குப் பள்ளிச் சந்த நிலம் தானமாக விடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

தென்னர்க்காடு மாவட்டத்தில் திட்டைக் குடியிலுள்ள வைத்திய நாதசுவாமி கோயில் கல்வெட்டொன்றிலிருந்து, மகதை மண்டலத்து தென்கரைத் தொழுவூர்ப்பற்றில் பள்ளிச் சந்த நிலங்கள் இருந்தனவென்று அறிய வருகிறோம்.[11]

திருக்கோயிலூர் சிவன் கோயிலில் காணப்படும் கல்வெட்டில் பள்ளிச் சந்தமாகிய இயக்கிபட்டி என்று குறிக்கப்பட்டுள்ளது.[12] இங்குக் கூறப்பட்டுள்ள **இயக்கிபட்டி** என்பது சமணசமய யக்ஷிக்குத் தானமாக விடப்பட்ட பள்ளிச் சந்த நிலமாக இருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.[13]

இவை போன்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள இந்து சமயக் கோயில்களில் இடம் பெற்றுள்ள பல கல்வெட்டுகளில் பள்ளிச் சந்த நிலங்கள் எந்தெந்தப் பகுதிகளில் இருந்தனவென்று உறுதியாகக் கூற இயலவில்லை எனினும், அவை சமணக் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இவ்வாறு சமணக் கோயில்களும், பிற சமணசமயச் சான்றுகளும் தற்போது இல்லாத இடங்களிலிருந்தும் கூட பள்ளிச் சந்த நிலங்களைப் பற்றிய செய்திகளை ஓரளவு அறிய கல்வெட்டுகள் மிகவும் உதவியாக உள்ளன.

## பிற தானங்கள்

பண்டைத் தமிழ் மன்னர்களும், மக்களும் சமணசமயக் கோயில்களுக்கு நிலங்கள் மட்டுமின்றி, கோயிலில் இனிது வழிபாடு நடைபெற சில தானங்களைச் செய்துள்ளதையும் கல்வெட்டுகள் கூறுகின்றன. பொன்மாளிகைத் துஞ்சிய சோழனின் மகளாகிய **குந்தவைப் பிராட்டியார்** சமணக் கோயில்கள் பல கட்டி, பொன், வெள்ளிப்பாத்திரங்கள், முத்துக்கள் முதலியனவற்றை வழங்கியுள்ளார்.[14]
புதுக்கோட்டையைச் சார்ந்த நார்த்தாமலையிலுள்ள சமண தெய்வங்களாகிய **திருமலைப்பள்ளி** உடையார்க்கும், திருமலைப் பள்ளி நாயகர்க்கும் சில நிலங்களும் வழிபாட்டுச் செலவிற்காகத் தறியிறை, செக்கிறைப்பாட்டம், இடையர்வரி, பொன்வரி, முதலிய சில வரிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.[15]

நாகர்கோயிலிலுள்ள சமணக் கோயிலுக்கு உதயமார்த் தாண்டவர்மன் என்னும் மன்னன் முளையனூர் பற்றில் 20 மாநிலம் கொடுத்து, அதிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு கோயிலில் இரவிலும், பகலிலும் விளக்கெரிப்பதற்கு வேண்டிய எண்ணெய், வழிபாட்டிற்குரிய கற்பூரம், பூ, பன்னீர், மாலை, துணிகள் முதலியன வாங்க ஏற்பாடு செய்துள்ளார்.[16] மேலும் இக்கோயிலில் நாகராசருக்குத் தினமும் மூன்று வேளை வழிபாடு நடத்த மூன்று நாழி நெல்லும், ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டிற்கென்று இரண்டு பதக்கு நெல்லும் கொடுக்கப்பட்டுள்ளது.[17]

திருச்சாரணத்து (சிதரால்) மலையிலுள்ள கோயிலில் நந்தா விளக்கெரிப்பதற்காக **முத்துவாள நாராயணக்குரத்தி** என்பவர் பணம் கொடுத்துள்ளார்.[18] **குணந்தாங்கி குரத்தி** என்னும் பெண் துறவியும் இக்கோயிலிலுள்ள பட்டாரியாருக்குப் பொன்னால் செய்யப்பட்ட பூ ஒன்றினையும் சில அணிகலன்களையும் வழங்கியுள்ளார்.[19]

மேற்குறிப்பிட்டுள்ள செய்திகள் மட்டுமின்றி இன்னும் பல்வேறு சமணக் கோயில்களுக்கு மன்னரும், மக்களும் ஏராளமான தானங்கள் வழங்கியமையை வேறு பல கல்வெட்டுகள் கூறுகின்றன.

## சமண சமயப் பெரியோர்கள்

முன்பு வாழ்ந்த சமணசமயத் துறவிகளையும், பெரியோர்களையும் பற்றி அறிவதற்கும் கல்வெட்டுகள் துணைபுரிகின்றன. பொதுவாகத் தமிழகத்தில் **கழுகுமலையிலுள்ள கல்வெட்டுகளில் தான் ஏராளமான சமணப் பெரியோர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்**. இங்குக் காணப்படும் கல்வெட்டுகளிலிருந்து **குணசாகரபடாரர், சாத்தன்தேவன், புரயன்சேந்தன், புட்பநந்தி, வர்த்தமானப் பெருமாணாக்கர், உத்தநந்திக்குரவடிகள், சாந்திசேனர், பலதேவக் குரவடிகள், கனகவீர அடிகள், மாறன்புல்லி, சேந்தன்வேளான், காமஞ்சிறுநம்பி, சாத்தன் கண்ணன், படிக்கமணபடாரர், திருமலைமௌனிபடாரர், தயாபாலப் பெரியார், தேவஞ்சாத்தன், சேந்தங்காரி, பெருநந்தி, அரிட்டநேமி படாரர், குணநந்தி,** முதலிய பல பெரியோர்களைப் பற்றி அறிய முடிகிறது.[20]

இதுபோன்று மதுரை மாவட்டத்தில் **சமணர் மலையிலுள்ள கல்வெட்டுகளில் அஷ்ட உபவாசிபடாரர், குணசேனதேவர், கனகவீரப் பெரியடிகள், மகாநந்திப் பெரியார், கனகநந்திப் படாரர், அபிநந்தபடாரர், அரிமண்டலபடாரர், குணசேன தேவர், தெய்வப் பலதேவன், அச்சணந்தி, ஸ்ரீபாலன்** முதலியோர் குறிப்பிடப் பட்டுள்ளனர். மேலும் திருச்சாரணத்துக் கல்வெட்டுகளில் முத்துவாளநாராயணக்குரத்தி, குணந்தாங்கிக் குரத்தி, என்னும் பெண் துறவிகளும் சமணர் மலைக் கல்வெட்டிலிருந்து **குணமதியார்** என்பவரும் கழுகுமலைக் கல்வெட்டிலிருந்து மிழலூர்க்குரத்தி, திருச்சாரணக்குரத்தி ஆகிய பெண் துறவிகளும் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மட்டுமின்றி இன்னும் பல்வேறு கல்வெட்டுகளிலிருந்தும் சமணசமயத் துறவிகளைப் பற்றி அறிய முடிகிறது.

## சிற்பங்கள், படிமங்கள் அமைத்தமை

சில சமணக் கல்வெட்டுகளில் சமண சமயச் சிற்பங்கள், படிமங்கள் முதலியனவற்றை நிறுவியமை பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன. கழுகுமலையிலும், திருச்சாரணத்து மலையிலும்

சமணத் திருவுருவங்கள் செதுக்கியதையும் அவற்றைச் செதுக்க ஏற்பாடு செய்தவர்களது பெயர்களையும் காணலாம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் பஞ்ச பாண்டவமலையிலுள்ள மூன்றாம் நந்திவர்மனது கல்வெட்டிலிருந்து புகழாலைமங்கலத்தைச் சார்ந்த நாரணன் என்பவர் **பொன் இயக்கி**யாரது சிற்பத்தையும், **நாகநந்தி** என்பவரது திருவுருவத்தையும் எடுப்பித் தருளியதை அறிய வருகிறோம். இது போன்று **திருமலை**க் குடைவரையில் **அரிட்டநேமி ஆச்சாரியார்** யக்ஷி சிற்பம் ஒன்றை நிறுவியுள்ளார்.

பொன்னூர் ஆதிநாதர் கோயிலில் பார்சுவநாதர், சுவாலாமாலினியம்மன் ஆகியோரது உலோகத் திருவுருவங்கள் அமைக்கப்பட்டனவென்றும், ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டின்போது இத் திருவுருவங்கள் பொன்னூரிலிருந்து, நீலகிரிக் குன்றிற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டனவென்றும் இங்குள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[27] குந்தவைசினாலயத்திலுள்ள கல்வெட்டொன்றிலிருந்து அருகதேவனது சிற்பம் அமைக்கப்பட்ட செய்தியினை அறியகிடக்கிறோம். மேற்கூறிய செய்திகளிலிருந்து சமண சமய சிற்பங்கள், படிமங்கள் அமைக்கப்பட்ட செய்திகளை கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகிறது.

## காழ்ப்புணர்வு

சமண சமயத்தவர் மீது இந்து சமயத்தினர் கொண்டிருந்த காழ்ப்புணர்வினை **தேவாரம், திவ்வியபிரபந்தம், பெரிய புராணம்** முதலிய நூல்கள் மட்டுமின்றி திருவண்ணாமலைக் கல்வெட்டொன்றிலிருந்தும் அறியலாம். மூன்றாம் குலோத்துங்கன் கால இக்கல்வெட்டில், திருவண்ணாமலைக் கோயிலுக்குச் சேரவேண்டிய வரிப்பணத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் சிவ துரோகிகள் என்றும், மாட்டிறைச்சி உண்ணுபவர்கள் என்றும், சமணர்களது குண்டிகயைினைச் (கமண்டலம்) சுமப்பவர்கள் என்றும் கருதப்படுவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு சமணர்களது குண்டிகையினைச் சுமப்பவர்கள் என்று இழிவாகக் கூறப்பட்டிருப்பது, இந்து சமயத்தவர்கள், சமணசமயத்தவர் மீது கொண்டிருந்த காழ்ப்புணர்வின் பிரதிபலிப்பேயாகும்.

## சமய உட்பூசல்

வட ஆற்காடு மாவட்டத்தில் **வேடல்** என்னும் ஊரிலுள்ள பாறை ஒன்றில் காணப்படும் முதலாவது ஆதித்த சோழன் காலக்கல்வெட்டில் சமணசமயப் பெண் துறவியருக்குள் ஏற்பட்ட சச்சரவு குறிப்பிடப்பட்டுள்ளது. வேடலிலுள்ள **மாதேவி ஆரந்திமங்கலம்** என்னும் சமண மடத்திலிருந்த **400** பெண் தவசியர்களுக்கும், கனக வீரகுரத்தி என்பவரது சிஷ்யைகளாகிய **500** பேருக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது எனவும், கனகவீர குரத்தியார் குணகீர்த்திபடாரகரின் மகளாகவும், சிஷ்யையாகவும் இருந்தமையால் வழுவிலார் என்பவர்கள் (குணகீர்த்தியாரின் சீடர்கள் என்று கருதப்படுகிறது) கனகவீரகுரத்தியாரின் சிஷ்யைகளைக் கண்காணித்துக் காத்து வந்தனரென்றும் கல்வெட்டு கூறுகிறது. ஆனால் இக்கல்வெட்டிலிருந்து எதனால் இரு தரத்தாருக்குமிடையே பூசல் ஏற்பட்டது என்பது பற்றியும், எவ்வாறு அது தீர்த்து வைக்கப்பட்டது என்பது பற்றியும் அறிவதற்கியலவில்லை.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து சமண சமயக் கல்வெட்டுகளின் வாயிலாக சமணசமயம் பரவியமுறை, சிதைந்துபோன பள்ளிகள், சமய மாற்றம் செய்யப்பட்ட கோயில்கள், சிற்பங்கள் நிறுவியமை, காழ்ப்புணர்வு போன்ற பல செய்திகளை அறிகிறோம். மேலும் சமணசமயத்தவர் தமிழகத்திற்குச் செய்த தொண்டு, அவர்களது வழிபாட்டு முறை, அரசர்கள் சமணசமயத்தை ஆதரித்தமை போன்ற பிற செய்திகளையும் வேறுபல கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துவனவாக உள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. டாக்டர் ஆர். சம்பகலக்குமி " சமணம்" ஆய்வுத்தேன், பக். 24.
2. ARE. 22/1934-35.
3. ARE. 448/1937-38.
4. ARE 32/1937/38.
5. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 133.
6. S.I.I. Vol.4, 443.

7. ARE. 392/1907.
8. ARE. 53/1900.
9. ARE. 59, 63/1896.
10. ARE. 358/1908.
11. S. I. I. Vol. VIII. No. 279.
12. Ibid. No. 889.
13. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக், 124,.
14.ARE. 8/1919.
15.Pudukkottai Ins: No. 658.
16.T.A.S. Vol.IV. No. 115.
17. Ibid. No. 116.
18. Ibid. No. 40.
19. T.A.S. Vol.I. pp.193-194.
20. S.I.I. Vol.5, pp.121-134.
21. ARE. 61,62,63/1910 and 330. 331.332/1908.
22. T.A.S. Vol. IV. No.40: Vol.I-p193.
23. ARE. 64/1910.
24. S.I.I. Vol. V.
25. Epi. Ind; Vol.IV. p-137.
26. S.I.I. Vol. I. No.73.
27. ARE. 416/1929.
28. S.I.I. Vol.III. No. 98.
29. ARE. 559/1902.
30. ARE. 84/1908 and S. I. I. Vol. 3, No.92-p- 225 - 226.

# 2. கல்வெட்டுப் பாடல்கள்

தமிழகத்தில் வாழ்ந்த சமண சமயச் சான்றோர்கள் பலர் தமிழ்த் தாய்க்கு எண்ணற்ற இலக்கிய, இலக்கண நூல்களைப் படைத்துச் சூட்டியுள்ளனர். காலச் சுழலின் கடுமையினால் அவற்றுள் சில நமக்குக் கிடைக்கப் பெறாவிடினும், தற்போது எஞ்சியுள்ளவை அக்காலச் சமண அறவோர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையினை நன்குணர்த்துவனவாகத் திகழ்கின்றன. இலக்கிய, இலக்கண நூற்கள் மட்டுமின்றி, சில சமணக் கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளும் இனிய தமிழ்ப் பாடல்களாகத் திகழ்கின்றன. இவை இலக்கியச் சுவையோடு மட்டுமின்றி, வரலாற்றுச் செய்திகளையும் கொண்டு விளங்குகின்றன. தமிழகச் சமண சமயக் கோயில்களில் பொறிக்கப்பட்டுள்ள சில கல்வெட்டுப் பாடல்களைப் பற்றிய செய்தியினை ஈண்டு காண்போம்,

## சித்தன்னவாசல்

புதுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள சித்தன்னவாசலில் தொன்மை மிக்க சமணசமயக் குடைவரை உள்ளது. இக்குடைவரை கோயில், கி,பி, 9–ம் நூற்றாண்டில் அரசுபுரிந்த அவனிபசேகரன் ஸ்ரீவல்லபன் என்னும் பாண்டியமன்னனது காலத்தில், மதுரை மாநகரைச் சார்ந்த **இளங்கௌதமன்** என்பவரால் புதுப்பிக்கப்பட்டது, இச் செய்தியினை,

*திருத்திய பெரும்புகழ் தேவ தரிசனத்து*
*அருந்தவ முனிவனைப் பொருட் செல்வன்*
*அறன்கிளர் நிலைமை இளங்கௌத மன்எனும்*
*வளங்கெழு திருநகர் மதுரை ஆசிரியன்*
*அவனிபசே கரசீர்கெழு செங்கோல் சிரீ வல்லபன்*

எனும் கல்வெட்டுப் பாடல் இனிது உணர்த்துகிறது.[1] அருந்தவ முனிவனாகிய அருகக் கடவுளுக்கு கிபி. 9–ம் நூற்றாண்டிற்கு முன்னரே

இங்குக்கோயில் இருந்தமையும், அது பழுதடைந்தமையும் இப்பாடல் மறைமுகமாக உணர்த்துகிறது. பதினேழு வரிகளைக் கொண்ட இச்செய்யுளின் பிற வரிகள் சற்று சிதைந்து காணப்படுகின்றன. சிதைந்துள்ள பகுதியில் கோயிலில் பூசை செய்து வந்தவருக்கு நிலம் அளித்த செய்தி காணப்படுகின்றது.

## திருமலை

வட ஆற்காடு மாவட்டத்தில் திருமலையிலுள்ள சமணசமயக் கோயிலாகிய **குந்தவை சினாலயம்** சோழர் காலத்திலிருந்து சீரும் சிறப்புமுற்று விளங்கியது. இங்குள்ள பல கல்வெட்டுகளில் இக் கோயிலுக்கு நிலம் வழங்கியமை, நந்தா விளக்குகள் எரிக்க ஏற்பாடு செய்தமை, சிற்பங்கள் அமைத்தமை முதலிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும் இங்குள்ள முதலாம் இராசராச சோழன் காலக் கல்வெட்டொன்று அரிய பாடலாக அமைந்துள்ளதைக் காணலாம்.

*அலைபுரியும் புனற்பொன்னி ஆறுடைய சோழன்*
*அருண்மொழிக்கு யாண்டிருபத் தொன்றாவ தென்றும்*
*கலைபுரியுமதி நிபுணன் வெண்கிழான் கணிசே*
*கரமருபொற் சூரியன்நன் திருநாமத் தால்வாய்*
*நிலைநிற்கும் கலிங்கிட்டு நிமிர்வைகை மலைக்கு*
*நீடுழி இருமருங்கும் நெல்விளையக் கொண்டான்*
*கொலைபுரியும் படையரசர் கொண்டாடும் பாதன்*
***குணவீர மாமுனிவன்*** *குளிர்வைகைக் கோவே*

இப்பாடல் அருண்மொழி என்னும் இயற்பெயருடைய முதலாம் இராசராசனது 21-வது ஆட்சியாண்டில் (கி.பி.1006) பொறிக்கப்பட்டதாகும். **கணிசேகரமரு பொற்சூரியன்** என்பான் தனது பெயரால் கலிங்கு ஒன்று கட்டி வைகை மலையின் இருமருங்கிலும் உள்ள கழனிகள் செழிக்குமாறு செய்துள்ளான். இப்பாடலில் வைகைமலை என்று குறிப்பிட்டுள்ளது, திருமலையையாதலால், இம்மலைக்கு **வைகைமலை** என்னும் பெயர் இருந்தமை அறியற்பாலதாகும்.

## கரந்தை

வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு தாலுக்காவைச் சார்ந்த **கரந்தை** என்னும் ஊரில் குந்துதீர்த்தங்கரர் கோயில் உள்ளது. இவ்வூருக்குத் **திருப்பறம்பூர்** என்னும் மற்றொரு பெயரும் உண்டு. இங்குள்ள கோயிலின் கோபுர வாயிலில் நான்கு அடிகளான தமிழ்ப்பா ஒன்று காணப்படுகிறது.

*காவுவயல் சூழ்தடமும் கனத்தமணிக் கோபுரமும்*
*பாவையர்கள் ஆடல்களும் பரம முனிவாசமுடன்*
*மேவுபுகழ்த் திருப்பறம்பை விண்ணவர்கள் போற்றிச்செய்யத்*
*தேவரிறைவன் கமலச் சேவடியைத் தொழுவோமே.*[3]

பசுமையான மரக்காவும், வயல்களும் சூழ்ந்து காணப்படும் பகுதியையும், ஒலித்தலையுடைய மணியினைக் கொண்ட கோபுர வாயிலையும், பாவையரது ஆடல் பாடல்களையும் சிறந்த முனிவர்கள் தங்கியிருத்தலையும் உடைய புகழ் மிக்க ஊராகிய திருப்பறம்பையில் குடிகொண்டிருக்கும் அருகக்கடவுளது செங்கமலச்சேவடிகளை வாழ்த்திவணங்குவோம் என்பது இதன் பொருளாகும். இப்பாடலிலிருந்து திருப்பனம்பூர் என்னும் இவ்வூர் திருப்பறம்மை எனவும் பெயர் பெற்றிருந்தமை தெரியவருகிறது.

மேலும் இக்கோயிலில் கோபுரத்தின் உட்சுவரில் வடபுறம் மூன்று பாடல்களும், இடதுபுறம் ஒரு பாடலும் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் பல்லவர் வழித்தோன்றிய அரசனாகிய தெள்ளாறெறிந்த நந்திவர்மனது பெருமையினைப் பற்றிக் கூறுகின்றன. இவற்றில் இம்மன்னன் வளவர்கோனை (சோழனை) வெற்றிவாகை சூடியமையும், இவன் திரிபுவனத்து ராஜாக்கள் என்ற பட்டப்பெயர் கொண்டிருந்தமையையும் கூறப்பட்டுள்ளன.[4]

மேலும் இக்கோபுர வாயிலின் நிலையிலும் (door jam) மூன்று பாடல்கள் உள்ளன. இப்பாடல்கள் மூன்றும் **கோப்பெருஞ்சிங்கன்** என்னும் பல்லவ சிற்றரசனது வலிமை, பெருமை முதலியவற்றைப் பற்றியவையாகும்.[5]

## திருநறுங்கொண்டை

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திருநறுங்கொண்டை வரலாற்றுச் சிறப்புமிக்க சமண சமய தலமாகும். இங்குள்ள **அப்பாண்டைநாதர் கோயில்** சோழர் காலத்திலிருந்து இன்றளவும் வழிபாட்டிலிருந்து வருகிறது. இக்கோயிலில் சில கல்வெட்டுப் பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்றினைத் தவிர எஞ்சியவை அனைத்தும் முழுமையாக உள்ளன. மொத்தமுள்ள **நான்கு பாடல்களுள் இரண்டு வெண்பாக்களும், இரண்டு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களுமாகும்**. கோயிலுக்கு அடுத்துள்ள ஏரியின் மதகினில் பொறிக்கப்பட்டுள்ள வெண்பா பாடல் கிபி. 10–ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். அப்பாடல் பின்வருமாறு.

*மாட மதிளாறை மன்னுபுகழ்ப் பெருமா*
*ணீடு நறுங்கொண்டை நெல்விளையப் பீடார்ந்த*
*காருக்கு நேராகு மண்கையன் கார்கடல்போ*
*லேரிக்குத் தூம்பமைத்தான் இன்று.*[6]

மாடமதில்கள் நிறைந்த ஆறை (ஆற்றூர்) என்னும் ஊரைச் சார்ந்த பெருமாள் என்பவர் பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்து நல்ல நெல் விளைதற்பொருட்டு, கடலைப்போன்ற ஏரியிலிருந்து தண்ணீர் பாய்வதற்காகத் தூம்பு (மதகு) ஒன்றினைக் கட்டியுள்ளமை கூறப்பட்டுள்ளது. கல்வெட்டு காணப்படும் மதகினையே இவர் கட்டியிருத்தல் வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் கோயிலின் தென்புறம் உள்ள ஏரியினைத் தான் பாடல் குறிப்பிடுகிறது. ஏனெனில் இப்பாடல் காணப்படும் மதகு இந்த ஏரியின் ஒரு பகுதியிலுள்ளது. இவ்வேரி சோழ மன்னன் இராசராசனது தமக்கையாராகிய குந்தவை பிராட்டியாரால் தோற்றுவிக்கப்பட்டதால் "**குந்தவைப் பேரேரி**" என இங்குள்ள பிற கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.[7] இந்த ஏரி மிகுந்த பரப்பளவினைக் கொண்டதாக இருந்தமையால் பேரேரி எனவும், கார்கடல்போலப் பரந்த ஏரி எனவும் விவரிக்கப்பட்டுள்ளது.

அப்பாண்டைநாதர் கோயிலின் அருகிலுள்ள பேரேரிக்கருகில் மற்றொரு கல்வெட்டுப் பாடலும் காணப்படுகிறது. இக்கல்வெட்டிலுள்ள எழுத்துக்களின் வரிவடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு இது கி.பி. 13–ம் நூற்றாண்டைச் சார்ந்ததெனக் கூறப்படுகிறது.

*வீரன் திருவறம் பேணுமெய்*
*வீர சங்கத்தவரே*
*சேருங் கனகச் சினகிரி*
*யப்பர்க்குத் தெய்வமணங்*
*காலுந் தெரியற் குலோத்துங்க*
*சோழன் கொடுத்தநல்லூர்*
*சேலாரும் பழனஞ் செறு*
*சந்தைத் தடம்பதியே.*[8]

திருநறுங்கொண்டையில் குடியிருக்கும் சினகிரிதேவர் எனப்பெயர் பெறும் அப்பாண்டைநாதர் கோயிலுக்கு குலோத்துங்க சோழன், நல்லூர் என்னும் ஊரினைத் தானமாக அளித்துள்ளான், மேலும் இப்பாடலில் அறவீரனாகிய அருகதேவனது திருவறத்தைப் பேணும் வீரசங்கத்தவர், திருநறுங் கொண்டையில் இருந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது. இத்தலத்தில் **வீரசங்கத்தை குணபத்திரமுனிவர் ஏற்படுத்தி சமய, இலக்கியத் தொண்டுகள் ஆற்றினார்** என்பது வரலாறு கூறும் உண்மையாகும். இம்முனிவரைப் பற்றியும், அவரது சீடராகிய வீரமண்டல புருடரைப் பற்றியும் **அப்பாண்டைநாதர் உலா** திறம்பட எடுத்தியம்புகிறது.[9]

இக்கோயிலின் முன்பகுதியிலுள்ள மண்டபத்தின் கிழக்குச் சுவரிலுள்ள வாயிலின் இடதுபுறம் மற்றொரு பாடல் பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டின் சிலபகுதிகள் மறைக்கப் பட்டுள்ளமையால் பாடலை முழுமையாக அறிவதற்கியலவில்லை. எஞ்சியுள்ள அடிகளில் கருமம், தவம், செயல் முதலியன பற்றிய செய்திகள் உள்ளன. இக்கல்வெட்டும் கி.பி 13–ம் நூற்றாண்டு கால வரையறைக் குட்பட்டதென அறிஞர்கள் கருதுகின்றனர்.[10]

இங்குள்ள மற்றொரு வெண்பா பாடல் குணபத்திர முனிவரது சிறப்பினைக் கூறுவதாகும். கோபுர வாயிலின் முதல் தளத்தில் காணப்படும் இப்பாடல் கி. பி. 16–ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும்.

*வண்டமிழின் பண்பும் வடநூலும் நன்குணர்ந்து*
*தெண்டிரை சூழ்மண்மீது சீர்பெற்றான்-கொண்டைமலை*
*வித்தகன ருட்கடல் மிகுந்த புகழ் வெற்பிலிசை*
*வைத்த குணபத்திர முனிவன்*[11]

திருநறுங்கொண்டைத் தலத்தில் வீரசங்கத்தை ஏற்படுத்தியவர் குணபத்திர முனிவர் என்பது முன்பே கூறப்பட்டுள்ளது. இவ்வறமுனிவர் வண்டமிழிலும், வடமொழியிலும் நன்கு பயிற்சி பெற்றவர். இவரே சூடாமணி நிகண்டின் ஆசிரியரான **வீரமண்டலபுருடரின் குருவாகும்**. இத்தகைய சிறப்புடைய குணபத்திர முனிவர் கொண்டைமலை அப்பாண்டைநாதரின் அருளால் தமிழ் மொழியறிவிலும் நிறைந்தவராய் புகழுடன் விளங்கினார். இப்பாடல் திருநறுங்கொண்டை மலையினைக் **கொண்டைமலை** எனப் குறிப்பிடுகிறது.

## பூண்டி

வட ஆற்காடு மாவட்டத்தில் ஆரணிக்குச் செல்லும் வழியிலுள்ள பூண்டி என்னும் ஊரில் பொன்னிவனநாதர் எனும் சமணக்கோயில் உள்ளது. இக்கோயிலின் வரலாற்றை இங்குக் காணப்படும் ஆசிரியப்பாவினால் அமைந்த கல்வெட்டொன்றினால் அறியவருகிறோம். இவ்வூரைச் சார்ந்த **பொன்னிவனநாதர்** என்னும் சமணசமய அறவோர் **வீரவீரன்** என்னும் மன்னனைச் சிறப்புச் செய்தமையால், அதனால் மனமகிழ்ந்த மன்னன் அவரது விருப்பத்தினைத் தெரிவிக்குமாறு வேண்டினான். அதற்கு முனிவர் இவ்வூரில் சமணக் கோயில் ஒன்று கட்டுமாறு வேண்டி மன்னனும் அதற்கிசைந்து கோயிலைக்கட்டி, அதற்கு இறையிலியாகச் சில ஊர்களை வழங்கினான் என்னும் செய்தி பாடலில் இடம் பெற்றுள்ளது. இக் கல்வெட்டில் இவ்வூர் செயங்கொண்ட சோழ மண்டலத்தில்,

பல்குன்றக் கோட்டத்தின் ஒரு பிரிவாகிய **மேயூர்** நாட்டைச் சார்ந்தது என்று கூறப்பட்டுள்ளது.[12] கோயிலை உருவாக்க மூலகாரணமாக இருந்த முனிவரது பெயராலேயே இக்கோயில் **பொன்னிவனநாதர் கோயில்** என அழைக்கப்பெறலாயிற்று.

## இடையாலம்

தென் ஆற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலூக்காவைச் சார்ந்த இடையாலம் என்னும் ஊரில் **சித்தர்பாறை** என அழைக்கப்படும் பாறை ஒன்றில் வாமனாச்சாரியாரின் திருவடியினைச் சுற்றிலும் மல்லிசேனமுனீஸ்வரராகிய வாமனாச்சாரியாரை வாழ்த்தி வணக்கம் செலுத்தும் பாடல் ஒன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டுப்பாடல் பிற்காலத்தைச் சார்ந்ததெனக் கூறப்படுகிறது.[13]

## ஏறுவாடி

ஏறுவாடியிலுள்ள இரட்டைப் பொத்தையில் காணப்படும் கல்வெட்டு திருவிருத்தலை அருவாளத்துப் பட்டாரருக்குத் தானம் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டின் இறுதிப் பகுதியில் சாசனச் செய்யுள் ஒன்று உள்ளது. நான்கு வரிகளாலான இப்பாடலின் சில பகுதிகள் சிதைந்துள்ளபடியால் பாடல் முழுமையாகக் கிடைக்கவில்லை.

*அந்நமில் பல்குணத்தாதி அருகனெந்த மிடர் தீர்க்கு.....*
*நேராத முன்னே திருத்தலை தொழுமின் சென்று*
*வந்தண்மலர்... தொழுமின்*
*தேவர் செந்தின மலி பொழிற்சோலை திகழ்வான*
*தடவுயுளிவந்து மணியன்றோ*
*மனத்துள் நினைப்பினென்றோ மலருண்ட மகரந்தம்....* [14]

இப்பாடல் **திருவிருத்தலை** சமணக் கடவுளை வாழ்த்தும் பாடலாக உள்ளது. ஆதி அந்தமில்லாத அருகதேவன் மானிடர்க்கு ஏற்படும் இடர்களைத் தீர்க்க வல்லவனாவான். சிறந்த பொழில் சூழ்ந்த பகுதியின்கண் காணப்படும் திருவிருத்தலை தேவனை மனத்துள் நினைத்து வணங்கினால் துயர்களைத் தீர்ப்பான் என்பதாகும்.

## பாடல்கள் அறிவுறுத்துபவை

***இலக்கிய அறிவு :*** சமண சமயத்தவர் ஏராளமான தமிழ் இலக்கண, இலக்கியங்களை உருவாக்கியுள்ளனர். இன்று நமக்குக் கிடைத்துள்ள அரிய தமிழிலக்கியங்களுள் ஒரு பகுதி சமணசமயத்தவர்களின் படைப்பாகும். அவர்களது தமிழறிவிற்கு இலக்கண, இலக்கியங்கள் மட்டுமின்றி மேற்கூறப்பட்ட கல்வெட்டுப் பாடல்களும் சான்றுகளாகத் திகழ்கின்றன. சமண இலக்கியங்களும், இலக்கண நூற்களும் காலப்போக்கினால் முற்றிலும் ஒருவேளை அழிக்கப்பட்டிருந்தால்கூட, இக்கல்வெட்டுக்கள் அவர்களது தமிழிலக்கிய அறிவினைப் பறைசாற்றுவனவாகத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

***வரலாற்றுச் செய்திகள் :*** கல்வெட்டுப் பாடல்கள் இலக்கிய நயம் கொண்டதோடு மட்டுமின்றி, வரலாற்று உண்மைகளைக் கொண்டவையாகத் திகழ்கின்றன. சித்தன்னவாசல் குடைவரையையும், அதிலுள்ள ஓவியங்களையும் பல்லவர் காலத்தைச் சார்ந்ததென அறிஞர்கள் முன்பு கருதினர். ஆனால் இங்குக் காணப்படும் கல்வெட்டுப் பாடல், இக்குடைவரை பாண்டியர் காலத்தில் மதுரை ஆசிரியனால் புதுப்பிப்பட்டதென்று கூறுவதிலிருந்து, இக்குடைவரையும், ஓவியங்களும் பல்லவர் காலத்தைச் சார்ந்தவையல்ல என்னும் வரலாற்று உண்மையினைத் தெளிவுபடுத்துகிறது. மேலும் பிற கல்வெட்டுப் பாடல்கள் ஸ்ரீவல்லப பாண்டியன், பல்லவ அரசர்களாகிய தெள்ளாளறெறித்த நந்திவர்மன், கோப்பெருங்சிங்கன், சோழ அரசர்களாகிய இராசராசன், குலோத்துங்கன் முதலி ய அரசர்களைப் பற்றிய செய்திகளையும் கொண்டு விளங்குகின்றன.

***சமணப் பெரியோர் :*** தமிழகத்தில் வாழ்ந்த ஏராளமான சமணசமயப் பெரியோர்களது பெயர்கள் கழுகுமலை, திருச்சாரணத்துமலை, சமணர்மலை முதலிய பல்வேறு மலைகளிலுள்ள கல்வெட்டுகளிலும், கட்டடக் கோயில்களிலுள்ள கல்வெட்டுகளிலும் இடம்பெற்றுள்ளன. இவர்கள் ஆற்றிய தொண்டுகளும், வழங்கிய தானங்களும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. இது போன்றே

கல்வெட்டுப் பாடல்களும் சமண சமய முனிவர்களது பெயர்களையும், அவர்கள் ஆற்றிய அருஞ்செயல்களையும் கூறுகின்றன. சித்தன்னவாசல் கல்வெட்டில் மதுரை ஆசிரியன் இளங்கௌதமனும், அவர் கோயிலைப் புதுப்பித்தமையும், தருநறுங்கொண்டைக் கல்வெட்டில் வீரசங்கம் அமைத்த குணபத்திர முனிவர் பெயரும், பூண்டியிலுள்ள பாடலில் பொன்னிவனநாதர் என்னும் முனிவரையும், அவர் சமணக் கோயில் நிறுவக் காரணமாக இருந்தமையும், இடையாலம் கல்வெட்டில் வாமனாச்சாரியார் பற்றியசெய்திகளும் காணப்படுகின்றன.

***சமுதாயத் தொண்டு :*** சமண சமயச் சான்றோர் தமிழ் சமுதாய வளர்ச்சிக்குப் புரிந்த தொண்டுகள் ஏராளமாகும். குறிப்பாக கல்வி, மருத்துவம், வாணிபம் முதலியன நிறைவுபெற அரும்பணி மேற்கொண்டனர். இவைபோன்று இயற்கையன்னையை நம்பிவாழும் ஏருழவர்கள் நலம்பெறவும் தொண்டாற்றியுள்ளனர். திருமலையில் கணிசேகர மருபொற்சூரியன் என்பவர் கலிங்கு ஒன்றைக் கட்டியுள்ளதையும் திருநறுங்கொண்டையில் ஆற்றூரைச் சார்ந்த பெருமாள் என்பவர் பயிர் செழித்து அதிக விளைச்சல் கொடுக்க குந்தவைப்பேரேரியில் மதகு ஒன்றினைக் கட்டியுள்ளதையும் இங்குள்ள பாடல்கள் வாயிலாக அறிய வருகிறோம். விவசாயப் பெருங்குடிமக்கள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற இவர்கள் செய்த அருஞ்செயல்கள் போற்றத்தக்கவையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. S. I. I. Vol. XIV. No. 45.
2. S. I. I. Vol. VII. No.94.
3. மயிலை சீனி,. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக்கம்– 109.
4. 140, 142/ 1939-40.
5. 143/1939-40.
6. 320/1939 - 40.
7. S. I. I. Vol. VII. No.1017.

8. 299/1939 - 40.

9. அப்பாண்டைநாதர் உலா, 82 – 85

10. 305/ 1939 -40.

11. 302/ 1939 - 40.

12. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக்கம்–110.

13. 311/1938 -39.

14. S. I. I. XIV. No,. 41.

# 3. பட்டாரகர் பட்டாரியர்

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகளில் **பட்டாரகர், பட்டாரர், பட்டாரியர் பட்டாலகர்** என்னும் சொற்கள் பரவலாகக் காணப்படுகின்றன. சமண சமயத்தில் **பட்டாரகர்** என்பது இச்சமயப் பெரியோர்களையும், தீர்த்தங்கரர்களையும் குறிக்கிறது. இதுபோன்று இச்சொல் இந்து சமயத்தில் சிவன், விஷ்ணு, முருகன் முதலிய தெய்வங்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பட்டாரியார் என்னும் சொல் இந்து சமயப்பெண் தெய்வங்களாகிய துர்க்கையையும், பகவதியையும் குறிப்பதாக உள்ளது. இச்சொற்கள் முதன்முதலில் சமண சமயத்தில் பயன்படுத்தப்பட்டு பின்னர் இந்து சமயத்தில் வழங்கப்பட்டு வந்ததென்பதைக் கல்வெட்டுகளின் வாயிலாக அறியவருகிறோம்.

## சமண சமயப் பெரியோர்

***(அ) பிராமி கல்வெட்டுகள் :*** தமிழகத்தில் மிகப் பழைமை வாய்ந்த கல்வெட்டுகள் திருச்சி, மதுரை, இராமநாதபுரம் முதலிய மாவட்டங்களிலுள்ள குகைகளிலும், குடைவரைகளிலும் காணப்படும் பிராமி கல்வெட்டுகளாகும். இவற்றில் சமண சமயப் பெரியோர்களுக்குப் "**படாரன்**" என்னும் பெயர் வழங்கியுள்ளமையைக் காணலாம்.

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த கொங்கர் புளியகுளத்திலுள்ள கல்வெட்டில் **பாகனூர் பிடான்** இதாதாவென் என்னும் சமணத் துறவியின் பெயர் காணப்படுகிறது.[1] ஈண்டு குறிப்படிடப்பட்டுள்ள "பிடான்" என்னும் சொல் தமிழில் படாரன் அல்லது பட்டாரகன் எனப் பொருள்படும். இம்மாவட்டத்தைச் சார்ந்த ஆனைமலையிலுள்ள கல்வெட்டில் எரி அத்தன்பாதன்தன் என்னும் பெயர் உள்ளது. இதுவும் எரி அத்தன் படாரகன் என்னும் சமணப்பெரியோரைக் குறிக்கிறதெனக் கருதப்படுகிறது. திருச்சி மாவட்டத்திலுள்ள புகழியூர் பிராமி

கல்வெட்டிலும் பிடான் (பட்டாரகன்) ஆந்தை என்னும் சமணப் பெரியாரின் பெயர் காணப்படுகிறது.[2]

மேற்கூறப்பட்டுள்ள பிராமி கல்வெட்டுகளனைத்தும் கி. மு. 3–ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.2–ம் நூற்றாண்டு வரையுள்ள காலவரையறைக் குட்பட்டவையாகும். இக் கல்வெட்டுகளின் அடிப்படையில் நோக்கும் போது **சமணப் பெரியோர்களுக்கு கி.மு. 3–ம் நூற்றாண்டிலேயே பட்டாரகர் என்னும் சொல் தமிழகத்தில் வழங்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.**

**(ஆ) *வட்டெழுத்துக் கல்வெட்டுகள்*** : நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த கழுகு மலையில் ஏராளமான சமணத் திருவுருவங்களும், அவற்றை உருவாக்க ஏற்பாடு செய்த பெரியோர்களது பெயர்களும் இடம் பெற்றுள்ளன. கி. பி. 8– ம் நூற்றாண்டைச் சார்ந்த இவ் வட்டெழுத்துக் கல்வெட்டுகளில் **குணசாகரப் பட்டாரர், சிறு பட்டாரர், குறண்டி தீர்த்தபட்டாரர், கனகநந்தி பட்டாரர், படிக்கமண பட்டாரர், புட்பநந்தி பட்டாரர், பட்டினி பட்டாரர், மௌனி பட்டாரர், அரட்டநேமி பட்டாரர், காடன் திருபட்டாரர்** முதலிய பெயர்கள் காணப்படுகின்றன.[3] மேலும் மதுரையைச் சார்ந்த செட்டிப்பொடவிலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டில் **அபிநாதன் பட்டாரர், அரிமண்டலப் பட்டாரர், கனகநந்தி பட்டாரர்** முதலியோரும்,[4] கீழவளவிலுள்ள கல்வெட்டில் **லோகபானு பட்டாரர்** என்னும் பெரியோரும்[5] குறிப்பிடப்பட்டுள்ளனர். இவையன்றி பல தமிழ் கல்வெட்டுகளிலும் சமண சமயப் பெரியோர்களுக்குப் பட்டாரர் என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

**(இ) *தெலுங்கு, கன்னடக் கல்வெட்டுகள்*** : தமிழகத்தில் மட்டுமின்றி ஆந்திர, கர்நாடக மாநிலங்களிலுள்ள பல கல்வெட்டுகளிலும் பட்டாரகர் என்னும் சொல் இடம் பெற்றுள்ளது. கர்நாடக மாநிலத்தைச் சார்ந்த குணசிகடகவி என்னுமிடத்திலுள்ள ஆறாம் விக்கிரமாதித்த சாளுக்கிய மன்னனது கல்வெட்டு (கி. பி. **1099) வசு நந்தி பட்டாரகர், ரவிச்சந்திரப் பட்டாரகர், சந்திர கீர்த்தி பட்டாரகர்** என்னும் சமணப் பெரியோர்களைக் குறிப்பிடுகிறது.[6] இதுபோன்றே ஆந்திர மாநிலத்தில்

கிடைக்கப்பெற்ற விசயநகர மன்னன் இரண்டாம் ஹரிஹரரது காலக் கல்வெட்டொன்றில் (கி. பி. 1395) **தர்மபூசண பட்டாரகர்** என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.[7]

## சமண சமய தெய்வங்கள் (தீர்த்தங்கரர்கள்) :

சமண சமயப் பெரியோர்களுக்கு மட்டுமின்றி இச்சமயத்திலுள்ள தெய்வங்களுக்கும் (தீர்த்தங்கரர்கள்), பட்டாரகர் என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. கழுகுமலையிலுள்ள சமண சமய தெய்வம் **திருநேச்சரத்து திருமலை மேற்பட்டாரகர்** என அழைக்கப்பட்டது.[8] நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த ஏறுவாடியிலுள்ள முதலாம் வரகுணபாண்டியனது கல்வெட்டில் (கி.பி. 810 – 811) திருவிருத்தலை அருவாளம் கோயிலிலுள்ள பட்டாரருக்கு (தீர்த்தங்கரர்) நிலம், ஆடுகள் முதலியன தானமாக வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.[9]

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த ஐவர் மலையிலுள்ள இரண்டாம் வரகுணபாண்டியனது கல்வெட்டு (கி. பி 869–70) **சாந்திவீரக் குரவர்** என்பார் **பார்சுவபடாரர்** சிலையையும், யக்ஷி சிற்பங்களையும் செப்பனிட்டதாகக் கூறுகிறது.[10] இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பார்சுவபடாரர் என்பது பார்சுவநாத தீர்த்தங்கரரையே குறிப்பதாகும். இக்கல்வெட்டுகளிலிருந்து சமண சமய தெய்வங்களையும் பட்டாரகர் என்னும் சொல்லால் குறிப்பட்டுள்ளமை அறியற்பாலதாகும்.

## சமண சமயத்தில் பட்டாரியார் :

சமண சமயத்தில் பட்டாரி, பட்டாரியார் என்னும் சொற்கள் யக்ஷிகளைக் குறிக்கின்றன. சிதரால் சமண சமயக் குடைவரைக் கோயிலிலுள்ள விக்ரமாதித்த வரகுணனது கல்வெட்டில் (கி.பி.896) குணதாங்கிக் குரத்தி என்பவர் திருச்சாரணத்து மலையிலுள்ள பட்டாரியார் என்னுத் தெய்வத்திற்கு அணிகலன்களும், பொன்னால் செய்யப்பட்ட பூவும் அளித்ததாகக் கூறப்பட்டுள்ளது.[11] இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டாரியார் திருச்சாரணத்து மலையிலுள்ள இரண்டாவது கருவறையில் காணப்படும் பத்மாவதி (அல்லது

சித்தாயிகா) யக்ஷியாக இருக்கவேண்டுமென பேராசிரியர் ஆர். சம்பகலக்குமி கருதுகின்றனர்.[12] இப்பட்டாரியார் கோயில் கி. பி. 13 ஆம் நூற்றாண்டில் பகவதியம்மன் கோயிலாக மாற்றப்பட்டது.

## இந்து சமயத்தில் பட்டாரர் :

**(அ) *சிவன்*** : இந்து சமயத் தெய்வங்களுள் முக்கியமாக சிவன், திருமால், முருகன், விநாயகர் ஆகியோருக்கும் பட்டாரர் என்னும் சொல் வழங்கப்பட்டுள்ளது. அம்பாசமுத்திரத்திலுள்ள எரிச்சாவுடையார் கோயிலில் காணப்படும் முதலாம் வரகுணனது கல்வெட்டு (கி.பி. 807) சிவபெருமானை **திருப்போத்துடைய பட்டாரர்** எனப் குறிப்பிடுகிறது.[13] இவ் விறைவனுக்கு கி.பி. 967 ஆம் ஆண்டு வரையிலும் இப்பெயரே வழங்கி வந்தமையை மற்றொரு கல்வெட்டால் அறிகிறோம்.[14] குற்றாலத்திலுள்ள சிவன் கோயிலுக்கு திருக்குற்றாலத்து பட்டாரகர் கோயில் என்னும் பெயர் இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்தில் ( கி.பி 866) இருந்தது. இவைபோன்று இன்றும் பல சிவன் கோயில்களுக்கு பட்டாரகர் கோயில் என்னும் பெயர் இருந்தமையை கி.பி. 9 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கல்வெட்டுகளால் அறிய வருகிறோம்.

**(ஆ) *திருமால்*** : ஆய் மன்னன் காலச் (கி.பி. 866) செப்புப் பட்டயமொன்றில், இம் மன்னன் குமரி மாவட்டத்திலுள்ள பார்வதி சேகரபுரத்தில் (பார்வதிபுரம்) கோயில் ஒன்று கட்டி, மூலத்தானத்தில் **விஷ்ணு பட்டாரகரை** பிரதிட்டை செய்தான் என்று கூறப்பட்டுள்ளது.[15] இதுபோன்று கேரள மாநிலத்திலுள்ள திருக்காகரையிலுள்ள விஷ்ணு கோயில், “**திருக்காள்கரை பட்டாரகர் கோயில்**”[16] எனவும் கீழ்ப்பேரூரிலுள்ள திருமால் கோயில் “**திருப்பாற்கடல் பட்டாரகர் கோயில்**”[17] எனவும் பெயர்பெற்றிருந்தன.

**(இ) *முருகன்*** : திருச்செந்தூர் முருகன் கோயிலிருள்ள இரண்டாம் வரகுணனது கல்வெட்டு (கி.பி. 862) இக்கோயிலிலுள்ள இறைவனை **சுப்பிரமணிய பட்டாரர்** என்று குறிப்பிடுகிறது.[18]

மேற் கூறப்பட்டுள்ள கல்வெட்டுகளன்றி இன்னும் பல்வேறு கல்வெட்டுகளில் சிவன், திருமால் ஆகியோர் பட்டாரர் என்றே

குறிப்பிடப்பட்டுள்ளனர். இக்கல்வெட்டுகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உள்ள கல்வெட்டுகளில் சமண சமயப் பெரியோர்களுக்கும், தீர்த்தங்கரர்களுக்கும் ப ட்டாரகர் என்னும் சொல் வழங்கப்பட்டிருப்பதை நோக்கும்போது, **சமண சமயத்திலிருந்துதான் இந்து சமயத்தவர் பட்டாரகர் என்னும் சொல்லினைப் பெற்று, தங்கள் கடவுளருக்கும் வழங்கியிருக்க வேண்டும் என்பது தெளிவாகும்.**

## இந்து சமயத்தில் பட்டாரியார் :

இந்து சமயத்தில் கொற்றவைக்கும், பகவதிக்கும் (உமையவள்) பட்டாரியார், பிடாரியார் என்னும் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. பல்லவ சிற்றரசனாகிய கம்பவர்மன் காலக் கல்வெட்டொன்று கொற்றவைக்குத் துர்க்காபட்டாரியார் என்னும் பெயர் இருந்ததாகக் கூறுகிறது. காஞ்சிபுரத்தில் முதலாம் இராசேந்திரன் காலத்தில் (கி.பி.1025) கட்டப்பட்ட கருக்கினில் அமர்ந்தவள் கோயில் கருக்கமார்ந்த பட்டாரியர் கோயில் எனவும், மூலத்தானத்திலுள்ள இறைவி சிரஸத்தில் நின்றருளிய பட்டாரியார் எனவும் அழைக்கப்படுகிறார். இதுபோன்று கன்னியாகுமரிப் பகவதியம்மன் கோயிலிலுள்ள கல்வெட்டுகளில் அவ்விறைவி கன்யா பட்டாரியார் என்றும், **கன்யாபிடாரியர்** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளாள். இங்குக் கூறப்பட்டுள்ள கல்வெட்டுகளைக் காட்டிலும் காலத்தால் முற்பட்ட சமண சமயக் கல்வெட்டுகளில் பட்டரியார் என்பது யக்ஷியைக் குறிப்பதால் இதுவே சற்று பிற்காலத்தில் இந்து சமயத்தில் கொற்றவையையும் பகவதியையும் (உமை) குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது அறியற்பாலதாகும். பிற்காலத்தில் கொற்றவைக்குப் பட்டாரியார் என்னும் பெயரைவிட பிடாரி என்னும் பெயரே வழக்கில் உள்ளதையும் காணலாம்.

## இறுவாய்

இதுகாறும் கூறப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்திகளிலிருந்து தமிழகத்தில் பட்டாரர், பட்டாரியார் என்னும் சொற்கள் முதன் முதலாக சமண சமயத்தில் இடம் பெற்றனவென்பதும், பிற்காலத்தில் தான் இந்து

சமயத்தில் இவை வழங்கப்பட்டுள்ளன என்பதும் நன்கு புலனாகும். சமண சமய கருத்துகள் பலவற்றை இந்து மதம் ஏற்றுக்கொண்டது போல சமண சமயத்தில் வழங்கப்பட்டு வந்த பட்டாரர், பட்டாரியர் என்னும் சொற்களும் இந்து சமயத்தவரால் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன என்பது உறுதியாகும்.

## அடிக்குறிப்புகள்

1. Annual Report of Epigraphy(ARE) 56/1910
2. ARE 346/1927-28.
3. South Indian Inscriptions (S.I.I.) Vol. 5, pp. 121-134.
4. ARE. 63/1910.
5. ARE. 135/1905.
6. P.B. Desai, Jainism in South India & Some Jaina Epigraphs p. 253.
7. ARE 1915. App. C.No.16.
8. ARE 19/1894.
9. ARE 605/1915.
10. ARE 703/1905.
11. S.I.I. Vol.I, pp. 193- 195.
12. Dr. R. Champakalakshmi. Jainism in South India/ (M. Litt. Thesis)
13. ARE 104/1905.
14. ARE 101/1905.
15. Travancore Archaeological Series. (TAS)Vol/ I No.1..
16. TAS. III. pp.169/171.
17. TAS. V. No.24.
18. ARE 26/1912.
19. S.I.I. Vol.12.No. 206.
20. A. Ekambaranathan, "Karukkinilamarnthaval Temple". Thirukkoil. Sept.1975.
21. TAS VI. p. 141.
22. TAS VI. p. 145.

# 4.கோயில்களுக்கு அளித்த நிவந்தங்கள்

இறை வழிபாட்டிலும், சமயத்திலும் பற்றுடைய மன்னர்களும், மக்களும் அக்காலத்தில் கோயில்களுக்கு ஏராளமான நிவந்தங்களை அளித்துள்ளனர், அவர்கள் கொடுத்துள்ள நிவந்தங்கள் நிலங்கள், பொன், பணம், முதலியனவாகும். மேலும் அரசர்கள் கோயில்களுக்கென சில வரிகளையும் வழங்கியுள்ளனர். இவ்வாறு மன்னர்களும், குடிமக்களும் கொடுத்த தானங்களினால் கோயில்களில் வழிபாடு, திருவிழா முதலியன சிறப்புற நடைபெற்று வந்தன. கோயில்கள் பண்டைய சமதாயத்தின் மூலாதாரமாக விளங்கியதால் மக்கள் மனமுவந்து அவற்றிற்கென நிவந்தங்களை அளித்தனரெனலாம். இதனால் சமயமும் தழைத்தோடங்கிய நிலையிலிருந்தது. பல்லவ, பாண்டிய, சோழர் காலத்தில் ஏராளமான கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டு, அக்கோயில்களின் நிர்வாகம், வழிபாடு முதலியனவற்றைக் கண்காணிப்பதற்கென தனி அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பொதுவாக கோயில்களில் காணப்படும் பெரும்பாலான கல்வெட்டுகள் அக்கோயில்களுக்கு அளிக்கப்பட்ட தானங்களைப் பற்றிய செய்திகளை கொண்டவையாகத் திகழ்கின்றன. இங்குச் சமண சமயக் கோயில்களுக்குக் கொடுக்கப்பட்ட பல்வேறு தானங்களைப் பற்றிய செய்தியினைக் கல்வெட்டுச் சான்றுகளின் மூலம் காண்போம்.

## பள்ளிச்சந்த நிலங்கள்

சமணசமயக் கோயில்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் **பள்ளிச்சந்தம்** என அழைக்கப்பெறும். அக் கோயில்களுக்குப் பள்ளிச்சந்தம் கொடுக்கப்பட்டமையை ஏராளமான கல்வெட்டுகளின் வாயிலாக அறியவருகிறோம். சமணசமயக் கோயில்களன்றி சில இந்து சமயக் கோயில் கல்வெட்டுகளில் இக்கோயில்களுக்குரிய நிலங்கள் பள்ளிச்சந்த நிலங்களுக்கு அருகிலிருந்தன என்று கூறப்பட்டிருப்பதால்,

சமணக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட பள்ளிச் சந்தங்களைப் பற்றி ஓரளவு அறிய முடிகிறது. எடுத்துக்காட்டாக சைதாப்பேட்டை தாலுகாவைச் சார்ந்த மாங்காட்டு காமாட்சி கோயில், தென்னார்க்காடு மாவட்டத்தில் திட்டைக்குடியிலுள்ள வைத்தியநாதசுவாமி கோயில், திருக்கோயிலூர் சிவன் கோயில் முதலிய பல இந்து சமயக் கோயில் கல்வெட்டுகளில் பள்ளிச்சந்த நிலங்களைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம். ஆனால் **சமணசமயக் கோயில் கல்வெட்டுகளில் பள்ளிச்சந்தம் வழங்கியவர்களின் பெயர், காலம், நிலங்களின் பரப்பு முதலிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன.**

கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் சிம்மவிஷ்ணு பல்லவனது ஆட்சியில் திருப்பருத்திக்குன்றக் கோயிலின் வழிபாட்டுச் செலவிற்கென பெருநகர நாட்டிலுள்ள அமண்சேர்க்கை என்னும் ஊரும், தாமலிலுள்ள சில நிலங்களும் பள்ளிச்சந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலங்கள் **வஜ்ரநந்திக்குரவர்** என்னும் சமணப் பெரியோரது பொறுப்பிலிருந்தன. இச்செய்திகளனைத்தையும் **பள்ளன்கோயில் செப்பேடு** என்னும் பல்லவர் காலச் சாசனத்தில் காணலாம்.[1] பள்ளிச்சந்த நிலத்தைப் பற்றிய குறிப்பினையுடைய முதல் செப்பேடு இதுவேயாகும். இச்செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தாமர் என்பது காஞ்சிபுரத்திலிருந்து காவேரிப்பாக்கத்திற்குச் செல்லும் வழியிலுள்ள தாமல் என்னும் ஊராக இருக்கவேண்டும். பிற கல்வெட்டுக்களில் **தாமர்கோட்டம்** என்னும் பிரிவு இருந்தமை கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

திருப்பருத்திக்குன்றக் கோயிலுக்குச் சோழர் காலத்திலும், விசயநகர மன்னர் காலத்திலும் பல தானங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள வர்த்தமானர் கோயில் சோழர் காலக் கலைப்பாணியைக் கொண்டுள்ளதேயன்றி பல்லவர்காலக் கட்டடக் கலையம்சங்களைக் கொண்டு விளங்கவில்லை. இக்கோயிலுக்கு மூன்றாம் குலோத்துங்கன் அம்பி என்னும் ஊரில் 20 வேலி நிலங்ளை அளித்துள்ளான்.[2] இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள அம்பி என்னும் ஊர் காஞ்சிபுரத்திற்கு வடமேற்கில் இரண்டு கல் தொலைவில் உள்ளது. இவ்வூரின் மேற்குப் பகுதி மேலம்பி எனவும், கிழக்குப் பகுதி கீழம்பி எனவும் தற்காலத்தில் அழைக்கப்படுகின்றன. விசயநகர மன்னராகிய இரண்டாவது புக்கரது காலத்தில் அவரது மந்திரியாகிய இருகப்பா என்பவர் இக்கோயிலின்

மண்டபங்களைக் கட்டியதோடு மட்டுமின்றி, மாமண்டூரின் ஒரு பிரிவாகிய **மகேந்திரமங்கலம்** என்னும் ஊரையும் வழங்கியுள்ளார்.[3]

மாறஞ்சடையன் என்னும் பாண்டிய மன்னன் காலத்தில் (கி. பி. 779) நாட்டாற்றுப் போக்கிலிருந்த திருவிருத்தலை அருவாளம் கோயிலுள்ள பட்டாரருக்கு இரம்பாட்டுவேலன் சாத்தன் என்பவர் சில பள்ளிச்சந்த நிலங்களைக் கொடுத்துள்ளார்.[4] இதில் குறிப்பிடப்பட்டுள்ள திருவிருத்தலை அருவாளம் கோயில் மிக்கவாறும் ஏறுவாடி மலையில் காணப்படும் சமண திருவுருவத்தினைக் கொண்ட கோயிலாக இருக்கவேண்டும்.

தர்மபுரியிலுள்ள மல்லிகார்சுனர் கோயிலுக்கு மகேந்திரன் என்னும் நொளம்ப இராசனது ஆட்சியில் நிதியண்ணன் என்பவர் மூலப்பள்ளி என்னும் ஊரை விலைக்கு வாங்கி, இக்கோயிலைச் செப்பனிடுவதற்கென கனகசேன பட்டாரரிடம் கொடுத்துள்ளார்.[5]

திருச்சி மாவட்டத்திலுள்ள தேனிமலை (தேனூர்மலை), அம்மாசத்திரம் ஆகிய இடங்களிலுள்ள கல்வெட்டுகளும், பள்ளிச்சந்தம் கொடுத்ததைக் குறிப்பிடுகின்றன. தேனூர் மலையில் மலையத்துவஜன் என்னும் சமணமுனிவர் தவம் புரிந்தபோது இருக்குவேளிர் பரம்பரையில் தோன்றிய மன்னன் ஒருவன் அங்கு வந்து தங்கினான். அம்மன்னன் தவம் புரியும் முனிவருக்கென சில பள்ளிச் சந்தங்களைக் கொடுத்துள்ளமையை இங்குள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[6] முதலாவது சுந்தரபாண்டியன் காலத்தில் பெரியபள்ளிவயல் என்னும் பகுதியினை திருவானைமலை ஆழ்வார் கோயிலுக்கு கங்காதரன் என்னும் வணிகன் வழங்கியுள்ளார்.[7] இம்மாவட்டத்திலுள்ள பொம்மைப்பாறையில் காணப்படும் கல்வெட்டொன்றில், பாண்டிய மன்னன் ஒருவன் தென்சிறுவாயில் நாட்டைச் சார்ந்த கொற்றமங்கலம் என்னும் ஊரினைத் திருமலைப்பள்ளி, தென்திருமலைப்பள்ளி ஆகிய இரு கோயில்களில் திருப்படிமாற்று என்னும் பூசைக்கும், வழிபாட்டிற்கும் கொடுத்த செய்தி காணப்படுகிறது. இதில் மூன்றில் இரண்டு பங்கு திருப்பள்ளி நாயகருக்கும், மீதியுள்ள மூன்றில் ஒரு பங்கு தென் திருப்பள்ளி நாயகருக்கும் அளிக்கப்பட்டுள்ளது.[8]

சித்தாமூர், திருநறுங்கொண்டை, திருமலை ஆகிய இடங்களிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமணக் கோயில்களுக்குச் சோழராட்சியிலும், விசயநகர காலத்திலும் பல தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத் தானங்களை நன்முறையில் பாதுகாத்து, கோயிலில் சிறப்புற வழிபாடுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை ஆங்குள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறியலாம். பஞ்சபாண்டவ மலைக்குத் தன் மனைவியுடன் வழிபாடு செய்ய வந்த வீரசோழன் என்னும் சிற்றரசன், தனது அரசியின் வேண்டுகோளின்படி இங்குள்ள கோயிலுக்குச் சில நிலங்களை பள்ளிச்சந்தமாக வழங்கியிருக்கிறான்.[9] இது போன்று தொண்டூரிலிருந்த வழுவாமொழிப் பெரும்பள்ளிக்கு குன்னேரி மங்கலத்தையும், அதனைச் சார்ந்த தோட்டத்தினையும் கிணறுகளையும் விண்ணவ கோவரையன் வைரிமலையன் என்னும் சிற்றரசன் அளித்துள்ளான். இவை வச்சிரசிங்க இளம்பெருமானடிகள் என்பவரது மேற்பார்வையிலிருந்தன வென்பதையும் அறிகிறோம்.[10]

வேலூர் பகவதி மலையில் முன்பிருந்த பன்னபேஸ்வரம் என்னும் சமணப் கோயிலுக்கு இராட்டிரகூட மன்னன் மூன்றாவது கிருஷ்ணனது ஆட்சிக்காலத்தில், வேலூர் பாடி என்னும் ஊரினை திரிபுவனதீரன் என்பவர் கொடுத்துள்ளார்.[11] வேலூர்பாடி என்னும் ஊர் தற்போது வேலப்பாடி என்னும் பெயரில் வேலூரினை அடுத்து காணப்படுகிறது.

குமரி மாவட்டத்திலுள்ள நாகராசர் கோயிலுக்கு உதயமார்த்தாண்டன் என்னும் மன்னன் 20 மா நிலத்தைப் பள்ளிச் சந்தமாக அளித்துள்ளான். இதிலிருந்து கிடைத்த வருமானத்தை கோயிலில் விளக்கெரிப்பதற்கு எண்ணெய் வாங்கவும், வழிபாட்டிற்கென கற்பூரம், பூ, பன்னீர், மாலை, துணி முதலியன வாங்குவதற்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குக் கொடுத்த பள்ளிச்சந்த நிலங்கள் கமல வாகனன், குணவீரபண்டிதன் என்னும் இரு சமணப் பெரியோர்களின் மேற்பார்வையிலிருந்தனவென்றும் அறியவருகிறோம்.[12] மேலும் இக்கோயிலுக்கு மும்முடிச்சோழபுரம் பற்றில் 21 மா நிலம் கொடுத்ததையும், தேரூர் பற்றில் சில நிலங்கள் அளித்தமையையும் இங்குள்ள பிற கல்வெட்டுகள் கூறுகின்றன.[13]

பொதுவாகக் கோயில்களுக்கு நிலதானங்கள் அளிக்கும் வழக்கம் பல்லவர் காலத்திலிருந்தே தொடங்யியுள்ளது. மிகவும் சிறப்புற்றிருந்த கோயில்கள் அதிக நிலங்களைக் கொண்டவையாக இருந்தன. **சமணசமயக் கோயில்களைப் பொறுத்தவரை சோழர் காலத்தில்தான் அவற்றிற்கு அதிக நிலதானங்கள் செய்யப்பட்டுள்ளதென அறியவருகிறோம்.** பெரிய கோயில்கள் சமய முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், கலைக்கூடங்களாகவும் கல்விக்கூடங்களாகவும் திகழ்ந்தமையால்தான் அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதெனலாம். மிக்கவாறும் ஒரு கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்கள், பிற வருமானங்கள் முதலியவற்றினைக் கொண்டு அதன் சிறப்பினையும், மக்கள் அதற்குக் கொடுத்த முக்கியத்துவத்தினையும் நன்குணரலாம். இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் சித்தாமூர், திருநறுங்கொண்டை, திருப்பருத்திக்குன்றம் முதலிய இடங்களிலுள்ள சமணசமயக் கோயில்கள் சிறப்பு மிக்கவை என்பதனை அறிய இயலும்.

## பொன், பணம் கொடுத்தமை

சமண சமயக் கோயில்களுக்குப் பள்ளிச் சந்த நிலங்கள் மட்டுமின்றி பொன்னும், பணமும் வழங்கப்பட்டுள்ளன. இவை கோயிலின் வழிபாட்டுச் செலவிற்கும், கோயிலிலிருந்த சமண முனிவர்களுக்கும், ஆங்கு வந்து செல்லும் சமண அறவோர்களுக்கும் உணவளிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வந்தவாசி தாலுக்காவைச் சார்ந்த கீழ்சாத்தமங்கலத்திலுள்ள சந்திரநாதர் கோயிலுக்கு **ஆந்தை இளையார்பவணந்தி** என்பவர் ஏழுகழஞ்சு பொன்னை அளித்து, கோயிலுக்கு வரும் சமணத் துறவிகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்துள்ளார். மேலும் இக்கோயிலுக்கு விழுக்கம் என்னுமிடத்தில் வாழ்ந்த சின அடியாரது மகளாகிய **பூண்டி மூப்பாவை** பதினேழு கழஞ்சு பொன்னைக் கொடுத்துள்ளார்.[14] ஆனந்த மங்கலத்திலுள்ள ஜினகிரி பள்ளிக்கு வர்த்தமானப் பெரியடிகள் ஐந்து கழஞ்சு பொன் வழங்கியுள்ளார்,

இதனுதவியால் இப்பள்ளியில் தினமும் இரு சமண அடியவருக்கு உணவளிக்கப்பட்டு வந்தது.[15]

**திருமலை**யிலுள்ள குந்தவை சினாலயத்திற்குச் **சின்னவையார்** அறுபது காசு கொடுத்துள்ளார். இதைக் கொண்டு இக்கோயிலில் நந்தா விளக்குகள் எரிக்கப்பட்டன. மேலும் இங்குள்ள பள்ளியாழ்வாருக்குத் தினமும் வழிபாடு தவறாது நடைபெற்று வருவதற்கெனவும் கோயிலுக்கு வரும் ஒரு அடியவருக்கு உணவளிப்பதற்கெனவும் **விற்சேனன் பிடாரன்** என்பவரும், விற்சமநாயகன் என்பவரும் பொன் கொடுத்துள்ளனர்.[16]

உத்தமபாளையத்திலுள்ள கருப்பண்ணசாமி பாறையில் காணப்படும் கல்வெட்டு, **திருகுணகிரிதேவர்** கோயிலில் விளக்கெரித்தற்பொருட்டு **அனந்தவீர அடிகள்** பதினோரு காசு அளித்ததாகக் குறிப்பிடுகிறது. இப் பணத்திலிருந்து கிடைத்த வட்டியினைக்கொண்டு அக்கோயிலைக் கண்காணித்து வந்த சமணர்கள் விளக்கெரிக்க ஏற்பாடுகள் செய்தனரென்றும் அறிய வருகிறோம்.[17]

**ஐவர் மலை**யிலுள்ள பார்சுவநாதர்,யக்ஷி ஆகியோரது சிற்பங்களைச் சீர்செய்த **குணவீரகுருவடி**களின் மாணவராகிய **சாந்தி வீரக்குரவர்**, இரண்டாவது வரகுணபாண்டியனது 8 வது ஆட்சியாண்டில் (கி. பி. 870) இங்குள்ள குகைக் கோயிலுக்கு 505 காணம் பொன் கொடுத்துள்ளார். இப்பணம் கோயிலின் வழிபாட்டுச் செலவிற்கும், தினம் ஒரு அடியவருக்கு உணவளிப்பதற்கும் உபயோகப்படுத்தப்பட்டு வந்தது.[18] மேலும் இக்கோயிலிலுள்ள **ஐவர்மலைத் தேவருக்கு அவிப்புறம்** முதலியவற்றிற்கென குவணச்சேரியைச் சார்ந்த **வட்டம் வடுகி** என்பவர் இரண்டு கழஞ்சு பொன் அளித்துள்ளார்.[19] மேற் கூறப்பட்டவையன்றி இன்னும் பல்வேறு சமணர் கோயில்களுக்குப் பொன், பணம் முதலியன வழங்கப்பட்ட செய்திகளைக் கல்வெட்டுகளின் வாயிலாக அறிய வருகிறோம்.

## ஆடுகள், பசுக்கள் கொடுத்தமை

பொதுவாக இந்து சமயக் கோயில்களுக்குத்தான் ஆடுகள்,

பசுக்கள், எருதுகள் முதலியன அதிகமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இதுபோன்று சில சமண சமயக் கோயில்களுக்கும் ஆடுகள், பசுக்கள் வழங்கிய செய்தியினைக் கல்வெட்டுகளின் வாயிலாக அறிய வருகிறோம்.

இராமநாதபுர மாவட்டத்தில் பள்ளிமடத்திலுள்ள கால நாதசுவாமி கோயிலில் காணப்படும் மாறஞ்சடைய பாண்டியன் காலக் கல்வெட்டொன்று (கி.பி.782) கருநீலக்குடி நாட்டின் ஒரு பிரிவாகிய குண்ணூரைச் சார்ந்த **சாத்தன் குணத்தான்** என்பவர் குறண்டி திருக்காட்டாம் பள்ளிக்கு நூறு ஆடுகளைக் கொடுத்ததாகக் கூறுகிறது.[20] மேலும் இப்பாண்டிய மன்னனது 43–வது ஆட்சியாண்டில் (கி.பி.799) திருக்காட்டாம்பள்ளி கோயிலுக்குத் தினமும் ஐந்து நாழி நெய் கொடுப்பதற்கென ஐம்பது ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.[21] இங்குள்ள மற்றொரு கல்வெட்டில் திருக்காட்டாம்பள்ளித் தேவர் முன்னிலையில் ஒரு விளக்கெரிப்பதற்கென **சாத்தன்காரி** என்பவர் ஐந்து ஆடுகளைக் கொடுத்த செய்தி காணப்படுகிறது.[22]

ஏறுவாடியிலுள்ள திருவிருத்தலை **அருவாளம் பட்டாரகர்** கோயிலில் விளக்கெரிப்பதற்கும் சில ஆடுகள் அளிக்கப்பட்டதென அறிய வருகிறோம்.[23] கழுகு மலையிலுள்ள **திருமலைமேல் பட்டாரகர்** கோயிலுக்குச் சாத்தன்காரி என்பவர் இருபத்தைந்து ஆடுகளை வழங்கியுள்ளார். இங்குள்ள மற்றொரு கல்வெட்டிலும் இக்கோயிலுக்கு இருபத்தைந்து ஆடுகள் கொடுத்த செய்தி காணப்படுகிறது.[24]

வந்தவாசியிலுள்ள திறக்கோல் சோழர் காலத்தில் சமண சமய முக்கியத்துவம் வாய்ந்த தலமாக இருந்தது. இங்குள்ள கோயிலுக்கு அண்மையிலுள்ள சமண சிற்பங்களைக் கொண்ட பாறையிலுள்ள கல்வெட்டில் ஆடுகள் கொடுத்த செய்தியினைக் காணலாம். நெய்வேலியைச் சார்ந்த **எறநந்தி** என்பவர் **ஸ்ரீதானபுரத்திலுள்ள சமணப் பெரும்பள்ளிக்கு இருநூறு ஆடுகளைக் கொடுத்து**, தினமும் இரண்டு நாழி நெய்யும், பத்து நாழி எண்ணெயும் கோயிலுக்கு கிடைக்குமாறு செய்துள்ளார்.[25]

கரந்தையிலுள்ள முனிகிரி ஆலயத்திற்கு மூன்றாம் இராசராச சோழன் காலத்தில் ஒரு நந்தா விளக்கெரிப்பதற்கென சில பசுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.[26]

சமண சமயக் கோயில்களுக்கு ஆடுகள், பசுக்கள் அளிக்கப்பட்டதன் நோக்கம் அவற்றின் மூலம் கிடைக்கும் நெய்யினை விளக்கெரிப்பதற்கும், வழிபாட்டிற்கும் பயன்படுத்துவதற்காகவும் எனலாம். சில கோயில்களுக்கு ஏராளமான ஆடுகள் கொடுத்திருப்பதை நோக்கும்போது ஆடுகளைக் கிடைவைத்தல் மூலம் கோயிலுக்கு வருமானம் கிடைத்திருக்க வேண்டும் என்று கூறலாம். (கிடை வைத்தல் என்பது ஆடுகளை வயல் அல்லது தோட்டங்களில் கூட்டமாகத் தங்க வைத்து அவற்றின் எருவினை உரமாகப் பயன்படுத்தும் முறையாகும். தற்காலத்திலும் இவ்வழக்கம் இருந்து வருகிறது. இவ்வாறு கிடை வைப்பதற்கு ஆடுகளின் உரிமையாளர்களுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது.) ஆனால் இத்தகைய வருமானம் கோயிலுக்குக் கிடைத்ததெனக் கூறுவதற்கு கல்வெட்டுச்சான்றுகளில்லை.

## விளக்குகள்

கோயில்களின் மூலத்தானத்திலும், திருச்சுற்றிலிருக்கும் சிறிய கோயில்களிலும் ஒளி வழங்குதற்பொருட்டு விளக்குகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் நெடுநேரம் வரை எரியும் விளக்குகள் நந்தாவிளக்குகள் எனப் பெயர் பெறும். சமண சமயக் கோயில்களுக்கு விளக்கு கொடுத்தமையையும், அவ்விளக்குகள் எரிப்பதற்குத் தானங்கள் அளித்தமையையும் கல்வெட்டுகளின் வாயிலாக அறியவருகிறோம்.

திருமலை குந்தவைசினாலயத்திலுள்ள ஆரம்பநந்தி தேவருக்கு முன்னர் நந்தா விளக்கெரிப்பதற்கு **இளையமணிமங்கை** என்பவர் ஏற்பாடு செய்துள்ளார். முன்பு இக்கோயிலுக்குச் **சின்னவை** என்னும் அரசி விளக்கொன்றினை அளித்துள்ளார். முதலாம் இராசேந்திரன் காலத்தில் இதனைத் தினமும் எரிப்பதற்கென வேண்டிய பணமும் கொடுக்கப்பட்டுள்ளது.[27] மல்லியூரைச் சார்ந்த **நன்னபையன்** என்னும் வணிகரது மனைவியாகிய **சாமுண்டபை** என்பவரும் இக்கோயிலில் வழிபாட்டிற்கெனவும், விளக்கெரிப்பதற்கெனவும் பணம் கொடுத்ததைக் கல்வெட்டொன்று கூறுகிறது.[28] மேலும் இராட்டிரகூடமன்னன் மூன்றாம் கிருஷ்ணனது மனைவி கங்கமாதேவியின் பணிப்பெண் ஒருத்தி

திருமலையிலுள்ள யக்ஷி சிற்பத்திற்கு ஒளி கொடுத்தற்கென விளக்கு ஒன்றை அளித்துள்ளார்.[29]

கரந்தை கோயிலில் விசயகண்ட கோபாலனது ஆட்சிக் காலத்தில் ஆறு நந்தாவிளக்குகள் எரிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கென **அருவந்தை ஆண்டார்** என்பவர் மூன்று பழவண்ணமாடைகளையும், சிறிது நெல்லையும் கொடுத்துள்ளார்.[30] மூன்றாம் இராசராசனது ஆட்சியில் இக்கோயிலில் திருப்பள்ளி எழுச்சியின் போது விளக்கெரிப்பதற்கென முன்னூறு காசுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விளக்கு திருமேற்றிசைப் பெருமாள் (பார்சுவநாதர்) திருவுருவத்தின் முன்னர் எரிக்கப்பட்டதெனவும் அறிய வருகிறோம்.[31]

திருநறுங்கொண்டையிலுள்ள அப்பாண்டைநாதர் கோயிலில் தினமும் நந்தாவிளக்குகள் எரிக்கப்பட்டு வந்தன. இவற்றிற்கென பழம்பட்டினத்தைச் சார்ந்த ஒருவரும், கோபண்ண உடையார் என்பவரும் சில நிலங்களைத் தானமாக வழங்கியுள்ளனர்.[32]

நாகராசர் கோயிலில் நந்தாவிளக்குகள் எரிப்பதற்கென்று கோட்டாற்று பற்றிலுள்ள சில நிலங்கள் கொடுக்கப்பட்ட செய்தியினை ஆங்குள்ள கல்வெட்டொன்று கூறுகிறது.[33] மேலும் **மாளுவநம்பி**, **தம்பிரான்குட்டி** என்னும் இருவர் பொதுமக்களிடமிருந்து பணம் வசூலித்து இக்கோயிலில் மகர தோரண விளக்கொன்றினை நிறுவியுள்ளனர்.[34]

## வரிகள் ஒதுக்கப்பட்டமை

பண்டைக்காலத்தில் சமணக் கோயில்களுக்கு அரசின் வருமானமாகிய வரிகளிலிருந்து சில பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வரிகள் கோயிலில் தவறாது வழிபாடு நடைபெற பயன்படுத்தப்பட்டு வந்தமை கல்வெட்டு கூறும் செய்தியாகும். நார்த்தாமலையின் ஒரு பகுதியிலிருந்த கோயில் **திருமலைப்பள்ளி** எனவும், அடுத்துள்ள பகுதியிலிருந்த கோயில் **தென்திருமலைப்பள்ளி** எனவும் அழைக்கப்பட்டு வந்தன. இக்கோயில்களுக்குத் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் காலத்தில் அந்தராயம், வாராட்சி, வெட்டிப்பாட்டம், தறியிறை, செக்கிறை, தட்டொலிபாட்டம்,

இடையர்வரி, பொன்வரி முதலியன ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் திருமலைப்பள்ளியாழ்வாருக்கு ஒருபங்கும் கொடுக்கப்பட்டுள்ளது.[35]

திருக்கோயிலூரரைச் சார்ந்த பள்ளிச்சந்த கோயில் கல்வெட்டு விசயநகர அரசனாகிய **அச்சுததேவராயர்** காலத்தில் ஜோடிவரி, சூலவரி என்னும் வரிகளை ஐம்பையிலிருந்த நாயனார் விஜயநாயகர் கோயிலுக்கு அளித்தமை பற்றிக் கூறுகிறது.[36] இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள ஐம்பை என்னும் ஊர் பள்ளிச் சந்தலிலிருந்து ஏறத்தாழ ஒருகல் தொலைவிலிருக்கும் சமண சமய தலமாகும்.

திருப்பான் மலையிலுள்ள சமணக் கோயிலுக்கு **வீரசோழன்** என்னும் சிற்றரசனும், அவனது மனைவியும் வந்திருந்தபோது, மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க மன்னன் கற்பூரவிலை முதலிய வருவாயினைக் கொடுத்துள்ளான்.[37]

நாகராசர் கோயிலில் தினமும் வழிபாடு தவறாது நடைபெறுவதற்கென கடமை, வினியோகம், உபாதி, கணக்கிலக்கை. கோமுறைப்பாடு முதலிய வரிகள் கொடுக்கப்பட்டதைக் கல்வெட்டொன்றின் வாயிலாக அறிய வருகிறோம்.[38]

## பிற தானங்கள்

இராசராசனது தமக்கையாராகிய குந்தவைப் பிராட்டியார் திருமலை, தாதாபுரம், திருமலைவாடி ஆகிய இடங்களில் சமணக் கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டதற்குக் காரணமாக விளங்கினார். இவர் பெயரால் தாதாபுரத்தில் கட்டப்பட்ட சமணக் கோயிலுக்கு நிலங்கள் வழங்கியதோடு மட்டுமின்றி பொன், வெள்ளிப் பாத்திரங்கள், முத்துக்கள் முதலியனவற்றையும் கொடுத்துள்ளார்.[39]

மாதேவி என்னும் பெண்மணி கீழ்சாத்தமங்கலத்திலுள்ள கோயிலைப் புதுப்பித்து அத்துடன் முகமண்டபம் ஒன்றைக் கட்டியும், யக்ஷிபட்டாரிக்கென சிறிய கோயில் ஒன்றை உருவாக்கியும் உள்ளார். மேலும் இக்கோயிலுக்கென பெரிய மணி ஒன்றையும் அளித்துள்ளார்.[40] மாதேவியார் புதுப்பித்த கோயில் கீழ்சாத்தமங்கலத்திலுள்ள சந்திரநாதர் கோயிலாக இருக்கலாம். சமண சமயக் கோயிலிலும் வழிபாட்டின்போது மணியடிக்கும் வழக்கம் இருந்தமை மேற்கூறப்பட்ட செய்தியால் அறியப்படுவதாகும்.

திருச்சாரணத்து மலையிலுள்ள பட்டாரியாருக்கு (யக்ஷிக்கு) குணந்தாங்கிக் குரத்திகள் என்னும் பெண் துறவி பொன்னாலான அணிகலன்களும், பொன்னால் செய்யப்பட்ட பூ ஒன்றும் அளித்துள்ளதாக திருச்சாரணத்து மலைக் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது.[41] இவ்வணிகலன் யக்ஷி சிற்பத்தில் வழிபாட்டின்போது அணிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளிலிருந்து மன்னர்களும், சிற்றரசர்களும், அரசியரும், பொது மக்களும், சமணக் கோயில்களுக்கு அளித்த பல்வேறு நிவந்தங்களைப் பற்றி அறிய வருகிறோம். இவ்வாறு கொடுக்கப்பட்ட தானங்கள் அவர்களது சமணப்பற்றினை நன்குணர்த்துகின்றன. பொதுவாக அரசியல் குழப்பங்கள், போர் முதலியவற்றாலும், பஞ்சம் முதலிய இயற்கையாக ஏற்படும இன்னல்களினாலும் நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டபொழுது கோயில்களுக்கு அதிக நிவந்தங்கள் அளிக்கப்படவில்லை. நல்லாட்சி நடைபெற்றபோது நாட்டின் பொருளாதார நிலையும் உயர்ந்திருக்கும். இதனை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்து நோக்கின் எந்த மன்னராட்சியில் அமைதி நிலவி மக்களின் பொருளாதார நிலை மேம்பட்டிருந்ததோ, அச்சமயத்தில் கோயில்களுக்கு ஏராளமான பொருட்களும், தானங்களும் கொடுக்கப்பட்டிருப்பதை நன்குணரலாம்.

## அடிக்குறிப்புகள்

1. T.N.Subramanian, "The Pallankoil Copper plate" - Transactions of the Archaeological Society of South India 1958-59.
2. S. I. I., Vol. II, App.VI.
3. Epl.Ind: VII, P.115.
4. S. I. I., XIV, No.41.
5. 304/1901.
6. P. S. I., No.9.
7. S. I. I., XVII, No.397.
8. P. S. I. p.658.
9. P. B. Desai, Jainism in South India and some Jaina Epigraphs P.41.
10. 83/1934-35.
11. S. I. I., No.51.

12. T. A. S., IV., No.116.
13. T. A. S., IV., No.120-121.
14. Seminar on inscriptions - pp.158-159.
15. 430/1922.
16. S. I. I. III, No.97:
17. S. I. I., XIV, No.128,
18. S. I. I., XIV, No.22,
19. S. I. I., XIV, No.116,
20. S. I. I., XIV, No.32,
21. S. I. I., XIV, No.39,
22. S. I. I., XIV, No.34,
23. S. I. I., XIV, No.41,
24. S. I. I.,V, No.308,
25. S. I. I., XIX, No.51,
26. 132/1939-40
27. S. I. I., I. No.68.
28. S. I. I., I. No.98.
29. 65/1907.
30. 138/1939-40.
31. 131/1939-40
32. 304/1939-40
33. T. A. S., IV., No.119.
34. T. A. S., IV., No.123.
35. P. S. I., No.658.
36. 449/1937-38.
37. Epi. Ind. IV., pp.137-140.
38. T. A. S., IV., No.117.
39. S. I . I., III., No.67.
40. A. Chakravarti, Jain Literature in Tamil, Appendix-p 155.
41. T. A. S., I., pp.193-195.

# 5.சமண சிற்பங்கள் படிமங்கள்

தமிழகத்தில் சங்க காலத்திலிருந்தே சிற்பக்கலை சிறந்த நிலையிலிருந்ததை அக்கால இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. ஆனால் சங்க காலச் சிற்பங்கள் எவையும் இதுவரை நமக்குக் கிடைக்கப்பெறவில்லை. கி.பி.7 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் குடைவரைக் கோயில்களும், கட்டடக் கோயில்களும் தோற்றுவிக்கப்படலாயின. தமிழகத்தை அரசோச்சிய மன்னர்களுள் பெரும்பாலானோர் இந்துசமயத்தினைச் சார்ந்தவராயினும், பலர் சைனமதத்தை ஆதரித்தும் வந்துள்ளனர். இதனால் தான் சமண சமயக் குகைக் கோயில்களும், கட்டடக் கோயில்களும் ஏராளமான அளவில் உருவாக்கப்பட்டு அவை அரிய சிற்பங்களைக் கொண்ட கலைக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

சமண சமயச் சிற்பங்களைப் பொதுவாக **குடைவரை – குகைக் கோயில் சிற்பங்கள், திறந்தவெளி பாறைச் சிற்பங்கள்** (Open air rock-cut Sculpture) **தனிச்சிற்பங்கள்** என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இயற்கையாக அமைந்துள்ள குகையினைச் சரிசெய்து கோயிலாக மாற்றி அதனுள் அமைக்கப்படும் சிற்பங்கள் குகைக் கோயில் சிற்பங்களாகும். ஆனால் மலைகளைக் குடைந்து அவற்றுள் நிறுவப்படும் சிற்பங்கள் குடைவரைச் சிற்பங்கள் எனப் பெயர் பெறும். இவ்விருவகைச் சிற்பங்களை குடைவரை – குகைக்கோயில் சிற்பங்கள் எனப் பொதுவாக அழைக்கலாம். இரண்டாவது பிரிவினைச் சார்ந்த திறந்தவெளி பாறைச் சிற்பங்கள் என்பது மலை அல்லது பாறையின் வெளிப்பகுதியில் செதுக்கப்பட்ட சிற்பங்களாகும். இவையன்றி தனியாக உள்ள கல்லில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் தனிச் சிற்பங்கள் எனப்படும். இம் மூன்றாவது பிரிவினுள் தனியாகவுள்ள புடைப்பியற் சிற்பங்களும் அடங்கும். மேலும் கட்டடக் கோயில்களின் தேவகோட்டங்களில் காணப்படும் சிறு சிற்பங்களையும் இப்பிரிவினைச் சார்ந்ததாகக் கருதுவதே முறையாகும்.

## இலக்கியச் செய்தி

சங்கம் மருவிய கால இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தில் முக்குடைச் செல்வனாகிய அருகதேவனது சிற்பத் திருவுருவக் குறிப்பு காணப்படுகிறது.

*திங்கள் மூன்றடுக்கிய திருமுக்குடைக்கீழ்ச்*
*செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி சிறந்து*
*கோதை தாழ் பிண்டிக் கொழுநிழலிருந்த*
*ஆதியில் தோற்றத் தறிவன் ........*[1]

மூன்று திங்கள் மண்டலங்களை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்தாற் போன்று சந்திராதித்தம், நித்தியவினோதம், சகலபாசனம் என்னும் மூன்று குடைகளின் கீழ், சிவந்த ஞாயிற்றினது ஒளியைக் காட்டிலும் மிகுந்த ஒளியினையுடையவனாக வீற்றிருப்பவன் ஆதியில் தோற்றத்தறிவனாகிய அருகதேவன் என்பது இதன் பொருளாகும். சமண சமய சிற்ப நூற்படி அருகக்கடவுளின் சிற்பங்கள் முக்குடையின் கீழ், தியானத்தில் அமர்ந்தவண்ணம் அமைக்கப்படுதல் மரபாகும். இத்தகைய திருவுருவக் குறிப்புகளையுடைய சிற்பம் சிலப்பதிகார காலத்தில் இருந்தமை மேற் கூறப்பட்டுள்ள அடிகளால் நன்கு அறியப்படும்.

சங்கம் மருவிய காலத்திற்குப் பின்னர் தமிழகத்தைப் பல்லவர், பாண்டியர், சோழர், விசயநகர மன்னர்கள் சிறப்புற ஆட்சி புரிந்தனர். இவர்களுள் முற்காலப் பாண்டியர், பல்லவர் காலத்தில் சில குடைவரை – குகைக்கோயில்களும், அதிக அளவில் பாறைச் சிற்பங்களும், சமண கட்டடக் கோயில்கள் குறைந்த அளவிலும் உருவாக்கப்பட்டன. சோழர் காலத்தில் சில குடைவரை – குகைக் கோயில்களும், பாறைச் சிற்பங்களும், ஏராளமான கட்டடக் கோயில்களும், தனிச் சிற்பங்களும், தோற்றுவிக்கப்பட்டுள்ளன. விசயநகர அரசர்கள் ஆட்சியில் சில கட்டடக் கோயில்களும், முன்பிருந்த கோயில்களில் புதிய மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன.

## குடைவரை – குகைக்கோயில் சிற்பங்கள்

தமிழ்நாட்டில் சமண சமய குடைவரை – குகைக் கோயில் சிற்பங்கள் பஞ்சபாண்டவமலை, தொண்டூர், சித்தன்னவாசல், மதுரை,

திருச்சாரணத்துமலை, சமணர் குடகு முதலிய பல இடங்களில் காணப்படுகின்றன.

சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலில் கருவறையின் சுவரில் மூன்று புடைப்பியற் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு சிற்பங்கள் தீர்த்தங்கரர்களையும் மற்றொன்று சமண சமயப் பெரியோரையும் குறிப்பவையாகும். இக்கோயிலின் வடக்கு, தெற்குப்புறச் சுவர்களில் பார்சுவநாதர் சிற்பங்கள் காணப்படுகின்றன.

மதுரையிலுள்ள அழகர்மலைக் குகைக்கோயிலில் அமர்ந்த நிலையிலுள்ள தீர்த்தங்கரரது உருவம் காணப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டொன்றில் இச்சிற்பம் **அஜ்ஜநந்தி** என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேட்டுப்பட்டியிலுள்ள **சித்தர்மலைக்** குகையில் தீர்த்தங்கரர் திருவுருவங்கள் இல்லையெனினும், சகஜாநந்தரது திருப்பாதங்கள் பொறிக்கப் பட்டுள்ளதைக் காணலாம். முத்துப்பட்டியிலுள்ள குகைக் கோயிலினுள் அமர்ந்தவண்ணமுள்ள மகாவீரர் சிற்பம் காணப்படுகிறது. இவருக்கு இருமருங்கிலும் சாமரம் வீசுவோர் உள்ளனர். மகாவீரரது தலைக்குப் பின்பகுதியில் அலங்கார வேலைப்பாடுடைய அரைவட்டவடிவ பிரபை செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பேச்சிப்பள்ளம் குகைக் கோயிலில் வரிசையாகக் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஐந்து சிற்பங்கள் ஆடையின்றி நின்றவண்ணம் தலைக்கு மேற்பகுதியில் படம் விரிந்துள்ள பாம்பினைக் கொண்டவையாகத் திகழ்கின்றன. இவை ஏழாவது தீர்த்தங்கராகிய சுபார்சுவ நாதரை அல்லது இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதரைக் குறிப்பவையாக இருக்க வேண்டும்.

புதுக்கோட்டையிலுள்ள **சமணர்குடகு** என அழைக்கப்பெறும் குடைவரைக் கோயிலில் முன்பு சமண தீர்த்தங்கரர் சிற்பம் இருந்ததெனவும், பின்னர் அது சிதைக்கப்பட்டு விட்டதெனவும் கூறப்படுகிறது. ஆனால் இக் குடைவரையின் அர்த்த மண்டபத்தில் பிற்காலத்தில் திருமாலின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. முன்பு இது சமணக் கோயிலாக இருந்து கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் வைணவக் கோயிலாக மாற்றப்பட்டிருக்க வேண்டுனெ கருதப்படுகிறது.

திருச்சாரணத்து மலையிலுள்ள குகைக்கோயிலில் மூன்று சிறிய கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மூன்று கருவறைகளுள் இரண்டினில் மகாவீரர், பார்சுவநாதர் சிற்பங்களும் காணப்படுகின்றன. இங்குள்ள கல்வெட்டொன்றில் திருச்சாரணத்து மலையிலுள்ள பட்டாரியாருக்குத் தானங்கள் அளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பான் மலையிலுள்ள குகைக்கோயிலின் உட்புறச்சுவரில் அமர்ந்த நிலையில், கையினில் சாமரையினைக் கொண்ட பெண் உருவம் ஒன்றுள்ளது. இதன் வலதுபுறம் சிறிய அளவில் ஆடவர் சிற்பம் ஒன்றும் காணப்படுகிறது. சாமரத்தினைக் கொண்ட பெண் அமர்ந்திருக்கும் பீடத்தினில் மூன்று சிறிய உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கல்வெட்டொன்றில் புகழாலை மங்கலத்தைச் சார்ந்த ஒருவர் **பொன்னியக்கியார்** உருவமும், அவரது அருகில் **நாகநந்தி** என்னும் சமணப் பெரியோர் சிற்பமும் உருவாக்க ஏற்பாடு செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்கூறப்பட்டுள்ள சிற்பங்கள் பொன்னியக்கியாகிய **சித்தாயிகா** யக்ஷியையும், நாகநந்தி என்பவரையும் குறிப்பிடுகின்றன என்பது தெளிவாகும்.

திண்டிவனத்திற்குச் சற்று தொலைவிலுள்ள தொண்டூர் குகைக் கோயிலில் பார்சுவநாதர் சிற்பமும், கற்படுக்கைகளும் காணப்படுகின்றன. இப்பார்சுவநாதர் சிற்பம் ஆடையின்றி நின்றவண்ணம் தலைக்குப் பின்பகுதியில் படம் விரித்தாடும் பாம்பினையுடையதாய் அழகிய புடைப்பியற் சிற்பமாகத் திகழ்கிறது.

## திறந்தவெளி பாறை சிற்பங்கள்

தமிழகத்தில் உள்ள பல மலைகள், குன்றுகள் ஆகியவற்றில் வெளிப்பகுதியினில் ஏராளமான சமணசமய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நெல்லை மாவட்டத்திலுள்ள கழுகுமலையில் வரிசை வரிசையாக அழகிய சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்பகுதியில் அவற்றை உருவாக்க ஏற்பாடு செய்தவர்களின் பெயர்களும் இடம்பெற்றிருத்தலைக் காணலாம். இங்குள்ள அமர்ந்த நிலையிலுள்ள தீர்த்தங்கரர்கள், அவர்களது பணியாட்களாகிய யக்ஷர், யக்ஷி முதலியோரது சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

தீர்த்தங்கரர்களின் தலைக்கு மேற்பகுதியில் முக்குடையும், கொடி போன்ற அமைப்பும், யக்ஷிகளின் கரங்களில் சாமரங்களும், அவர்களது திருமேனியிலுள்ள ஆடை, அலங்காரங்கள் முதலியனவும் மிகவும் அழகுறக் காணப்படுகின்றன. இங்குள்ள மற்றொரு பாறையின் முகப்பில் பார்சுவநாதர், பத்மாவதி யக்ஷி, வழிபடுவோர் ஆகியோரது சிற்பங்கள் சற்று பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. கழுகுமலையிலுள்ள சிற்பங்களின் அடிப்பகுதியில் அவற்றைச் செதுக்க ஏற்பாடு செய்தவர்களின் பெயர்களைக் கொண்ட கல்வெட்டுகள் கி.பி.8, 9 ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாதலால், இச்சிற்பங்களும், அக்காலத்தவை என்பது தெள்ளிதின் விளங்கும்.

திருச் சாரணத்து மலையில் இரு வரிசைகளாகப் புடைப்பியற் சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மகாவீரர், பார்சுவநாதர் இவர்களது யக்ஷிகள் முதலிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இச் சிற்பங்கள் கி.பி.9–ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும்.

மதுரைக்கு அருகில் பேச்சிப்பள்ளத்திலுள்ள பாறையில் வரிசையாக பாகுபலி, பார்சுவநாதர், மகாவீரர் முதலிய பல தீர்த்தங்கரர்களது சிற்பங்கள் உள்ளன. இவற்றின் கீழ்ப்பகுதியில் இச்சிற்பங்களை நிறுவியவர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகள் கி.பி. 8–9ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாதலால், இச்சிற்பங்களும் அக்காலத்தவை என்பது நன்கு புலனாகும்.

வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களிலுள்ள மலைகளிலும் ஏராளமான திறந்தவெளி பாறைச் சிற்பங்களைக் காணலாம். தென்னார்க்காடு மாவட்டத்தில் கீரனூரிலுள்ள பாறையில் **கோமதீஸ்வரர், பார்சுவநாதர்** ஆகியோர் சிற்பங்களுள்ளன. இவ்வூருக்கு அருகிலுள்ள **சோழ பாண்டிபுரத்திலும் கோமதீஸ்வரர், தருமதேவி, பார்சுவநாதர், மகாவீரர்** ஆகியோர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கல்வெட்டின் வாயிலாக இச்சிற்பங்களின் காலம் கி.பி.10 –ம் நூற்றாண்டு என்பதனை அறிய வருகிறோம். திண்டிவனம் தாலுகாவிலுள்ள **திருநாதர் குன்றில்** இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் எழில்மிகு சிற்பங்கள் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம். இதற்கு அடுத்தாற்போன்றுள்ள பாறையிலும் நின்ற கோலத்திலுள்ள தீர்த்தங்கரரது சிற்பம் உள்ளது.

திருநறுங்கொண்டை மலையிலுள்ள குகையின் வடபகுதியிலுள்ள பாறையொன்றில் மூன்றரை அடி உயரமுள்ள பார்சுவநாதர் சிற்பம் உள்ளது. இச் சிற்பத்தின் தலைக்கு மேலாக பாம்பும், அதற்கு மேற்பகுதியில் முக்குடையும் செதுக்கப்பட்டுள்ளன. பார்சுவநாதரின் இருமருங்கிலும் சாமரங்களை வீசும் பணியாட்களின் சிற்பங்களும் சிறப்புற அமைந்துள்ளன. சித்தாமூரிலுள்ள குன்றொன்றில் பார்சுவநாதர், பாகுபலி, நேமிநாதர், மகாவீரர், யக்ஷிகள் ஆகியோரது அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன.

வடஆர்க்காடு மாவட்டத்தில் வள்ளிமலை, பஞ்ச பாண்டவ மலை, திருமலை முதலிய இடங்களில் திறந்தவெளிப்பாறைச் சிற்பங்கள் பல உள்ளன. வள்ளிமலையில் தீர்த்தங்கரர் திருவுருவங்களும், **அஜ்ஜநந்தி, கோவர்த்தனர், தேவசேனர்** ஆகிய சமண சமய ஆன்றோர்களின் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இச் சிற்பங்களின் கீழ்ப்பகுதியிலுள்ள கல்வெட்டுகள், இவற்றை **இராசமல்லன்** என்னும் **கங்கமன்னன்** உருவாக்க ஏற்பாடு செய்தான் என்பதனை விளக்குகின்றன. பஞ்ச பாண்டவ மலையிலுள்ள குகைக் கோயிலின் மேற்பகுதியிலுள்ள பாறையில் அமர்ந்த நிலையிலுள்ள தீர்த்தங்கரரின் அழகிய சிற்பம் இடம் பெற்றுள்ளது. **திருமலையிலுள்ள குன்றின் மீது பதினாறரை அடி உயரமுள்ள நேமிநாதரின் அரிய சிற்பம் உள்ளது**. சோழர் காலக்கலைப்பாணியில் அமைக்கப்பட்ட இச்சிற்பம், தமிழகத்திலுள்ள பிற சமண சமய சிற்பங்களைக் காட்டிலும் பெரியதெனக் கருதப்படுகிறது.

திருச்சி மாவட்டத்தில் **சிவாயம்** என்னும் ஊரிலுள்ள பாறையில் மகாவீரர் அமர்ந்த கோலத்தில் வீற்றிருக்கிறார். இவரது இருமருங்கிலும் சாமரம் வீசுவோர், பிற அடியவர்கள் ஆகியோரது சிற்பங்களும் உள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த **அனந்தமங்கலத்தில்** சில தீர்த்தங்கரரது சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அனந்த தீர்த்தங்கரரது சிற்பம் குறிப்பிடத்தக்கதாகும். இத் தீர்த்தங்கரரது இருபுறமும் உள்ள யக்ஷிகளில் ஒருவர் கொற்றக் குடையினையும், மற்றொருவர் சாமரத்தினையும் பெற்றுள்ளனர். இதற்கருகிலுள்ள

மற்றொரு பாறையில் மகாவீரரும், அவரது யக்ஷியும் காணப்படுகின்றனர். இச் சிற்பங்களனைத்தும் சோழர் காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும்.

கோவை மாவட்டத்திலுள்ள **திருமூர்த்தி** மலையின் ஒரு பகுதியில் தீர்த்தங்கரர் உருவமும், சாமரைதாரிகளின் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இவை காலப்போக்கினால் தேய்ந்து காணப்படுகின்றன.

## தனிச் சிற்பங்கள்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஊர்களில் ஏராளமான சமணசமய சிற்பங்கள் கண்காணிக்கப்படாமலிருப்பதைக் காணலாம். இவையன்றி சில சிற்பங்கள் தனியாகக் கட்டப்பட்டுள்ள பீடத்தில் வைக்கப்பட்டு வழிபாட்டிற்குரியனவாகவும் திகழ்கின்றன. மேலும் பல சிற்பங்கள் சரிவர பாதுகாக்கப்படாமையால் அருங்கலைக் கூடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு நன்னிலையில் வைக்கப்பட்டுள்ளன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம், மாகறல், உத்திரமேரூர் முதலிய இடங்களிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கீழ்குப்பம், திண்டிவனம், சித்தாமூர், விழுப்புரம், திருநறுங்கொண்டை முதலிய ஊர்களிலும், வடஆர்க்காடு மாவட்டத்தில் காவனூர், குகை நல்லூர், திருமலை, புனதகை முதலிய இடங்களிலும், திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த வெள்ளனூர், அன்னவாசல், அம்பாபுரம், சயங்கொண்ட சோழபுரம், குளித்தலை முதலிய பகுதிகளிலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் சடையாபாறை ஆளுருட்டிமலை முதலிய இடங்களிலும், தஞ்சை மாவட்டத்தில் திருவலஞ்சுழி, செந்தலை ஆகிய உர்களிலும் இராமநாதபுரத்தில் இளையான்குடி, பெரியபட்டினம், செலவனூர், கோவில்குளம், மஞ்சியூர் முதலிய ஊர்களிலும், நெல்லை மாவட்டத்தில் சாயர்புரம், குளத்தூர், காயல், மந்திகுளம் முதலிய இடங்களிலும், சேலம், தர்மபுரி, அதமன் கோட்டை, பெருந்துறை, விசயமங்கலம் முதலிய பிற இடங்களிலும் தனியாக உள்ள சிற்பங்கள் காணப்படுகின்றன. இவையன்றி வேறு பல ஊர்களிலுள்ள தனிச்சிற்பங்களைப் பற்றிய

செய்திகளும் தற்காலத்தில் அறிஞர் உலகிற்குக் கொண்டு வரப்படுகின்றன. பொதுவாக மேற்கூறப்பட்ட ஊர்களில் மகாவீரர், ரிஷபநாதர் ஆகியோரது சிற்பங்களே மிகுதியாகக் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் சில சிற்பங்கள் மட்டும் தான் பணியாட்கள் சிற்பங்களையும் கொண்டவையாகத் திகழ்கின்றன. பிற சிற்பங்களில் தீர்த்தங்கரர் மட்டும் இடம் பெற்றுள்ளார். மிக்கவாறான சிற்பங்கள் அமர்ந்த கோலத்திலுள்ளவையாகும். ஓரிரு இடங்களில் மட்டும் நின்ற கோலத்திலுள்ள தீர்த்தங்கரர் திருவுருவங்கள் காணப்படுகின்றன.

இவையன்றி திருப்பருத்திக்குன்றம், திருமலை, கரந்தை. திருநறுங்கொண்டை, சித்தாமூர் முதலிய தலங்களிலுள்ள கட்டடக்கோயில்களில் விமானத்தின் கோட்டங்களிலும், திருச் சுற்றுகளிலும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. திருப்பருத்திக் குன்றம் கோயில் விமானத்தில் சிகரத்தின் கீழுள்ள கோட்டங்களில் அமர்ந்த நிலையிலுள்ள மகாவீரர் சிற்பங்கள் சிறியனவாக உள்ளன. திருநறுங்கொண்டையில் பார்சுவநாதர், பத்மாவதி, தர்மதேவி முதலியோர் சிற்பங்கள் அர்த்தமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளன. வந்தவாசிக்கு அருகிலுள்ள பிருதூர் கோயிலில் மகாவீரர், தர்மதேவி ஆகியோரது தனிச் சிற்பங்களும், இக்கோயிலின் விமானத்தில் ரிஷபதேவர் சம்பவநாதர், சுபார்ஸ்வநாதர், சந்திரநாதர் முதலியோரது சிற்பங்களையும் காணலாம். மேலும் பல கட்டடக் கோயில்களின் கருவறைகளில் ஆதிநாதர், மகாவீரர், பார்சுவநாதர், முதலியோரது சிற்பங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன.

சிலபகுதிகளில் காணப்படும் தனிச் சிற்பங்கள் கல்வெட்டுக்களைக் கொண்டவையாகவும் திகழ்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக புதுக்கோட்டைக்கு அண்மையிலுள்ள செம்பாட்டூரிலிருக்கும் அம்பிகா யக்ஷியின் சிற்பத்தைக் கூறலாம். இருகரங்களையுடைய இவ்யக்ஷியின் வலதுகை தாமரை மலரைக் கொண்டும், இடது கை தொடைமீது வைக்கப்பட்டும், வலதுகால் தொங்க விடப்பட்டு சிங்கவாகனத்தின் முதுகிளைத் தொட்டவாறும், இடதுகால் பீடத்தின் மீது மடக்கி வைக்கப்பட்டும் உள்ளன. இச்சிற்பம்

ஜெயங்கொண்ட சோழகுளமங்கல நாட்டைச் சார்ந்த **மூவேந்தளூர் தேவர்** என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதென்று இதன் பீடத்திலுள்ள கி.பி.11 ஆம் நூற்றாண்டுக்கால கல்வெட்டு குறிப்பிடுகிறது.[2]

## சமண பாதங்கள்

அருளறம் பூண்ட அண்ணலார் தவம்புரிந்த மலைகள் சிலவற்றில் பாதங்கள் புடைப்பியற் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். தமிழிலக்கியங்களில் பாதங்கள் செதுக்கப்பட்டமை பற்றிய செய்திகள் இடம் பெறவில்லையாயினும், அருகக் கடவுளின் திருவடித் தாமரைக்கு வணக்கம் செலுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகள் ஆதியில் தோற்றத்தறிவனாகிய அருகதேவனது இணையடிகளை வாழ்த்தி வணங்கிய செய்தி காணப்படுகிறது. இதுபோன்று சீவகசிந்தாமணியில் கடவுள் வாழ்த்துப்பகுதியில் அருகன் அருள்முனியின் பொற்பாத கமலங்களுக்கு அஞ்சலி செலுத்துவதாகப் புலவர் பெருமான் படைத்துள்ளார். இவ்வாறு இலக்கியங்களில் அருகக் கடவுளின் திருவடிகளைப் போற்றி பாமாலை சூட்டியுள்ளமை பாத வழிபாட்டின் அடிப்படையாகும்.

வடஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரை அடுத்துள்ள **பகவதி மலையில்** இரு இடங்களில் சமணபாதங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள முதலாவது கற்படுக்கையின் ஒரு பகுதியில் சிறிய அளவில் பாதங்கள் தீட்டப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தாற்போன்று கட்டப்பட்டுள்ள கோயிலை ஒட்டியுள்ள பாறையில் ஏறத்தாழ ஐந்தரை அடி நீளமுள்ள பாதங்கள் மிகவும் அழகுறத் திகழ்கின்றன. இவற்றின் மேற்பகுதியிலும், கீழ்ப்பகுதியிலும் வட்ட வடிவமான அமைப்புக்குள் தாமரை மலர்களும், பாதத்தின் நடுப்பகுதியில் நாற்கோண அமைப்பும் பொறிக்கப்பட்டுள்ளன. **தமிழகத்திலுள்ள சமண பாதங்களுள் இவையே அளவில் மிகவும் பெரியவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.** இம்மாவட்டத்திலுள்ள நீலகிரிக்குன்றில் ஏலாச்சாரியாரின் திருவடிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவர் தமிழகத்தில் சுவாலமாலினியம்மன் வழிபாட்டினைப் பரப்பியவர் என்று கூறப்படுகிறது. இத்திருப்பாதங்களுக்கு ஆண்டுதோறும் சமண சமயத்தவர் சிறப்பு வழிபாடு நடத்தி வருகின்றனர்.

செய்யாறு தாலுக்காவிலுள்ள கரந்தை முனிகிரீஸ்வரர் ஆலயத்தின் மதிற்சுவரிலும், மண்டபத்திலும் பாதங்கள் காணப்படுகின்றன. இவை காஞ்சிபுரத்தில் புத்த சமயத்தவரை வாதில்வென்ற **அகளங்கரது** திருவடிகளாகும்.

மதுரை மாவட்டத்திலுள்ள **சித்தர்மலை**யில் காணப்படும கற்படுக்கை ஒன்றில் பெரிய அளவில் தாமரை மலர் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. இம்மலரின் பொகுட்டினில் பாதங்கள் புடைப்பியற் சிற்பமாகத் தீட்டப்பட்டுள்ளன. இவை இங்குள்ள கல்வெட்டொன்றில் கூறப்பட்டுள்ள சகஜாநந்தநாதரது திருவடிகளைக் குறிப்பவையாகும். நெல்லை மாவட்டத்திலுள்ள **வீரசிகாமணி**யிலும் சமணபாதங்கள் உள்ளன. சித்தர்மலையிலுள்ளதைப் போன்று இங்கும் தாமரை மலரின் பொகுட்டினில் பாதங்கள் அழகுற செதுக்கப்பட்டுள்ளன. இவையும் சகஜாநந்தநாதரது திருவடிகளைக் குறிப்பவை என்று கருதப்படுகிறது. திண்டிவனத்தைச் சார்ந்த இடையாலத்திலுள்ள **சித்தர் பாறை**யின் ஒரு பகுதியில் திருவடிகள் கமண்டலம், மயிற்பீலி முதலியன செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள கல்வெட்டிலிருந்து இவை **வாமனாச்சாரி**யாருடைய பாதங்கள் என்பதை அறிய வருகிறோம்.[3] இப்பாறையின் மறுபகுதியில் பாதங்கள், புத்தகத்தினை வைக்கும் தாங்கி முதலியவற்றின் சிற்பங்களும் காணப்படுகின்றன. இதனைச் சுற்றியுள்ள கல்வெட்டு இப்பாதங்கள் விமலசின தேவருடையவை என்பதை அறிவுறுத்துகிறது.[4] இவ்வாறு பாதங்கள் செதுக்கப்பட்டு அவை வழிபாட்டிற்குரியதாகத் திகழ்ந்தமை, சமண சமயத்திலுள்ள குறியீட்டு வழிபாட்டினைக் (Symbolic worship) குறிப்பதாகும். இவைபோன்றே புத்த சமயத்திலும் பாதங்கள், தர்மச்சக்கரம், சிம்மாசனம் முதலியன குறியீட்டு வழிபாட்டினை உணர்த்துவனவாகத் திகழ்கின்றன.

## படிமங்கள்

சமணசமய உலோகத் திருமேனிகள் இந்து சமயப்படிமங்களைப் போன்று எண்ணிக்கையில் அதிகமாகக் கிடைக்கவில்லை. இப்படிமங்கள் சமணக் கோயில்களில் வழிபாட்டிலும், சென்னை முதலிய அருங்கலைக் கூடங்களிலும் காணப்படுகின்றன. முன்பு சமணக் கோயில்களில் இடம் பெற்றிருந்த பல படிமங்கள் தற்போது

கிடைக்கவில்லை எனினும், அவற்றைப் பற்றிய செய்திகள் சிலவற்றைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. இராமநாதபுரத்தில் கோவில்குளத்திலுள்ள குலோத்துங்கன் காலக் கல்வெட்டொன்று முக்குடைநாதர், இயக்கி ஆகியோரது செப்புத் திருமேனிகள் உருவாக்கப்பட்டமை பற்றிக் கூறுகிறது. தற்போது இப்படிமங்கள் எஞ்சி நிற்கவில்லை. வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பொன்னூர் ஆதிநாதர் கோயிலில் பார்சுவநாதர், சுவாலமாலினியம்மன் ஆகியோரது திருவுருவங்கள் இருத்தனவென்றும், இப்படிமங்கள் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வழிபாட்டின் போது பொன்னூரிலிருந்து நீலகிரிக் குன்றிற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டனவென்றும் இக்கோயில் கல்வெட்டொன்று கூறுகிறது.[6] இவ்வாறு முன்பிருந்த படிமங்களைப் பற்றி அறிய கல்வெட்டுகள் சில சமயங்களில் உதவியாக உள்ளன.

திருநறுங்கொண்டை கோயிலிலுள்ள படிமங்களுள் இரு சந்திரநாதர் திருமேனிகள் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றில் ஒன்று ஒன்றரை அடி உயரமுள்ளதாகும். இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தைச் சார்ந்த இத்திருவுருவத்தின் பீடத்தில் '**ஸ்ரீ திருநறுங்கொண்டை ஆளப்பிறந்தார் மோகன் கச்சி நாயகர்**' என பொறிக்கப்பட்டுள்ளது'.[7] அதாவது கச்சிநாயகர் என்னும் இப்படிமம் திருநறுங்கொண்டையைச் சார்ந்த ஆளப்பிறந்தார் மோகன் என்பவரால் வழங்கப்பட்டதென்பது பொருளாகும். இரண்டாம் குலோத்துங்கனது கல்வெட்டொன்றில் ஜனநாதமங்கலம் என்னும் ஊரிலிருந்து ஆண்டு தோறும் பாடிக்காவல் வருமானமாகப் பெற்ற 420 கலம் நெல்லை இக்கச்சி நாயகரது திருவுருவ வழிபாட்டிற்கென ஆளப்பிறந்தார் மோகன் கொடுத்துள்ளமை கூறப்பட்டுள்ளது.[8] இவ்விரு சாசனங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள ஆளப்பிறந்தார் மோகன் ஒருவரேயாகும்.

வந்தவாசிக்கு அண்மையிலுள்ள வெண்குன்றம் சமணக் கோயிலில் சிறிய அளவில் பல தீர்த்தங்கரார்களது படிமங்கள் உள்ளன. இவை அனைத்தும் நின்ற கோலத்தில் ஆடையின்றிக் காட்சியளிக்கின்றன. இவற்றுள் சற்று பெரிதாகவும் அழகுடையதாகவும் திகழ்வது பார்சுவநாதர் படிமமாகும். பார்சுவநாதரின் அமைதியான முகம், மூடிய கண்கள், வடிக்கப்பட்ட காதுகள், பரந்த மார்பு இவையனைத்தும் சிறப்புற அமைக்கப்பட்டுள்ளன. இத் தீர்த்தங்கரார் படிமங்கள் மட்டுமின்றி

சர்வானா, தர்மதேவி ஆகியோரது செப்புத் திருமேனிகளும் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் விசய நகர கால கலைப்பாணியில் உருவாக்கப்பட்டவையாகும்.

திருப்பருத்திக்குன்றம் கோயிலில் ஏராளமான படிமங்கள் இன்றளவும் வழிபாட்டிலுள்ளதைக் காணலாம். இவை பிரம்மயக்ஷர், பத்மாவதி, சர்வானா, தரனேந்திரர், தர்மதேவி, மாதாங்கா, வர்த்தமானர், சித்தாயினி, சுவாலமாலினி, சரஸ்வதி, பாகுபலி, அனந்தநாதர் முதலியோரைக் குறிப்பவையாகும். பார்சுவநாதர் படிமம் பத்மபீடத்தில் நின்றவண்ணம் ஆடையின்றித் திகழ்கிறது. இவரது தலைக்கு மேற்பகுதியில் படம் விரித்தநிலையிலுள்ள பாம்பு காணப்படுகிறது. பத்மாவதி யக்ஷி நாற்கரங்களையுடையவளாய், அவற்றில் அஞ்குசம், பாசம், பழம், மலர் ஆகியவற்றைக் கொண்டுள்ளாள். இவளது தலையிலுள்ள மகுடத்தின் முற்பகுதியில் தீர்த்தங்கரரின் உருவம் சிறிய அளவில் பொறிக்கப்பட்டுள்ளது. இம் மகுடத்திற்கு மேலான ஐந்து தலை நாகம் அழகுற படம் விரித்தவண்ணம் காணப்படுகிறது. பன்னிருகரங்களுடைய சித்தாயினி யக்ஷி, அவற்றில் சங்கு, சக்கரம், பாசம், வில், மலர், அக்கமாலை, சுவடி முதலியவற்றைப் பெற்றுள்ளாள். இவளது திருமேனியினை மகுடம், குண்டலங்கள், கேயூரம், அட்டிகை முதலிய அணிகலன்கள் அலங்கரிக்கின்றன. இச்செப்புத் திருமேனி அமைப்பினில் துர்க்கையினை ஒத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சுவாலமாலினியம்மன் எட்டு திருக்கரங்களையுடையவளாய் எருதுவாகனத்தின் மீது வைக்கப்பட்டுள்ள பீடத்தில் வீற்றிருக்கிறாள். இவளது கரங்கள் சங்கு, சக்கரம், அம்பு, வில், வாள், கேடயம் முதலிய படைக்கலன்களையும், அபய, வரத முத்திரைகளைப் பெற்றும் விளங்குகின்றன. தலையிலுள்ள கிரீட மகுடத்தின் முற்பகுதியில் சந்திரபிரபா தீர்த்தங்கரரது சிறிய உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. கிரீடமகுடத்தின் இருமருங்கிலும் உள்ள சுவாலகேசங்கள், கடைவாயினின்றும் வெளிவந்துள்ள கோரைப்பற்கள் முதலிய அமைப்புகள் இந்து சமயத்திலுள்ள காளியின் படிமங்களிலுள்ளவை போன்றுள்ளன. அனந்தநாதர், பாகுபலி, வர்த்தமானர் ஆகியோரது திருவுருவங்கள் பீடங்களில் நின்ற வண்ணம் திகழ்கின்றன. பாகுபலியின் கால்களையும், கைகளையும் சுற்றி இலைகளுடன் கூடிய

கொடி அமைப்பினைக் காணலாம். இம்மூன்று தீர்த்தங்கரர் படிமங்களின் மார்பில் இடதுபுறம் முக்கோணவடிவமான ஸ்ரீவத்ஸம் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். திருப்பருத்திக் குன்றத்திலுள்ள படிமங்களுள் அழகுவாய்ந்தது தர்மதேவியின் செப்புத் திருமேனியாகும். இருகரங்களுடைய இத்தேவியின் வலதுகை மலர் ஒன்றைப் பெற்றும், இடதுகை தொங்கவிடப்பட்டும் உள்ளன. இவளது திருமேனியில் அழகிய மகுடம், கேயூரங்கள், மகரகுண்டலங்கள், அட்டிகைகள் முதலிய பல்வேறு அணிகள் காணப்படுகின்றன. சற்று புன்னகை பூத்தமுகமும், பருத்துத் திரண்ட மார்பகங்களும், ஒடுங்கிய இடையும், தசை மடிப்பினையுடைய வயிற்றுப்பகுதியும் இப்படிமத்திற்கு உயிரூட்டுவனவாகத் திகழ்கின்றன. இவள் நிற்கும் பீடத்தி முன்பகுதியில் சிங்க வாகனம் சிறியதாக வடிக்கப்பட்டுள்ளது.

போளூர் தாலுகாவில் தச்சாம்பாடியிலுள்ள சமணக் கோயிலில் ரிஷபநாதர், சுபார்சுவநாதர், சாந்திநாதர், நேமிநாதர், பார்சுவநாதர், தர்மதேவி, பத்மாவதி ஆகியோரது படிமங்கள் காணப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட உலோகத் திருமேனிகளன்றி சென்னை அருங்கலைக்கூடத்தில் போளூர், சிங்காணிக்குப்பம், சிவகங்கை, கிடங்கல் முதலிய ஊர்களிலிருந்து கொண்டுவரப்பட்ட படிமங்கள் இடம் பெற்றுள்ளன. போளூரிலிருந்து கொணரப்பட்ட கி.பி.11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சந்திரபிரபா தீர்த்தங்கரரது திருவுருவம் தியான முத்திரையில் அமர்ந்தவண்ணம் காட்சியளிக்கிறது. தீர்த்தங்கரரின் இருமருங்கிலும் சாமரம் வீசுவோர் உள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த **சிவகங்கை**யிலிருந்து கொண்டுவரப்பட்ட தீர்த்தங்கரர் உலோகத் திருமேனி கி.பி.12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். யோக நிலையிலிருக்கும் தீர்த்தங்கரரது திருவுருவத்தில் ஆடை, அணிகலன்கள் எவையும் இல்லை. ஆனால் இவருக்கு இருமருங்கிலும் உள்ள சாமரம் வீசுவோர்அழகிய வேலைப்பாடுடைய அணிகலன்களைக் கொண்டுள்ளனர்.

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள **சிங்காணிக் குப்பத்திலிருந்து** ஐந்து படிமங்கள் அருங்கலைக்கூடத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை மகாவீரர், நின்ற கோலத்திலுள்ள இரு

அதிக அலங்கார வேலைப்பாடுகளுடன் திகழ்ந்த போதிலும் மிகுந்த கலைத்திறமையுடையனவாகக் காணப்படவில்லை.

பொதுவாக சமணசமய சிற்பங்கள், படிமங்கள் ஆகியவற்றின் காலத்தினை எளிதில் கூற இயலாது. ஏனெனில் கலைப் பாணியினை விளக்கிக் காட்டும் ஆடை, அலங்கார அமைப்புகள், தீர்த்தங்கரர் திருவுருவங்களில் இடம் பெறுவதில்லை. ஆனால் தீர்த்தங்கரர் திருவுருவங்களுடன் காணப்படும் சாமரை வீசுவோர் முதலிய பணியாட்களின் மேனியில் ஆடைகளும், அலங்கார வேலைப்பாடுகளும் உள்ளன. இவற்றின் அடிப்படையில் தான் அவற்றின் காலத்தினை ஓரளவு சரியாகக் கணித்தல் இயலும். சில சிற்பங்கள், படிமங்கள் ஆகியவற்றின் பீடத்தில் அவற்றின் பெயர்கள் அல்லது அவற்றை உருவாக்க ஏற்பாடு செய்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளதால், அவ்வெழுத்துக்களின் வரிவடிவத்தினை அடிப்படையாகக் கொண்டும் அத்திருவுவங்களின் காலத்தினைக் கணக்கிட முடிகிறது. பொதுப்படையாகக் கூறின், பெரும்பாலான இந்து சமயச் சிற்பங்கள் காலத்திற்கேற்ப மாறுபட்ட ஆடை அலங்காரங்களைக் கொண்டிருப்பதால் அவற்றின் கலைப்பாணியினைக் கொண்டு காலத்தை எளிதில் கூறுவது போன்று ஆடை, அலங்காரங்கள் அதிகமற்ற சமண, புத்தசமய சிற்பங்கள், படிமங்களின் காலத்தினை சுலபமாக வரையறுத்தல் இயலாது.

## அடிக்குறிப்புகள்

1. சிலம்பு 11:1-4.
2. ARE 28/1940-41.
3. 311/1938-39.
4. 312/1938-39.
5. 396/1914.
6. 416/1929.
7. 319/1939-40.
8. 311/1939-40.

# 6. சமண சமய ஓவியங்கள்

பண்டைத் தமிழ் மக்கள் நம் நாட்டில் ஏராளமான கோயில்களைத் தோற்றுவித்து அவற்றில் சிற்பங்கள், ஓவியங்கள் ஆகியவற்றைச் சமைத்துக் கலைக் கருவூலங்களாகத் திகழச் செய்துள்ளனர். இந்து சமயக் கோயில்களில் சைவ, வைணவ புராண, இதிகாசங்களை அடிப்படையாகக் கொண்ட சிற்பங்கள், ஓவியங்கள் இடம் பெற்றிருத்தல் போன்று, சமண சமயக் கோயில்கள் சிலவற்றில் இச்சமய புராணங்களில் வரும் நிகழ்ச்சிகள் ஓவியங்களாகத் தீட்டப் பெற்றிருக்கின்றன. முன்பிருந்த பல ஓவியங்கள் காலப்போக்கினாலும், சரிவர பாதுகாக்கப் படாமையாலும் அழிந்துபோயின. தற்போது எஞ்சியுள்ள ஓவியங்கள் காலச் சுழலின் கரங்களினின்று தப்பிய போதிலும் பெரும்பாலும் அவை சிதைந்த நிலையிலே காணப்படுகின்றன.

தமிழக ஓவியக் கலையினைப் பற்றிய செய்திகள் சங்க நூற்களில் இடம் பெற்றிருந்த போதிலும், அக்கால ஓவியங்கள் எவையும் நமக்குக் கிடைத்தில. தொண்டை நாட்டை ஆட்சி புரிந்த பல்லவர் காலத்தில் இந்து சமயக் கோயில்கள் பல கட்டப்பட்டு, அவை ஓவியங்களைக் கொண்டவையாய்த் திகழ்ந்தமைக்குக் காஞ்சி, பனமலை முதலிய இடங்களிலுள்ள சைவக் கோயில்கள் சான்றுகளாகத் திகழ்கின்றன. ஆனால் இப் பல்லவ பேரரசர்கள் காலத்தில் சைன காஞ்சி முதலிய இடங்களில் சமணக் கோயில்கள் கட்டப்பட்டிருந்த போதிலும், அவற்றில் சமண சமய கருத்துக்களைக் கொண்ட பல்லவர் கால ஓவியங்கள் தீட்டப்பெற்றிருந்தனவா என்று உறுதியாகக் கூறுவதற்குத் தற்போது சான்றுகள் எவையும் இல்லை. பல்லவ மன்னர்களுக்குப் பின்னர் தமிழகத்தை அரசோச்சிய பாண்டிய, சோழ, விசய நகர அரசர்கள் காலத்தில் பல சமண சமயக் கோயில்கள் உருவாக்கப்பட்டும், முன்பிருந்த கோயில்களில் புதியதாக மண்டபங்கள் தோற்றுவிக்கப்பட்டும் உள்ளமையைக் காணலாம். அக்காலக் கோயில்கள் சிலவற்றிலும், மண்டபங்களிலும் சமண சமய ஓவியங்கள்

தீட்டப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் குறிப்பாக சித்தன்னவாசல், திருமலை, சைன காஞ்சி முதலிய இடங்களிலுள்ள கோயில்களில் பாண்டிய, சோழ, விசய நகர அரசர்கள் கால ஓவியங்கள் இன்றளவும் இடம் பெற்றிருத்தலைக் காணலாம்.

## சித்தன்னவாசல் ஓவியங்கள்

புதுக்கோட்டையிலிருந்து ஒன்பது கல் தொலைவில் சித்தன்ன வாசல் என்னுமிடத்திலுள்ள குடைவரைக் கோயிலில் பாண்டியர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. முன்னர் இவ் வோவியங்கள் பல்லவ பேரரசனான முதலாவது மகேந்திரவர்மன் காலத்தவை என அறிஞர்கள் கருதி வந்தனர். ஆனால் இக் குடைவரைக் கோயிலிலுள்ள கல்வெட்டொன்று ஸ்ரீவல்லபன் என்னும் பாண்டிய மன்னன் காலத்தில் மதுரை ஆசிரியன் இளங்கௌதமன் என்பவரால் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டதெனக் குறிப்பிடுகிறது. ஈண்டுக் குறிப்பிட்டுள்ள பாண்டி மன்னன் கி.பி.9-ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவனாதலின் இவ்வோவியங்களும் இம் மன்னன் காலத்தைச் சார்ந்தனவெனக் கருதப்படுகின்றன.

சித்தன்னவாசல் குடைவரைக் கோயிலுள்ள மண்டபத்திலும், இதனைத் தாங்கி நிற்கும் தூண்களிலும் கலைச்சிறப்புமிக்க ஓவியங்கள் காணப்படுகின்றன. மண்டபத்தின் மேல் விதானத்தில் தாமரை மலர்கள் நிறைந்த பொய்கையொன்று அழகுறச் சித்தரிக்கப்பட்டுள்ளது. இது சமண இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள சமவசரணக் காட்சியைப்பற்றியதாகும். தாமரை, அல்லி, ஆம்பல் முதலிய மலர்கள் நிறைந்த கொடிகளும், பொய்கையின் தண்ணீரைத் துழாவிச் செல்லும் அன்னப்பறவைகளும், மீனினங்களும் கண் கொள்ளாக் காட்சியாகத் திகழ்கின்றன. இவையன்றி தாமரைத் தண்டுகளைத் துதிக்கையால் ஒடித்து விளையாடும் யானைகளும், நீராடும் பொருட்டு தண்ணீரில் மூழ்கும் எருமைகளும் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன. மேலும் இத்தாமரைத் தடாகத்தில் மூன்று ஆடவர் ஓவியங்களும் உள்ளன. ஒருவர் இடது கையினால் பூக்கூடை ஒன்றினைப்பிடித்து வலது கையால் தாமரை மலர்களைக் கொய்த வண்ணம் காணப்படுகிறார். மற்றிருவருள் ஒருவர் தாமரை மலர்களைக் கையிலும், அடுத்தவர் தோளிலும்

வைத்துள்ளனர். இவ்வாடவர்கள் கோவண ஆடை உடுத்தியிருப்பதாலும், ஓவியங்கள் சமண இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள காட்சியாக இருப்பதாலும், சித்தன்னவாசல் சமணக் குடைவரைக் கோயிலாக இருப்பதாலும் மேற்குறிப்பிட்டுள்ள ஆடவர் ஓவியங்கள் சமண சிராவகர்களைக் குறிப்பவையாக இருத்தல் வேண்டும்.

மண்டபத் தூண்களில் இரு நாட்டிய மகளிரின் எழிலோவியங்கள் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். ஒரு நடனமாதின் வலதுகை அபயமுத்திரையைக் குறித்தும், இடது கை மார்புக் கெதிராக 'கஜஹஸ்த' நிலையில் தொங்கவிடப்பட்டும் காணப்படுகின்றன. இரண்டாவது நாட்டிய மங்கையின் வலது கை அபயமுத்திரையைக் குறிப்பதாகவும், இடதுகை சற்று மேல் நோக்கி இடதுபுறம் தூக்கப்பட்டும் உள்ளன. இவர்களது மேலாடை மிகவும் மெல்லியதாகத் தோன்றுமாறு தீட்டப்பட்டிருப்பது கலைத் திறமைமிக்க ஓவியனின் கை வண்ணத்திற்குச் சான்றாகத் திகழ்கிறது. ஆடல் மகளிரின் அழகு மேனிகளை முத்தாரங்கள், குண்டலங்கள், கங்கணங்கள், மோதிரங்கள் முதலிய பல்வேறு அணிகலன்கள் அலங்கரிக்கின்றன.

மண்டபத்தின் வலது புறமுள்ள தூணில் அரசன், அரசி ஆகியோரைக் குறிக்கும் ஓவியங்கள் காணப்படுகின்றன. அரசன் அழகிய மணிமகுடம், குண்டலம், முத்துமாலைகள், கேயூரங்கள் முதலியனவற்றை அணிந்துள்ளான். அரசியின் திருமேனியிலும் வனப்புமிக்க அணிகலன்கள் காணப்படுகின்றன. இக்கோயிலிலுள்ள கல்வெட்டு ஸ்ரீவல்லப பாண்டியன் காலத்தைச் சார்ந்ததால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசன், அரசி ஓவியங்கள் பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபனையும், அவனது பட்டத்தரசியையும் குறிப்பவையாக இருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வரசன் இந்து சமயத்தைச் சார்ந்தவனாயிருப்பினும், சமண சமயத்திற்கு ஆதரவளித்திருப்பானாதலால், இவனது ஓவியமும் தீட்டப்பெற்றிருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறில்லை. மேற்கூறப்பட்டுள்ள ஓவியங்களின்றி வேறு சில ஓவியங்கள் இருந்ததமைக்குச் சான்றாக சிதைந்த நிலையிலுள்ள மென்கோடுகளும், வண்ணங்களும் காணப்படுகின்றன. இவ்வோவியங்கள் மேலும் அழிந்து விடாமலிருக்க மத்திய அரசு தொல்லியல் துறையினர் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

சித்தன்னவாசல் ஓவியங்களில் வெளிப்புறக்கோட்டிற்கு கறுப்பு நிறமும், பிறபகுதிகளில் சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, பச்சை ஆகிய வண்ணங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்குள்ள ஓவியங்கள் சுவரின் மீது சுண்ணக் கலவை பூசி, அது உலருமுன் வரையப்பட்டவையாகும். நாட்டிய மாடும் மகளிர், தாமரைத் தண்டுகளை ஒடித்துவிளையாடும் யானைகள், தண்ணீரைத் துழாவிச் செல்லும் அன்னங்கள் ஆகியவை உடலசைவினைக் (Movement) கொண்டவையாய் உயிரோட்டம் பெற்றுத் திகழ்கின்றன. தாமரை மலர்களைத் தம் கரங்களிலேந்தியவர்களின் முகத்தில் அமைதி, ஞானம் என்னும் அருங்குணங்களைக் காணலாம். நன்கு மலர்ந்த தாமரை மலர்கள், சில இதழ்கள் மட்டிலும் விரிந்த மலர்கள், அரும்புகள், இலைகள் முதலியவை ஓவியங்களில் இயற்கையாக உள்ளவை போன்று காணப்படுவது குறிப்பிடத் தக்கதாகும்.

## திருமலை ஓவியங்கள்

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருமலையில் சோழப் பேரரசியாகிய குந்தலைப் பிராட்டியார் குந்தவை சினாலயம் என்னும் சமணக் கோயிலைத் தோற்றுவித்து, அதற்கு ஏராளமான பொன்னும், பொருளும் கொடுத்துள்ளமை கல்வெட்டுகள் வாயிலாக அறியப்படும் செய்தியாகும். இக்கோயிலில் சோழர் கால ஓவியங்கள் சில மிகவும் சிதைந்த நிலையிலுள்ளன. தற்போது எஞ்சியுள்ள ஓவியங்களுள் தாமரை மலர்கள், செடி கொடிகள் போன்றவை மட்டிலும் ஓரளவு நன்னிலையிலுள்ளன. இவ்வோவியங்களின் முடிவான உட்கருத்து இன்னதெனக் கூறுவதற்கில்லையெனினும், இவை சமவசரணக் காட்சியினை அடிப்படையாகக் கொண்டவை என அறிஞர்கள் கூறுகின்றனர். மேற்கூறப்பட்டவையன்றி பிற சோழர் காலத்து சமண சமய ஓவியங்கள் இருந்ததமைக்குத் தற்போது சான்றுகள் எவையும் இல்லை.

## சைன காஞ்சி ஓவியங்கள்

காஞ்சி மாநகரின் தென்மேற்குப் பகுதி சைன காஞ்சி எனவும், திருப்பருத்திக்குன்றம் எனவும் பெயர் பெறும். பல்லவர் காலத்திலிருந்தே

திருப்பருத்திக்குன்றம் சமண சமய தலமாக விளங்கியமையும், இங்குள்ள கோயிலுக்குப் பல்லவப் பேரரசனாகிய சிம்மவிஷ்ணு தானம் வழங்கியமையும் பள்ளன் கோயில் செப்பேட்டினால் அறிய வருகிறோம். தற்போது சைன காஞ்சியிலுள்ள வர்த்தமானர் கோயில் சோழ–விசயநகர கலைப்பாணியில் அமைந்துள்ளது. இக்கோயிலில் விசயநகர கலைப்பாணியில் அமைந்துள்ளது. இக்கோயிலில் விசயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட முகமண்டபம், சங்கீத மண்டபம் ஆகியவற்றின் மேற்கூரைகளில் வரிசை வரிசையாக ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் காணலாம். இவற்றின் அடிப்பகுதியில் அவை என்னென்ன நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன என்பதன் விளக்கங்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டிருப்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். இக்கோயிலிலுள்ள ஓவியங்கள் காலப்போக்கினாலும், சரிவர கண் காணிக்கப்படாமையாலும் பல பகுதிகளில் சிதைந்து காணப்பட்டன. தற்போது பெரும்பாலான ஓவியங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இங்குள்ள விசயநகர கால ஓவியங்கள் முக்கியமாக சமண தீர்த்தங்கரர்களாகிய ரிஷபநாதர், வர்த்தமான மகாவீரர், நேமிநாதர் முதலியோரது வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிப்பனவாக உள்ளன. இவையன்றி அம்பிகா யக்ஷியின் வாழ்க்கையினை விளக்கும் ஓவியங்களும் இருவரிசைகளாகத் தீட்டப்பட்டுள்ளன.

ரிஷபநாதரது வாழ்க்கையினைச் சித்தரிக்கும் முதற்தொகுதியில் சிம்மபுரிமன்னாகிய ஸ்ரீசேனனும், அவனது பட்டத்தரசியாகிய சுந்தரியும் இனிது வீற்றிருப்பதைக் காணலாம். அடுத்து மன்னது இரண்டாவது மைந்தனாகிய ஜெயவர்மன் சுவயம்பிரபா என்னும் சமண முனிவரது அறவுரையால் துறவற வாழ்க்கையை மேற்கொள்வதும் தீட்டப்பட்டுள்ளன. ஜெயவர்மன் அரச ஆடைகள், மணிமகுடம் ஆகியவற்றைத் துறந்து, மரத்தடியின் கீழ் வீற்றிருக்கும் மாமுனிவர் சுவயம்பிரபாவினை வணங்கிய வண்ணம் காணப்படுகிறான். அரச வாழ்வைத் துறந்து துறவறம் நோற்ற ஜெயவர்மன் தவம் புரியுங்கால், இல்லற வாழ்வின் இனிமையான எண்ணங்களை நினைவில் கொண்டமையால் அருகிலுள்ள புற்றிலிருந்த பாம்பொன்றினால் கடித்து இறந்துவிடுகிறான். இதனை ஜெயவர்மனுக்கு அருகில் படம் விரித்த நிலையில் சீற்றத்தோடு நோக்கும் பாம்பு நமக்கு உணர்த்துகிறது.

அடுத்துள்ள ஓவியம் மரணமெய்திய ஜெயவர்மன் மறுபிறப்பில் மகாபலன் என்னும் வித்தியாதர மன்னாகப் பிறந்து அரசோச்சுவதையும், பின்னர் அவனது வாழ்வின் இறுதி காலத்தில் மெய்ஞான வழியடைய சித்த கூடத்திலுள்ள சமண கோயிலை வணங்கி எட்டுவகை விரதங்களை மேற்கொள்வதையும் குறிக்கின்றது. மற்றொரு பகுதியிள்ள ஓவியங்கள் மகாபலன் அடுத்துவரும் யுகங்களில் லலிதாங்கன், வஜ்ரசங்கள் ஆகியவர்களாகப் பிறந்தமையைப் பற்றியவையாகும். இதனை யடுத்தாற் போன்று வஜ்ரசங்கனும், அவனது மனைவியும் இரு சமண முனிவர்களிடம் அறம்கேட்டமை அழகுறக் காட்சியளிக்கிறது. வஜ்ரநாபியாக மறுபிறவி எடுத்த ஜெயவர்த்தனன் தன் அரசியருடன் அமர்ந்த வண்ணமும் அவனது வணிக நண்பர்களாகிய அபராசிதன், ஜயந்தன், வைஜயந்தன் ஆகியோர் யானையின் மேல் செல்வதாகவும், இன்னும் சிலர் குதிரை மேலிருந்து செல்வதாகவும் அடுத்தடுத்து ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன, இறுதியில் வஜ்ரநாபி தவமியற்றித் தன்னுயிரை மாய்த்தமையையும் காணலாம். இவற்றிற்கு அடுத்துள்ள தொகுதியில் ரிஷபதேவரின் தந்தையான நாபி மகாராஜன், தாய் மருதேவியார் ஆகியோர் ஓவியங்களும், மருதேவியார் துயிலும் போது கண்ட கனவில் தோன்றிய யானை, எருது, சிங்கம், கஜலட்சுமி, மலர் மாலைகள், சந்திரன், சூரியன், மீன், கடல், தாமரைத் தடாகம், கலசங்கள், இரதம், சிம்மாசனம் முதலியவற்றின் ஓவியங்களும் உள்ளன. இவையனைத்தும் ரிஷபநாதர் பிறப்பதற்குரிய நன்னிமித்தச் சின்னங்கள் என்பதனை விளக்குவனவாகும். பின்னர் கருவுற்ற அரசி ரிஷபதேவரை ஈன்றெடுத்தல், பிறந்த குழந்தையினை இந்திரன் ஐராவதத்தின் மீதேறிச் சென்று காணுதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இளமைப்பருவம் எய்திய ரிஷபநாதர்தன் பெற்றோர்களது விருப்பத்திற்கிணங்க திருமணம் புரிந்து, அரசோச்சும் உரிமையும் பெற்று திரைலோக்யநாதர் என்னும் பெயர் பெற்றார். ஆனால் சிறிது காலத்தில் இல்லற வாழ்வில் வெறுப்புற்ற ரிஷபதேவர் சுதர்சனம் என்னும் விமானத்தில் ஏறி கானகம் நோக்கிப் புறப்பட்டு, சித்தார்த்தவனத்திலுள்ள ஆலமரத்தடியினில் அமர்ந்து தவம்புரிகிறார். துறவறம் பூண்ட ரிஷபநாதரிடம் அவரது, மைந்தர்கள் நாட்டினைத்

தங்களுக்கு வழங்குமாறு கேட்டால், அஸ்தினாபுரத்தை ஆண்ட சோமபிரபா என்னும் மன்னன் கண்ட நற்கனவும், அந்நன்னிமித்தத்தால் ரிஷபநாதர் அஸ்தினாபுரிக்குச் செல்லுதல், அரசன் அவரை வரவேற்று உணவளித்தல், மறுபடியும் ரிஷபநாதர் காட்டிற்குச் சென்று கடு நோன்பியற்றித் தன் ஊனுடம்பை ஒழித்தல் முதலியன பற்றிய ஓவியங்கள் வரிசையாகக் காணப்படுகின்றன. இவற்றை ஒட்டி சமவசரணம் என்னும் இயற்கையான தாமரைத் தடாகக் காட்சி எழிலுடன் திகழ்கிறது.

வர்த்தமானரது வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் ஓவியங்கள் இருபத்தேழு வரிசைகளாகக் காணப்படுகின்றன. வர்த்தமானர் பிறப்பதற்கு முன்னர் அவரது தாய் கண்ட கனவு, வர்த்தமானர் பிறப்பு, அக்குழந்தையை இந்திரன் காணச் செல்லுதல், பிறப்பின் மகிழ்ச்சியால் நாட்டியமாடும் மகளிர், மகாவீரர் துறவறம் நோற்றல், தவமியற்றுதற்காக நாதசண்டா என்னும் வனத்தை அடைதல், தவமியற்றுதல் முதலியன அழகுறத் திகழ்கின்றன. இப்பகுதியில் வர்த்தமானரது தோற்றத்தால் மகிழ்வுற்று நடனமாடும் மங்கையர், தாள ஒலியினை எழுப்பும் பிற இசைக்கலைஞர்கள் ஆகியோரது ஓவியங்கள் சிறப்பு மிக்கவையாகும். வர்த்தமானரது வாழ்க்கையைச் சித்தரிக்கும் சில ஓவியங்களும், ரிஷபநாதர் பிறப்பு, துறவறம் பூணுதல் முதலியன பற்றிய சில சித்திரங்களும் ஒத்த அம்சங்களை உடையனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வோவியங்களுக்கு அடுத்தாற்போன்று நேமிநாதர், கிருஷ்ணன் ஆகியோரது வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. வைணவ சமயத்தில் கிருஷ்ணனுக்கு முக்கிய இடமளித்திருப்பது போன்று, சமணத்திலும் கிருஷ்ணன் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். கம்சமன்னன், அவனது தங்கையாகிய தேவகிக்கும், வாசுதேவருக்கும் நடந்த திருமணம், தேவகிக்குக் கண்ணன் பிறந்தமை, பலதேவன் அம்மகவினை எடுத்துக்கொண்டு நந்தகோபானிடம் கொடுத்தல் முதலியனவும், கண்ணனைக் கொல்லுதற் பொருட்டு கம்சன் எடுத்த முயற்சிகள், அவற்றைக் கண்ணபிரான் வெல்லுதல், குன்றெடுத்து கோவலர்களையும், ஆநிரைகளையும் காத்தல், தன்னைக் கொல்லவந்த

யானையுடன் பொருதல், பாம்பினை அடக்குதல், மல்லர்களுடன் சண்டையிடுதல், கம்சனை அழித்தல் முதலியன சிறப்புமிக்கவையாகும். அடுத்து நேமிநாதர் பிறப்பு, வளர்ப்பு, உலக வாழ்க்கையினை வெறுத்து துறவறம் பூணுதல், மெய்யறிவு பெறுதல் முதலியனப் பற்றிய ஓவியங்கள் காணப்படுகின்றன. இவ்வோவியங்களில் சிலவும் வர்த்தமானரின் வாழ்க்கையினைச் சித்தரிக்கும் ஓவியங்களைப் போன்று காணப்படுவது ஓர் சிறப்பம்சமாகும். இறுதியாக, தமிழகத்தில் சிறப்புற வழிபடப்பட்டு வந்த யக்ஷிகளுள் ஒன்றாகிய தர்மதேவி என அழைக்கப்பெறும் அப்பிகாவின் வாழ்க்கை வரலாறும் சைனகாஞ்சி கோயில் மண்டபத்தில் இரண்டு வரிசைகளாகத் தீட்டப்பெற்றுள்ளன.

இதுகாறும் கூறப்பட்ட சமணசமய ஓவியங்களுள் காலத்தால் முற்பட்ட சித்தன்னவாசல் சித்திரங்கள் இந்திய ஓவியக்கலை வரலாற்றில் ஓர் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இவ்வோவியங்களின் சில அமைப்புகள் உலகப் புகழ்பெற்ற அஜந்தா ஓவியங்களை ஒத்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இயற்கையில் கண்ணுறும் கவின்மிகு காட்சிகளைக் கலைஞன் தன் மனதில் பதியவைத்துப்பின்னர் அவற்றை ஓவியங்களாக (Memory pictures) வடிவமைத்துள்ளமைக்குச் சித்தன்னவாசல் தாமரைத் தடாகக் காட்சி சிறந்த எடுத்துக்காட்டாகும். காஞ்சியிலுள்ள ஓவியங்கள் வரிசை வரிசையாகவும், அமைப்பில் சிறியனவாகவும் வடிக்கப்பட்டுள்ளன. மானிட உருவங்களைக் குறிக்கும் ஓவியங்கள் பல ஒருபுறம் நோக்கியவையாகவும் (Profile) அவற்றின் மூக்கு சற்று கூர்மையாகவும், கண்கள் நன்கு தீட்டப்பெற்றனவாகவும் விசயநகர கால சிற்பங்களின் அமைப்புக்களை உடையனவாக இருக்கின்றன. இவற்றில் ஆடை, அலங்கார வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. விசயநகர காலசிற்பங்களிலும் இத்தகைய ஆடை, அலங்காரம் முதலியனவற்றை அறிய சிற்பங்களைப் போன்று இவ்வோவியங்களும் துணைபுரிகின்றன. ஆனால் கலைச்சிறப்பினைப் பொறுத்தவரை இவ்வோவியங்கள் சித்தன்னவாசல் ஓவியங்களைப் போன்று மிகவும் உயரிய கலைத்திறமை உடையனவாகத் திகழவில்லை.

# 7. சமண திருவுருவ விளக்கம்

ஆதிகாலத்தில் மனிதன் இயற்கைச் சக்திகளை கடவுளெனக் கருதியபோதிலும், அவற்றிற்குக் குறிப்பிட்ட வடிவங்களைக் கொடுத்து வழிபடவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல மக்கள் இச்சக்திகளுக்கு மானிட வடிவத்தினைக் கொடுத்தது மட்டுமின்றி அவற்றின் பெருமைகளையும், வலிமையினையும் போற்றிப் புராணங்கள் பல படைத்துள்ளனர். இறைமை பற்றிய உயர்ந்த எண்ணங்கள் மனிதன் மனதில் வேரூன்றிப் பல சமயங்களாக உருவெடுத்தபோது, அந்தந்த சமயத்தைச் சார்ந்த கோயில்களும் தோற்றுவிக்கப்படலாயின. இக்கோயில்களில் கலையம்சமும், தெய்வத்தன்மையும் நிறைந்த திருவுருவங்களை நிறுவி அவற்றிற்குச் சிறப்பு வழிபாடு, திருவிழா முதலியன எடுத்து மகிழ்ந்துள்ளனர். இத்திருவுருவங்கள் எத்தகைய அமைப்புகளை உடையனவாக இருத்தல் வேண்டும் என்பது பற்றி சிற்ப நூற்களும் இயற்றப்பட்டுள்ளன. இவையன்றி திருவுருவங்களைப் பிரதிட்டைச் செய்தல், அவற்றின் அமைப்புகள், வழிபாட்டு முறைகள் முதலியன பற்றிச் சமய சார்புடைய இலக்கியங்கள் பல விரிவாகக் கூறுகின்றன. இச்சமய நூற்கள் தீர்த்தங்கரர், யக்ஷர், யக்ஷி, பிற பரிவார தேவதைகள் ஆகியோரது திருவுருவக் குறிப்புகளைக் கொண்டவையாய் விளக்குவதைக் காணலாம்.

## புத்தர் திருவுருவமும், சமண திருவுருவமும்

பொதுவாக அமர்ந்த நிலையிலுள்ள புத்தர் சிற்பங்களும், யோக நிலையிலுள்ள சமண தீர்த்தங்கரர் திருவுருவங்களும் ஒத்த அமைப்புகள் சிலவற்றைக் கொண்டவையாக இருப்பதால், அவை எந்தச் சமயத்தைச் சார்ந்தவை என்று பொதுமக்கள் எளிதில் அறிந்த கொள்வதற்கில்லை. இதனால் தான் தற்காலத்தல் சமண சிற்பங்களைப் புத்தரைக் குறிக்கும் சிற்பங்கள் என்றும், இந்து சமயச் சிற்பங்கள் எனவும் பாமரமக்கள் வழிபட்டு வருவதைக் காணலாம்.

சமண சமய தீர்த்தங்கரர் சிற்பங்களில் ஆடை இடம் பெறுவதில்லை. ஆனால் புத்தர் சிற்பங்களில் சங்காதி என்னும் ஆடை இடது தோள் வழியாகச் செல்வதைக் காணலாம். தலைமுடி வட்ட வடிவமான அமைப்பினை உடையதாகக் காணப்படும். புத்தர் சிற்பங்களில் தலையின் நடுப்பகுதியில் ஞானத்தைக் குறிப்பதற்கென சுவாலை (நெருப்பு) போன்ற அமைப்பு இடம் பெறும். பெரும்பாலான சமண திருவுருவங்களில் இத்தகைய அமைப்பு காணப்பெறுவதில்லை. தீர்த்தங்கரர் அமர்ந்திருக்கும் பீடத்தில் அவர்களுக்குரிய சின்னம் பொறிக்கப்படுவது வழக்கமாகும். ஆனால் சில சிற்பங்களில் இது இடம் பெறாமலிருப்பதையும் காணலாம். புத்தர் சிற்பங்களது பீடங்களில் சின்னம் பொறித்தல் மரபன்று. முக்குடை அமைப்பு தீர்த்தங்கரர் திருவுருவங்களின் தலைக்கு மேற்பகுதியில் காணப்படுமேயன்றி, புத்தர் சிற்பங்களில் இடம் பெறுவதில்லை.

பார்சுவநாதர் தீர்த்தங்கரரது தலைக்கு மேற்பகுதியிலும், சில யக்ஷர், யக்ஷியர் சிற்பங்களின் தலைக்கு மேலாகவும் படம் விரித்த நிலையிலுள்ள பாம்பினைக் காணலாம். புத்த சமய பிற சிற்பங்கள் சிலவற்றின் இத்தகைய அமைப்பு காணப்பட்ட போதிலும், புத்தரைக் குறிக்கும் கலைச் செல்வங்களின் தலைக்கு மேலாக பாம்பினை அமைப்பது வழக்கமன்று. புத்தர் சிற்பங்கள் பரிநிர்வாண நிலையிலும், தர்மசக்கர முத்திரையிலும், யோக முத்திரையிலும், பூமிஸ்பர்ச முத்திரையிலும், உபதேச முத்திரையிலும் திகழ்கின்றன. ஆனால் தீர்த்தங்கரர் சிற்பங்கள் மிக்கவாறும் யோக நிலையிலோ அல்லது கைகளைத் தொங்கவிட்டவாறு நின்ற கோலத்திலோ காணப்படும். இதுவரை கூறப்பட்ட திருவுருவ மாறுபாடுகள் தென்னிந்திய சிற்பங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஆனால் வட இந்திய சிற்பங்களும் பிற் காலத்தைச் சார்ந்தவை பலவற்றில் வேறுபட்ட அமைப்புகளையும் காணலாம்.

## சமண திருவுருவ அமைப்பு

சமண சமய புராணங்களிலும், சிற்ப நூற்களிலும் தீர்த்தங்கரர், யக்ஷர், யக்ஷி, பிறதெய்வங்கள் ஆகியோரின் திருவுருவ அமைப்புகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பொதுவாகத் தீர்த்தங்கரர்களை

நின்ற கோலத்திலும், அமர்ந்த வண்ணமும் அமைப்பது வழக்கமாகும். தீர்த்தங்கரர் சிற்பத் தொகுதியினில் சாமரம் வீசுவோர் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

தீர்த்தங்கரர் திருவுருவங்களில் தேவர்கள் அமைத்த எண்வகை சிறப்புகளில் மூன்றினை தவிர மற்ற ஐந்தும் அமைக்கப்படுதல் மரபு. எண்வகை சிறப்புகளாகவன : அசோகம் (பிண்டி), முக்குடை, பிரபாமண்டலம், சாமரை, சிங்காசனம், திவ்யதொனி, மலர்மாரி, துந்துபி. இவற்றுள் கடைசி மூன்றும் காட்டப்பெற இயலாது. மற்றவை இடம் பெறுகின்றன.

*'சுடர் மண்டலம், சுரதுந்துபி, தெய்வத்துவனி சிங்கப்*
*பிடர்மண்டல அணை, பிண்டி, வெண்சாமரை, பெய்மலரின்*
*அடர்மண்டல மழை, அம்பொற்குடை மும்மையாம் அடியோம்*
*இடர்மண்டலம் கெடுப்பார்க்கு இமையோர் செயும் எண்சிறப்பே.'*

*(திருநூற்றந்தாதி, 80)*

தீர்த்தங்கரர் திருவுருவங்களைத் தனியாகவோ, மூன்றாகவோ அல்லது இருபத்து நான்கு தீர்த்ங்கரர்களையும் ஒரே வரிசையாகவோ செதுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களையும் ஒரே வரிசையாக அமைப்பதனைச் 'சதுர்விம்சதி' என அழைப்பர். எடுத்துக்காட்டாக செஞ்சியிலுள்ள திருநாதர் குன்றில் இத்தகைய இருபத்துநான்கு தீர்த்ங்கரர்கள் ஒரே பாறையில் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

தீர்த்தங்கரர் சிற்பங்கள் ஆடையின்றி நின்றவாறும் அல்லது யோகநிலையில் அமர்ந்த வண்ணமும் திகழும். இவற்றின் தலைக்கு மேற்பகுதியில் பொதுவாக முக்குடை காணப்படும். தனியாக உள்ள சிற்பங்களின் பீடத்தில் தீர்த்தங்கரர்களுக்குரிய சின்னங்கள் சிறியதாக வடிக்கப்பட்டிருக்கும். யக்ஷி, பணியாட்கள் ஆகியவர்களது சிற்பங்களில் ஆடை, அணிகலன்கள், பிற அலங்காரங்கள் முதலியன இடம் பெற்றுள்ளன. யக்ஷிகளின் மகுடத்தில் சிறிய அளவில் தீர்த்தங்கரர்களது உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். சிற்பநூற்படி இவர்களது படிமங்கள் இரண்டு, நான்கு, எட்டு, பன்னிரு கைகளை

உடையதாம். அவற்றில் பல்வேறு படைக்கலன்களையும் கொண்டு விளங்குகின்றன.

## தீர்த்தங்கரர்கள்

சமணசமயத்தில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர்கள் உள்ளனர். இவர்கள் ரிஷபநாதர், அஜிதநாதர், சம்பவநாதர், அபிநந்த நாதர், சுமதிநாதர், பத்மபிரபர், சுபார்சுவநாதர், சந்திரபிரபர், புஷ்பதந்தர் என அழைக்கப்பெறும் சுவிதிநாதர், சீதளநாதர், ஸ்ரேயாம்சநாதர், வசுபூஜ்யர், விமலநாதர், அனந்தநாதர், தர்மநாதர், சாந்திநாதர், குந்துநாதர், அரநாதர், மல்லிநாதர், முனிசுவ்ரதநாதர், நமிநாதர், நேமிநாதர், பார்சுவநாதர், மகாவீரர் ஆகியவர்களாகும். இவர்களன்றி ரிஷபநாதரின் இரண்டாவது மைந்தராகிய பாகுபலியும் தீர்த்தங்கரர்களைப் போல் வழிபாட்டிற் குரியவராகத் திகழ்கிறார். கோமதீஸ்வரர் என அழைக்கப் பெறும் இவர் நின்ற கோலத்தில் ஆடையின்றிக் காட்சியளிப்பார். இவரது கை, கால்களைச் சுற்றிலும் கொடிகள் படர்ந்து காணப்படும்.

இருபத்துநான்கு தீர்த்தங்கரர்கள், அவர்களது சின்னங்களும், யக்ஷர், யக்ஷி ஆகியோரது பெயர்களடங்கிய பட்டியல் பின்வருமாறு :

| | தீர்த்தங்கரர் | சின்னம் |
|---|---|---|
| 1. | ரிஷபநாதர் | எருது |
| 2. | அஜிதநாதர் | யானை |
| 3. | சம்பவநாதர் | குதிரை |
| 4. | அபிநந்தநாதர் | குரங்கு |
| 5. | சுமதிநாதர் | சக்ரவாகம் |
| 6. | பத்மபிரபர் | தாமரைமலர் |
| 7. | சுபார்சுவநாதர் | சுவஸ்திகம் |
| 8. | சந்திரபிரபர் | இளம்பிறை |
| 9. | புஷ்பதந்தர் | முதலை |
| 10. | சீதளநாதர் | அசோகமரம் |
| 11. | ஸ்ரேயம்சநாதர் | காண்டாமிருகம், மான் |
| 12. | வாசுபூஜ்யர் | எருமை |
| 13. | விமலநாதர் | வராகம் |
| 14. | அனந்தநாதர் | கரடி |
| 15. | தர்மநாதர் | வஜ்ரதண்டம் |
| 16. | சாந்திநாதர் | மான் |
| 17. | குந்துநாதர் | ஆடு |
| 18. | அரநாதர் | மீன் |
| 19. | மல்லிநாதர் | கலசம் |
| 20. | முனிசுவிரதர் | ஆமை |
| 21. | நமிநாதர் | நீலதாமரை |
| 22. | நேமிநாதர் | சங்கு |
| 23. | பார்சுவநாதர் | பாம்பு |
| 24. | மகாவீரர் | சிங்கம் |

| யக்ஷன் | யக்ஷி |
|---|---|
| கோமுக யக்ஷன் | சக்ரேஸ்வரி |
| மகா யக்ஷன் | ரோகிணி |
| திரிமுக யக்ஷன் | ப்ரக்ஞப்தி |
| யக்ஷேஸ்வரன் | வஜ்ரசிரிங்கலா |
| தும்புரு | புருஷதத்தா |
| குசுமா | மனோவேகி |
| வரநந்தி | காளி |
| விஜயா | சுவாலாமாலினி |
| அஜிதா | மகாகாளி |
| பிரம்ம யக்ஷன் | மாநவி |
| ஈஸ்வர யக்ஷன் | கௌரி |
| குமார யக்ஷன் | காந்தாரி |
| சதுர்முகன் | வைரோடினி |
| பாதாள யக்ஷன் | அனந்தமதி |
| கின்னர யக்ஷன் | மாநஸி |
| கருட யக்ஷன் | மகாமாநசி |
| காந்தர்வ யக்ஷன் | ஜயா |
| மகோந்திர யக்ஷன் | விஜயா |
| குபேரன் | அபராஜிதா |
| புருஷவரர் | பகுரூபினி |
| வித்யுத்ப்வ | சாமுண்டி |
| சர்வான யக்ஷன் | கூஷ்மாண்டி |
| தரணேந்திரன் | பத்மாவதி |
| மாதாங்கா | சித்தாயிகா |

தமிழகத்தில் இத் தீர்த்தங்கரர்களுள் நேமிநாதர், பார்சுவநாதர், மகாவீரர், ஆகியோர்களே சிறப்புற வழிபடப்பட்டு வந்துள்ளனர். இம் மூவருள்ளும் மகாவீரர் சிற்பங்களே அதிக அளவில் காணப்படுதல் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இவரைக் குறிப்பிடும் சிற்பங்களில் நின்ற கோலத்திலுள்ளவைகளைவிட அமர்ந்தவண்ணம் காட்சியளிக்கும் சிற்பங்களே அதிகமாக உள்ளன.

## யக்ஷர்கள்

தீர்த்தங்கரர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒரு யக்ஷர் யக்ஷி உண்டு. இவர்களைத் தீர்த்தங்கரர்களது பரிவார தெய்வங்கள் என்று கூறுவர். இவர்களின் திருவுருவங்கள் தனியாகவும், தீர்த்தங்கரர்களுடனும் காணப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள கோயில்களில் இவர்களது கற்சிற்பங்களும், உலோகத்திருமேனிகளும் திகழ்வதை இன்றளவும் காணலாம்.

## கோமுக யக்ஷன்

இவர் முதலாவது தீர்த்தங்கரராகிய ரிஷபநாதரது யக்ஷனாகும். எருதினது முகத்தினையுடையவராதலால் கோமுக யக்ஷன் என அழைக்கப் பெறுவார். இவர் நிறம் பொன், இவரது வலது இரண்டு கரங்களில் வரதமுத்திரையும், இடது இரண்டு கரங்களில் பரசும் பாசமும் காணப்படும். தலையிலுள்ள மகுடத்தில் தர்மசக்கரம் பொறிக்கப்பட்டிருக்கும். எருது இவருடைய வாகனமாகத் திகழ்கிறது.

## மகா யக்ஷன்

மகா யக்ஷன் அஜிதநாத தீர்த்தங்கரரது பரிவார தேவதையாகும். இவர் நிறம் பொன். இவரது திருவுருவங்கள் எட்டு கரங்களையுடையதாய், இடது கைகயில் சக்ரம், திரிசூலம், தாமரைமலர், அங்குசமும் வலது கைகயில் வாள், தண்டாயுதம், (Gada) ஈட்டி வரதமுத்திரை முதலியனவற்றைக் கொண்டு விளங்கும். இவரது சிற்பத்தினை நான்கு முகங்களைக் கொண்டதாக அமைப்பது வழக்கம். யானை இவருக்குரிய வாகனம் எனக் கருதப்படுகிறது.

## திரிமுக யக்ஷன்

சம்பவநாதரது யக்ஷனாகிய இவர் கருப்பு நிறம். மூன்று முகங்களையும், மூன்று கண்கள் ஆறுகைகளையும் உடையவர். இவரது இடது திருக்கரங்களில் அங்குசம், சக்கரம், வாளும் வலது கரங்களில் தண்டம், திரிசூலம், கத்தி முதலியன காணப்படும். மயில் இவரது வாகனமாகும்.

## யக்ஷேஸ்வரன்

அபிநந்த தீர்த்தங்கரரின் யக்ஷனாகிய இவர் நான்கு கைகளையுடையவர். இவர் கறுப்பு நிறம், சுவேதம்பர பிரிவினைச் சார்ந்த சிற்பங்களில் பழம், அக்ஷமாலை, கீரிப்பிள்ளை, அங்குசம் முதலின இடம்பெறும். ஆனால் திகம்பரபிரிவினைச் சார்ந்த யக்ஷேஸ்வரர் சிற்பத்தில் இடம் கைகளில் வில், கேடயம் வலது கைகளில் அம்பு, வாள் முதலியனவும் காணப்படும். இவர் யானை மீது இவர்ந்து செல்பவர் எனக்கூறப்படுகிறது.

## தும்புரு

நான்கு கரங்களைக் கொண்ட இவர் சுமதிநாதரது யக்ஷனாகும். இவர் கறுப்பு நிறம். இவர் தம் கைகளில் ஈட்டி, கதை, வரதமுத்திரை, பாசம் பழம் ஆகியவற்றை வைத்திருப்பார். கருடனை இவரது வாகனமாக அமைக்கும் வழக்கம் உண்டு.

## குசுமா

குசுமா என அழைக்கப்பெறும் இவர் பத்மபிரப தீர்த்தங்கரரது யக்ஷனாகும். இவர் கறுப்பு நிறம். நான்கு கரங்களையுடையவராக அமைக்கப்பெறும் இவரது திருவுருவத்தில் வலது புறமுள்ள கைகளில் அபயமுத்திரை, மாலை ஆகியவற்றையும், இடதுபுறகரங்களில் கேடயம் அபயமுத்திரை முதலியவற்றையும் காணலாம். சில சிற்பங்களில் இவற்றிற்குப் பதிலாக ஈட்டி, அபய, வரத முத்திரைகள், கேடயம் ஆகியவற்றையும் அமைத்தல் வழக்கமாகும். பொதுவாக மான் இவரது வாகனம் என்று கூறப்படுகிறது.

## வரநந்தி

சுபார்சுவநாதரது யக்ஷனாகிய இவரை சுவேதம்பரர் மாதாங்கா எனவும், திகம்பரர் வரநந்தி எனவும் அழைப்பார்கள். இவர் கறுப்பு நிறம். சுவேதம்பர பிரிவைச் சார்ந்த நான்கு கரங்களுடைய சிற்பத்தில் வில்வமரத்தின் பழம், பாசம், கீரிப்பிள்ளை, அங்குசம் முதலியனவும், திகம்பர சிற்பத்தில் கதை, ஈட்டி, சுவஸ்திகம், கொடி முதலியனவும் காணப்படும். சுவேதம்பரர் யானையையும், திகம்பரர் சிங்கத்தையும் இவரது வாசனமாகக் கொள்வர்.

## விஜயா

சந்திரபிரபா தீர்த்தங்கரரின் யக்ஷனாகிய இவர் கறுப்பு நிறம். இவரை நான்கு கைகளுடையவராக அமைப்பது வழக்கம். இடது கைகளில் பரசு, பழம், வலது கைகளில் மாலை, வரத முத்திரை ஆகியவை காணப்பெறும், புறா இவரது ஊர்தியாகும்.

## பிரம்ம யக்ஷன்

சீதள நாதரது யக்ஷனாகிய இவர் வெள்ளை நிறம். இவர் நான்கு முகங்களையும், எட்டு கரங்களையும் உடையவராகும். மிக்கவாறும் தாமரை மலர் மீது வீற்றிருப்பதாகவே காட்சியளிப்பார். சுவேதம்பர பிரிவு சிற்பத்தில் பழம், கதை, காசம், அபய முத்திரை, அங்குசம், அக்ஷமாலை, தண்டு, வரதமுத்திரை முதலியன இடம் பெற்றுள்ளன. ஆனால் திகம்பர சிற்பத்தில் இடது கரங்களில் வில், கதை, கேடயம், வாளும் வலது கரங்களில் பானம், கோடாலி, வாள், வரதமுத்திரையும் காணப்படும்.

## ஈஸ்வர யக்ஷன்

இவர் ஸ்ரேயம்சநாதரின் பரிவார தெய்வமாகும். இவர் வெண்மை நிறம். மூன்று கண்களையும் நான்கு கரங்களுடையவர். சுவேதம்பர சிற்பத்தில் கீரிப்பிள்ளை, அக்ஷமாலை, கதை, பழம் முதலியவற்றைக் காணலாம். ஆனால் திகம்பரர் இடது கரங்களில் சூலம், கதை, வலது கரங்களில் அக்ஷமாலை, பழம் ஆகியவைகளை அமைப்பர். இவரது ஊர்தி எருதுவாகும்.

## குமார யக்ஷன்

வாசுபூஜ்யரது யக்ஷனாகிய இவர் வெள்ளை நிறம். அன்னப் பறவையினை ஊர்தியாகக் கொண்டவராகும். திகம்பர நூற்களில் இவர் மூன்று முகங்களையும், ஆறு கரங்களையும் உடையவர் என்று கூறப்பட்டுள்ளது. இடது கரங்களில் வில், பழம், வலது கரங்களில் அம்பு கதை, வரதமுத்திரை, ஆனால் சுவேதாம்பரர் இவரை நான்கு கைகள் உடையவராகக் கருதுகின்றனர். இவரது கைகளில் வில், கதை, பழம், வரதமுத்திரை முதலியனவோ அல்லது பழம், அம்பு, வரதமுத்திரை, வில் ஆகியவையோ காணப்படும்.

## சதுர்முகன்

மயிலை வாகனமாகவுடைய இவர் விமலநாதரின் யக்ஷனாகும். இவர் பச்சை நிறம். இவரது சிற்பங்களை நான்கு முகங்கள் உடையதாக அமைப்பது மரபாகும். மேலும் இவர் பன்னிரு கரங்களை உடையவராகவும் திகழ்வார். இரு பக்கங்களிலும் மேற்புற எட்டு கரங்களில் வாளும் மற்றைய நான்கு கரங்களில் அம்பு, வாள், கேடயம், கதை முதலியனவும் இடம்பெறும்.

## பாதாள யக்ஷன்

அனந்த தீர்த்தங்கரரின் பரிவாரதெய்வம் பாதாள யக்ஷன் என அழைப்பப்பெறுவார். இவர் செம்மை நிறம். இவரது வாகனம் முதலை. இவரது சிற்பங்கள் மூன்று முகங்களையும், ஆறுபுயங்களையும் பெற்று, தலைக்கு மேலாக மூன்று படம் விரித்தாடும் நிலையிலுள்ள பாம்புகளைக் கொண்டதாய் விளங்கும். வலது கரங்களில் அங்குசம், திரிசூலம், தாமரைமலர், இடது கரங்களில் கயிறு, கலப்பை, பழம் ஆகியவைகளையும் காணலாம். சுவேதாம்பர பிரிவு சிற்பத்தில் தாமரை, வாள், பாசம், கீரிப்பிள்ளை, பழம், அக்ஷமாலை ஆகியவையும் காணப்படுகின்றன.

## கின்னர யக்ஷன்

தர்மநாதரது யக்ஷனாகிய இவர் பவழநிறம்; மூன்று முகங்களையும், ஆறு கரங்களையும் உடையவராகத் திகழ்வார், இவரது

கரங்களில் சுவேதாம்பர முறைப்படி தாமரைமலர், கீரிப்பிள்ளை, அக்ஷமாலை, கதை, அபயமுத்திரை, பழம் ஆகியவை இடம்பெறும். ஆனால் திகம்பரர் இடது கரங்களில் சக்கரம், வஜ்ரம், அஞ்குசம், வலது கரங்களில் தண்டு அக்ஷமாலை, வரத முத்திரை ஆகியவற்றை அமைப்பது வழக்கமாகும். சுவேதாம்பரர் இவருக்கு ஆமையையும், திகம்பரர் மீனையும் வாகனமாகக் கொள்வர்.

## கருட யக்ஷன்

சாந்திநாதரது யக்ஷனாகிய இவர் கறுப்புநிறம்; நாற்கரங்களையுடையவராய் திகழ்பவராகும். இவற்றில் பழம், தாமரை, கீரிப்பிள்ளை, அக்ஷமாலை முதலியன இருந்தால் சுவேதாம்பர பிரிவைச் சார்ந்ததாகும். ஆனால் திகம்பர சிற்பத்தில் மேற்புற இருகரங்களில் தாமரை, பழம், கீழ்ப்புற இருகரங்களில் வஜ்ரம், சக்கரம் ஆகியவை காணப்படும். பன்றி இவரது ஊர்தி எனக் கருதப்படுகிறது.


## காந்தர்வ யக்ஷன்


குந்துநாத தீர்த்தங்கரரின் பரிவார தெய்வம் காந்தர்வ யக்ஷன் என அழைக்கப்பெறுவார். இவர் கறுப்பு நிறம். இவரது நான்கு கைகளில் மேற்புற இரண்டு கரங்களில் பாசமும், கீழ்ப்புற இரண்டு கரங்களில் அம்பு வில்லும் காணப்படும். இவர் அன்னப் பறவையினை வாகனமாகக் கொண்டவர்.

## மகேந்திர யக்ஷன்


அரநாதரின் யக்ஷனாகிய மகேந்திரருக்கு ஜெயா என்னும் மற்றொரு பெயரும் உண்டு. இவர் கறுப்பு நிறம். ஆறுமுகங்களையும், அவை ஒவ்வொன்றிலும் மூன்று கண்களையும், நான்கு கரங்களையும் உடையவர். சில சமண நூற்கள் இவர் பத்து கைகளை உடையவர் எனவும் குறிப்பிடுகின்றன. சுவேதாம்பர பிரிவைச் சார்ந்த சிற்பம் இடதுகரங்களில் வஜ்ரம், பாசம், கதை, அங்குசம் வரதமுத்திரையும் வலதுகரங்களில் பாணம், தாமரைமலர், அக்ஷமாலை, பிசைளஸி அபயமுத்திரை முதலியவற்றைப் பெற்று விளங்கும். சங்கு இவரது வாகனம் என்று கருதப்படுகிறது.

# சித்தர் மலை






## மாங்குளம்





தமிழ்பிராமி கல்வெட்டு



## முத்துபட்டி




## கீழவளவு




தீர்த்தங்கர் சிற்பம்

# சீய மங்களம்


## குகை முகப்பு பாறை சிற்பங்கள்



# உத்தம பாளையம்
# சிற்ப வரிசைகள்



## சோழவாண்டி புரம்




தரும தேவியட்சி

## கழுகு மலை



சிற்பங்கள்-பத்மாவதியட்சி

## திருப்பருத்திக் குன்றம் ஆலயம்



விதான ஓவியங்கள்
சங்கீதமண்டபம்

## விமானங்கள்



# சித்தன்ன வாசல்




காதிகா பூமி ஓவியம்

## வட்டெழுத்து கல்வெட்டுகள்



பறையன்பட்டு
விழுப்புரம் மாவட்டம்




பேச்சிப்பள்ளம்
மதுரை சமணமலை

# சமண பாதங்கள்



குந்த குந்தர்
திருவடிகள்
பொன்னூர் மலை




வாமனாசாரியர்
திருவடிகள்
கீழ் எடையாளம்

அகளங்கர் நினைவு கற்பலகை, கரந்தை




## பகவதி மலை, வேலப்பாடி
## வேலூர்



செங்கற்கோவில்



பாதங்கள்



கல்வெட்டு

## தனிச்சிற்பம்




திருமலை

## பாறைச்சிற்பம்




ஆட்சி பாக்கம்



திருப்பருத்திக் குன்றம்
ஓவியம்

வெண்குன்றம்

ஆலய விமானம்





உலோகப்
படிமைகள்

## குபேரன்

இவர் மல்லிநாதரது யக்ஷனாகும். இவர் இந்திர வில் நிறம் உடையவராகவும், எட்டு கரங்களைக் கொண்டவராகவும் காட்சியளிப்பார். யானை இவரது ஊர்தியாகும். இவரது கரங்களில் கேடயம், வில், தாமரைமலர், வாள், அம்பு, நாகபாசம், வரதமுத்திரை, கதை முதலியன இடம்பெறும்.

## புருஷவரர்

இவர் முனிசுவிரத தீர்த்தங்கரரது பரிவார தெய்வமாகும். இவர் சிவப்பு நிறம். மூன்று கண்களையும், சடைமுடியையும் உடையவர். சமண நூற்களின்படி இவருக்கு நான்கு கைகளும் எட்டு முகங்களும் உண்டு. இவரது இடது கைகளில் கேடயம், பழமும் வலது கைகளில் வாள் வரதமுத்திரை ஆகியவையும் திகழும். எருது இவரது வாகனம்.

## வித்யுத்பவ

நமிநாதரின் யக்ஷன் பிர்குதி எனவும் அழைக்கப்படுவார். இவர் சிறப்பு நிறம். நான்கு முகங்களையும், எட்டு கைகளையும் உடைய இவர் எருதுவாகனத்தில் ஏறிச் செல்பவராகும். இவரது கைகளில் பழம், ஈட்டி, கதை, அபயமுத்திரை, பரசு, கீரிப்பிள்ளை, வஜ்ரம், அக்ஷமாலை முதலியன இடம்பெறுமென சுவேதாம்பரர்கள் கூறுவர். ஆனால் திகம்பரர் கேடயம், வாள், அம்பு, வில், அங்குசம், தாமரை, வரதமுத்திரை, சக்கரம் ஆகியவை பிர்குதியின் கைகளில் காணப்படும் என்று கூறுவர்.

## சர்வான யக்ஷன்

சுவேதாம்பரர் இவரை கோமேதக யக்ஷன் எனவும் அழைப்பர். நேமிநாதரின் யக்ஷனாகிய இவர் கறுப்புநிறமும் மூன்று முகங்களையும், ஆறு திருக்கரங்களையும் உடையவராவார். இவரது கைகளில் பழம், பரசு, சுத்தியல், பழம், வஜ்ரம், வரத முத்திரை இடம் பெறுவது வழக்கமாகும். இவர் தாமரை மலர் மேல் மனிதன்மீது சவாரி செய்வதைப் போல் காணப்படுவர்.

## தரணேந்திரன்

பார்சுவநாதரின் பரிவார தெய்வமாகிய தரணேந்திரன் நீல நிறமும் நான்கு கரங்களையுடையவராவர், அவற்றில் மேற்புற கரங்களில் பாம்பும் கீழ்ப்புற கரங்களில் பாசம், வரதமுத்திரை, முதலியவற்றைக் கொண்டும் விளங்குவார். தலைக்கு மேலாக படம் விரித்த நிலையிலுள்ள பாம்பு இருப்பதைக் காணலாம். ஆமை இவரது ஊர்தி எனக் கூறப்படுகிறது.

## மாதாங்கா

மகாவீரரது யக்ஷனாகிய இவர் பச்சைநிறம் இருகரங்களை உடையவராகவும் காணப்படுவர். இவரது தலையில் தர்மச் சக்கரம் பொறிக்கப்பட்டிருக்கும். யானை இவருக்கு வாகனமாகத் திகழ்கிறது. சுவேதாம்பர பிரிவு சிற்பத்தின் கைகளில் கீரிப்பிள்ளையும், பழமும் காணப்படுகின்றன. ஆனால் திகம்பரர் பிரிவு சிற்பத்தில் கீரிப்பிள்ளைக்குப் பதிலாக வரத முத்திரையினை அமைக்கும் மரபினைக் காணலாம்.

## யக்ஷிகள்

யக்ஷனைப் போலவே ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் ஒவ்வொரு யக்ஷியும் பரிவார தேவதையாகத் திகழ்கின்றனர். இவர்களது சிற்பங்கள் தீர்த்தங்கரர்களது சிற்பத் தொகுதியுடனோ அல்லது தனியாகவோ அமைக்கப்படும். தமிழகத்தில், பத்மாவதி, அம்பிகா, சித்தாயிகா ஆகியோர்களே பிற யக்ஷிகளைக் காட்டிலும் சிறப்பு வழிபாட்டிற்குரியவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இவர்களது திருவுருவங்கள் செதுக்கப்பட்டமையும், அவற்றிற்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றியும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. யக்ஷி சிற்பங்கள் பல்லவ, பாண்டிய, சோழராட்சியில் அதிகமாக உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் படிமங்கள் மிக்கவாறும் விசயநகர ஆட்சியிலும் அதற்குப் பின்னரும்தான் அதிகமாகத்தோற்றுவிக்கப்பட்டுள்ளன எனலாம். இதற்குச் சான்றாக வெண்குன்றம், திருப்பருத்திக்குன்றம் ஆகிய இடங்களிலுள்ள படிமங்களைக் கூறலாம்.

## சக்ரேஸ்வரி

முதலாவது தீர்த்தங்கரராகிய ரிஷபநாதரது யக்ஷி சக்ரேஸ்வரியாகும். இவள் நிறம் பொன் வண்ணம். நான்கு திருக்கரங்களை உடையவளாய், அவற்றில் மேற்புற இரண்டு கரங்களில் சக்கரமும் கீழ்ப்புற இரண்டு கரங்களில் இடப்புறம் வஜ்ரம், வலப்புறம் வரதமுத்திரையும் கொண்டு விளங்குவாள். தாமரை மீது அமர்ந்த பருந்து இவ் யக்ஷியின் வாகனமாகும்.

## ரோகிணி

இவள் அஜிதநாதரது யக்ஷியாகும். இவ் யக்ஷியின் சிற்பம் நான்கு கரங்களையுடையதாக திகழ்வதைக் காணலாம். சுவேதாம்பரர் சிற்பத்தில் பாசம், பழம், வரதமுத்திரை, அங்குசம் முதலியனவும், திகம்பரர் பிரிவைச் சார்ந்த சிற்பத்தில் சங்கு, சக்கரம், அபய, வரதமுத்திரைகள் முதலியனவும் இடம்பெறும். இவள் பொன்வண்ணம் உடையவள்; எருதினை ஊர்தியாகக் கொண்டவள்.

## பிரக்ஞப்தி

சம்பவநாதரின் யக்ஷியாகிய இவளை சுவேதாம்பரர் துரிதாரி எனவும், திகம்பரர் பிரக்ஞப்தி எனவும் அழைப்பர். இவளது சிற்பம் ஆறு கரங்களையுடையதாய் உள்ளது. இவற்றில் ஈட்டி, பரசு, பிறைச்சந்திரன், பழம், வாள், வரதமுத்திரை முதலியன காணப்படும். இவளது வாகனம் பறவை. இவள் நிறம் வெண்மை.

## வஜ்ரசிரிங்கலா

நான்காவது தீர்த்தங்கரராகிய அபிநந்தனநாதரது யக்ஷியாகிய இவள் நான்கு கரங்களையுடையவளாவாள். இக்கரங்களில் வரதமுத்திரை நாகபாசம், அங்குசம், அக்ஷமாலை ஆகியவை காணப்படும். இப்பரிவார தெய்வம் அன்னப்பறவையை வாகனமாக உடையவது. பொன்வண்ணமாகத் திகழ்வாள்.

## புருஷதத்தா

சுமதிநாதரின் யக்ஷியாகிய இவள் மகாகாளி எனவும் அழைக்கப்படுவாள்.பெரும்பாலும் இவளைக் குறிக்கும் சிற்பங்கள் நான்கு கைகளையுடையதாய், தாமரை மலரில் வீற்றிருப்பதாகவோ அல்லது யானை வாகனத்தை உடையதாகவோ இருப்பதைக் காணலாம். சுவேதாம்பரர் இவளது கரங்களில் பாசம், வரதமுத்திரை, பழம், அங்குசம் ஆகியவற்றையும், திகம்பரர் சக்கரம், வஜ்ரம், வரதமுத்திரை, பழம் ஆகியவற்றையும் அமைப்பது வழக்கமாகும். இவள் பொன் நிறம் உடையவள்.

## மனோவேகி

பத்மபிரபா தீர்த்தங்கரரின் யக்ஷியாகிய இவளுக்குச் சியாமா என்னும் மற்றொரு பெயரும் உண்டு. பொதுவாக நான்கு கரங்களை யுடையவளாய், அவற்றில் வரதமுத்திரை, வீணை, வில், அபயமுத்திரை ஆகியவற்றையோ அல்லது மேற்புற இரண்டு கைகளில் பழங்களையும் கீழ்ப்புறம் ஒருகையில் சக்கரமும் மற்றொரு கையில் வரதமுத்திரை முதலியவற்றையோ கொண்டு காட்சியளிப்பாள். திகம்பரர் குதிரையையும், சுவேதாம்பரர் மனிதன் ஒருவனையும் இவளது வாகனம்மெனக் கூறுவர். இவள் பொன் நிறம் உடையவள்.

## காளி

சாந்தா எனவும், காளி எனவும் அழைக்கப்படும இவள் சுபார்சுவநாதரது யக்ஷியாவாள். நான்கு கரங்களுடைய இத் தெய்வம் வரதமுத்திரை, சூலம், பழம், மணி ஆகியவற்றுடனும் அல்லது அபய, வரத முத்திரைகள், அக்ஷமாலை, ஈட்டி முதலியவற்றுடனம் விளங்குபவளாகும். எருது இவளது வாகனம். இவள் நிறம் வெண்மை எனக் கூறப்படுகிறது.

## சுவாலாமாலினி

சந்திரபிரபா தீர்த்தங்கரரின் யக்ஷியாகிய இவள் பிர்குதி என்னும் பெயரினையும் உடையவள். பொதுவாக இவளது சிற்பம் நான்கு அல்லது எட்டு திருக்கரங்களுடன் காணப்படும். இவற்றில் சுவேதாம்பரர் வாள்,

கதை, ஈட்டி, அங்குசம் முதலியவற்றையும், திகம்பரர் சக்கரம், அம்பு, வில், பாசம், கேடயம், சூலம், வாள், மீன் முதலிய படைக்கலன்களையும் அமைப்பது வழக்கமாகும். எருமை இவளது வாகனம். இவள் வெண்மை நிறம் உடையவள்.

## மகாகாளி

புஷ்பதந்தரின் யக்ஷியாகிய இவரும் பிர்குதி என அழைக்கப் பெறுவாள். நான்கு கரங்களுடைய இவளது திருவுருவத்தில் சுவேதம்பரர் வரதமுத்திரை, அக்ஷமாலை, கலசம், அங்குசம் ஆகியவற்றையும், திகம்பரர்கள் வஜ்ரம், கதை, பழம், வரதமுத்திரை முதலியவற்றையும் அமைத்தல் மரபாகும். மேலும் சுவேதாம்பரர் எருதினை இவளது வாகனமெனவும், திகம்பரர் ஆமையை ஊர்தியெனவும் கூறுவர். இவள் நிறம் கறுப்பு.

## மாநவி

மாநவி என்னும் பெயர் பெற்ற இவள் சீதளநாத தீர்த்தங்கரரின் யக்ஷியாவாள். இவளுக்கு அசோகா எனவும் சாமுண்டா எனவும் பெயர்கள் உண்டு. பொதுவாக தாமரை மலரில் அமர்ந்த வண்ணமிருக்கும் இவளது கைகளில் வரதமுத்திரை, பாசம், பழம், அங்குசம் ஆகியவையோ அல்லது பழம், வரதமுத்திரை, வில், அங்குசம் முதலியனவோ காணப்படும். இவள் நிறம் பச்சை. சிலர் கரும்பன்றியின் மீது இவள் அமர்ந்து உள்ளவள் என்றும் கூறுவர்.

## கௌரி

இவ் யக்ஷியை சுவேதாம்பரர் மாநவி எனவும் அழைப்பர். இவளுக்கு கோமேதகி எனவும் பெயர் உண்டு. ஸ்ரேயம்சுநாதரின் யக்ஷியாகிய இவள் நாற்கரங்களையுடையவளாய், நின்ற கோலத்திலும், அமர்ந்த நிலையிலும் காட்சியளிப்பாள். இவளது கைகளில் வரதமுத்திரை, கதை, கலசம், அங்குசம் ஆகியவை இடம் பெறும். ஆனால் திகம்பரர் சிற்பங்களில் கதை, தாமரைமலர், கலசம், வரதமுத்திரை ஆகியவைகளையும் காணலாம். சுவேதாம்பரர் சிங்கத்தினையும், திகம்பரர் மானையும் இவளுக்குரிய ஊர்திகளாகக் கொள்வர்.

## காந்தாரி

வாசுபூஜ்யரின் யக்ஷியாகிய இவள் சாந்தா எனவும், கருடயக்ஷி எனவும் அழைக்கப்பெறுவாள். இவள் நீலநிறம் உடையவள். இவளது நான்கு கரங்களிலும் வரதமுத்திரை, ஈட்டி, பூ, கதை ஆகியவை அல்லது இடது கரங்களில் தாமரை மலர்கள், கதை, வலது கரங்களில் வரதமுத்திரை தாமரைமலர் முதலியன காணப்படும். குதிரையும், பறவையும் இவளது வாகனங்கள் என்று கூறப்பட்டுள்ளது.

## வைரோட்டினி

விமலநாதரின் யக்ஷியாகிய இவளை அபராஜிதா எனவும் அழைப்பர். இவள் பச்சை வண்ணம் உடையவள். நான்கு கைகளையுடைய இத் தேவியின் திருவுருவத்தில் சுவேதாம்பரர் வரத முத்திரை, அக்ஷமாலை, பழம், ஈட்டி முதலியவற்றையும், திகம்பரர் மேற்புற இருகரங்களில் சர்பம், கீழ்ப்புற வலதுகரத்தில் அம்பு இடது கையில் வில்லும் அமைப்பார்கள். இவள் தாமரை மலரில் அமர்ந்திருப்பவளாகவோ அல்லது சர்பத்தின் மீது வீற்றிருப்பவளாகவோ காட்சியளிப்பாள்.

## அனந்தமதி

அனந்தநாதரின் யக்ஷி அனந்தமதி எனவும், விஜ்ரும்பினி எனவும் இருவாறாக அழைக்கப்பெறுகிறாள். இவளது நான்கு கைகளில் வாள், பாசம், ஈட்டி, அங்குசம் ஆகியவையோ அல்லது அம்பு, வில், பழம், வரதமுத்திரை முதலியனவோ இடம்பெறும். இவள் தாமரை மலரில் வீற்றிருப்பவளாகவோ அல்லது அன்னப் பறவையினை ஊர்தியாகக் கொண்டவளாகவோ காணப்படுவாள். இவள் பொன் வண்ணம் உடையவள்.

## மாநஸி

தர்மநாதரின் யக்ஷியாகிய இவளுக்கு பரப்ரதா என்றும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. இத்தேவியும் நான்கு அல்லது ஆறு கரங்களையுடையவளாகும். சுவேதாம்பரர் சிற்பத்தில் இருதாமரை மலர்கள், அங்குசம், அபயமுத்திரை முதலியனவும், திகம்பரர் சிற்பத்தில் இருகரங்களில் தாமரை மலர்களையும் மற்ற கரங்களில் வில்,

வரதமுத்திரை, அங்குசம், அம்பு முதலியனவும் காணப்படும். சுவேதாம்பரர் குதிரையையும், திகம்பரர் புலியையும் இவளது வாகனமாகக் கொள்வார்கள். இவள் பவழ வண்ணம் உடையவள்.

## மகாமாநசி

சாந்திநாதரது யக்ஷியாகிய இவள் கந்தர்பா எனவும் அழைக்கப்படுவாள். இவளது நான்கு கரங்களில் புத்தகம், தாமரைமலர், கலசம், தாமரை மொட்டு முதலியன இடம்பெறும். சில சிற்பத்தில் சக்கரம், பழம், வாள், வரதமுத்திரை ஆகியவற்றையும் காணலாம். இவள் தாமரை மலரில் வீற்றிருப்பவளாகவோ அல்லது மயிலை வாகனமாகவோ கொண்டு விளங்குவாள். இவள் பொன் வண்ணம் உடையவள்.

## ஜயா

குந்துநாதரது யக்ஷியாகிய இவளுக்கு காந்தாரி எனவும் பெயர் உண்டு. இவள் நான்கு கரங்களுடன் அவற்றில் அம்பு, வில், பாசம், பாம்பு முதலியவற்றைக் கொண்டிருப்பாள். மேற்கூறப்பட்டுள்ளவை சுவேதாம்பரர் பிரிவு சிற்பத்தில் காணப்படுபவையாகும். ஆனால் திகம்பரர் சிற்பத்தில் சக்ரம், சங்கு, வாள், வரதமுத்திரை இம்பெறும். இவள் கரும்பன்றி உடையவளாகவும், தாமரை மலரில் வீற்றிருந்தவாறும் காட்சியளிப்பாள். இவள் பொன் வண்ணம் உடையவள்.

## விஜயா

இவள் தாரவதி, காளி, எனவும் அழைக்கப்படுவாள். அரநாதரின் யக்ஷியாகிய இவளது நான்கு கைகளில் சர்பம், மகன், வஜ்ரம், வரத முத்திரை ஆகியவை திகழ்வதைக் காணலாம். அன்னம் இவளது வாகனமாகக் கூறப்பட்டுள்ளது. பொன் வண்ணம் உடையவள்.

## அபராஜிதா

தாரிணி எனவும், தாரா எனவும் அழைக்கப்படும் இவள் மல்லி நாதரது யக்ஷியாவாள். இத் தேவியின் நான்கு திருக்கரங்களில் கேடயம் பழம், வாள், வரதமுத்திரை, ஆகியவற்றைக் காணலாம். திகம்பரர் அன்னப் பறவை அல்லது எட்டு கால்களை உள்ள விலங்கு இவளது

வாகனமெனவும், சுவேதாம்பரர் இவள் தாமரை மலர் மீது உறைபவள் என்றும் கருதுவர். இவள் பச்சை வண்ணம் உடையவள்.

## பகுருபினி

சுகந்தினி என்னும் மறு பெயரையுடைய இவள் முனிஸ்விரத தீர்த்தங்கரரின் யக்ஷியாவாள். இவள் பத்திராசனத்தில் அமர்ந்த வண்ணமும், பாம்பினை ஊர்தியாகக் கொண்டவளாகவும் திகழ்பவள். இவளது கைகளில் அக்ஷமாலை, பழம், வரதமுத்திரை, சூலம் அல்லது கலசம் ஆகியவை இடம்பெறும். திகம்பரர் இவளது சிற்பத்தில் கேடயம், பழம், வாள், வரதமுத்திரை ஆகியவற்றை அமைக்கும் வழக்கமும் உண்டு. இவள் மஞ்சள் நிறம் உடையவள்.

## சாமுண்டி

நமிநாதரின் பரிவார தெய்வமாகிய இவள் சாமுண்டா, குசுமமாலினி, காந்தாரி எனவும் அழைக்கப்படுவாள். அன்னப் பறவையும், மகரமும் இவளது ஊர்திகளாகும். சுவேதம்பரர் பிரிவு சிற்பத்தில் வரதமுத்திரை, பழம், ஈட்டி, வாள் முதலியன காணப்படும். ஆனால் திகம்பரர் பிரிவு திருவுருவத்தில் அக்ஷமாலை, தண்டு, கேடயம், வாள் முதலியன இடம்பெறும். இவள் பச்சை வண்ணம் உடையவள்.

## கூஷ்மாண்டி

நேமிநாதரின் யக்ஷியாகிய இவளது கைகளில் மாம்பழம், பாசம், குழந்தை, அங்குசம் ஆகியவை திகழ்வதைக் காணலாம். ஆனால் திகம்பர பிரிவு சிற்பத்தில் இடது கரத்தில் மாங்கிளையும் வலது கரத்தில் சுபங்கரன் குழந்தை ஆகிய இரண்டு மட்டிலும் காணப்படுகின்றன. சிங்கம் இவளது ஊர்தியாகும். இவளுக்கு அம்பிகா, ஆம்ரகூஷ்மாண்டினி எனவும் பெயர்கள் உண்டு. இவள் பச்சை வண்ணம் உடையவள்.

## பத்மாவதி

பார்சுவநாதரின் யக்ஷியாகிய இவளுக்கு முகம் சர்பமாகவும் உடல் கோழியாகவும் கொண்ட குக்குடசர்பம் என வழங்கப்படும்

உருவத்தை ஊர்தியாக படைப்பர். சில சமயத்தில் தாமரை மலரிலும் வீற்றிருப்பதாகக் காட்சியளிப்பாள். சுவேதாம்பரர் இவளது நான்கு கரங்களில் தாமரை, பாசம், பழம், அங்குசம் முதலியவற்றையும், திகம்பரர் அங்குசம், அக்ஷமாலை, இரு தாமரை மலர்கள் வரத முத்திரை ஆகியவற்றையும் அமைப்பது வழக்கமாகும். இவள் சிவப்பு வண்ணம் உடையவள்.

## சித்தாயிகா

சிம்ம வாகனத்தையுடைய சித்தாயிகா மகாவீரரது யக்ஷியாகும். இவள் இரண்டு திருக்கரங்களைப் பெற்று அவற்றில் புத்தகம், அபயமுத்திரை முதலியவற்றைக் கொண்டு விளங்குபவளாகும். இவள் பொன் வண்ணம் உடையவள்.

## பிறதெய்வங்கள்

சமண சமயத்தில் யக்ஷன், யக்ஷி மட்டுமின்றி சேத்திரபாலர், கணதரர், லட்சுமி, சரஸ்வதி, நவக்கிரகங்கள் ஆகியோரும் வழிபடப்பட்டு வருகின்றனர். மேலும் இந்திரன், அக்கினி, யமன், நைருத்தி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலிய திக்பாலர்களும் வழி பாட்டிற்குரியவர்களாகத் திகழ்வதைக் காணலாம். இவற்றின் சிற்பங்கள் மிக்கவாறும் இந்து சமயத்திலுள்ள தெய்வங்களைப் போன்றுதான் காணப்படுகின்றன.

## முதன்மை கருத்துகள்

மேற்கூறப்பட்டுள்ள திருவுருவக் குறிப்புகள் மிக்கவாறும் வட இந்திய சிற்பங்களுக்குத்தான் அதிகமாகப் பொருந்தும் எனலாம். ஆனால் தென்னிந்தியச் சிற்பங்களில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழகத்தில் காலத்தால் முற்பட்ட யக்ஷி சிற்பங்கள் பெரும்பாலும் இரண்டு அல்லது நான்கு கைகளைக் கொண்டவையாகும். பொதுவாக விஜயநகர காலத்திலிருந்துதான் எட்டு, பன்னிரண்டு கைகளையுடைய சிற்பங்களையும் படிமங்களையும் அதிகமாகக் காணலாம். தமிழகத்திலுள்ள சிற்ப, படிமங்களில் கீரிப்பிள்ளை பெரும்பாலும் இடம் பெறுவதில்லை. யக்ஷன் யக்ஷிகளின் திருமேனிப்

படிமங்களின் தலையில் அருக தேவரின் திரு உருவங்கள் காணப்படுகின்றன. இதைக்கொண்டே இத்தகு திருமேனிகளை சமண சமயத்தைச் சார்ந்தவை என அறியலாம்.

நம் நாட்டில் தாந்திரிக வழிபாடு கி.பி.7, 8 ம் நூற்றாண்டுகளில் சிறப்படையத் தொடங்கியது. இதன் தொடர்பினால்தால் சமண சமய வழிபாட்டிலும், திருவுருவங்கள் அமைப்பதிலும் சில மாறுபாடுகள் ஏற்பட்டன. அருள்நெறிகளையும், அகிம்சையினையும் போதித்து வந்த புத்த, சமண சமயங்களிலும் தாந்திரிக வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. மேலும், இந்து சமயம் சமண சமயத்தின் மீது காழ்ப்புணர்வு கொண்டிருந்த போதிலும் கலாச்சார பிணைப்பினாலும், சமுதாய ஒருங்கிணைப்பினாலும் ஒன்றிலிருந்து மற்றொன்று சிறந்த கருத்துக்களையும், வழிபாட்டு முறைகளையும் பின்பற்றலாயின. இதனைச் சிற்ப, படிமங்களின் அமைப்புகளிலும் காணலாம். குறிப்பாக அம்பிகா, காந்தாரி முதலிய யக்ஷிகள் உமையவள், காளி ஆகியோரின் திருவுருவ அமைப்புகளைக் கொண்டு விளங்குகின்றனர். இவர்களது உலோகத் திருமேனிகளில் காணப்படும் படைக்கலன்கள், கோரைப்பற்கள் சுவால கேசம் முதலியன இந்து சமயத்தின் தொடர்பால் ஏற்பட்டவை என்று கருதலாம். பிரம்ம யக்ஷன், சண்முக யக்ஷன் ஆகிய இருவருடைய திருவுருவக் குறிப்புகள், இந்து சமயத்தவரால் வழிபடப்பட்டுவரும் பிரம்மன், ஆறுமுகன் ஆகியோரது திருவுரு அமைப்புகளைப் போன்றே காணப்படுகின்றன. எனவே காலத்தின் போக்கினாலும், கலாச்சார இணைப்பினாலும் வழிபாட்டு முறைகள், திருவுருவ அமைப்புகள் மாறுபடும் என்பது நன்கு தெரிய வருகிறது.

# 8. குமரி மாவட்டத்தில் சமணம்

தமிழகத்தில் கலை, கல்வி, இலக்கியம், சமுதாய வளர்ச்சி போன்றவைகளுக்குச் சமண சமயத்தவர் செய்த தொண்டு மிகவும் போற்றத்தக்கதாகும். சமண சமயம் தமிழகத்தில் ஏறத்தாழ கி.மு.2,3–ம் நூற்றாண்டில் பரவியிருந்ததென்பதற்கு மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள சமண குகைக் கோயில்களில் காணப்படும் பிராமி கல்வெட்டுகள் சான்று பகருகின்றன. கி.பி. 7–ம் நூற்றாண்டில் சமணர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கட்டடக் கோயில்களைக் கட்டி சமண சமயத்தைப் போற்றி வளர்த்துள்ளனர். குமரி மாவட்டத்தில் இவர்களால் நிறுவப்பட்ட கோயில்கள் சிதரால், நாகர்கோயில் என்னும் இடங்களில் காணப்படுகின்றன. இம் மாவட்டத்தில் கி.பி.8 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.17ஆம் நூற்றாண்டுவரை சமணம் சிறப்புற்றிருந்ததற்கு மேற்குறிப்பிட்ட இரு இடங்களிலுள்ள கல்வெட்டுகள் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## நாகர்கோயில்

குமரி மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் நாகர்கோயில் கல்வெட்டுகளில் 'கோட்டாறு' என்று பெயர் பெறுகிறது[1]. சுசீந்திரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள கோயில் கல்வெட்டுகளில் சில, கோட்டாறு என்னும் பெயர் தற்போதைய நாகர்கேயிலுக்கு இருந்தமையை எடுத்துக் கூறுகின்றன. இக்கோட்டாறு என்னுமிடம் கி.பி.8–ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.17–ம் நூற்றாண்டுவரை சமண சமய முக்கியத்தும் வாய்ந்த இடமாகத் திகழ்ந்திருக்கிறது. முன்னர் இங்கிருந்த சமணப் பள்ளிகள் தற்போது எஞ்சி நிற்கவில்லை. இருப்பினும் கடியப்பட்டினத்திலுள்ள முதலாம் இராசராசனது 27–வது ஆட்சியாண்டு (கி.பி.1012) கல்வெட்டொன்று சேர மங்கலம் என்னும் ஊருக்கருகில் சமணப் பள்ளிக்குத் தானமாக விடப்பட்ட பள்ளிச்சந்தத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.[2] இக்கல்வெட்டு மிகவும் சிதைந்த நிலையிலுள்ளதால் பள்ளிச் சந்தம் பற்றிய பிற செய்திகள் அறிவதற்கில்லை.

நாகர்கோயிலின் அருகில் புரவசேரி என்னுமிடத்திலுள்ள திருமால் கோயில் கல்வெட்டொன்று (கி.பி.1196) கோட்டாறு சமணப் பள்ளிக்குச் சொந்தமான பள்ளிச் சந்த நிலத்தை இக்கோயிலுக்குக் கொடுத்ததைக் குறிக்கிறது.[3] கன்னியாகுமரிக் கோயிலிலுள்ள பராந்தக பாண்டியனது (கி.பி.12–ம் நூற்றாண்டு) கல்வெட்டு, பள்ளிச் சந்தம் நீங்கலாக இக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பற்றி கூறுகிறது.[4] இக்கல்வெட்டில் பள்ளிச் சந்தத்திற்கு அடுத்தபடியாக சுசீந்திரம், கேரளன்குறிச்சி, பாப்பான்குழி, பொற்றை, தோவாளை முதலியன ஊர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. எனவே, பள்ளிச்சந்தமாக விடப்பட்ட நிலம் சுசீந்திரத்திற்கும், தோவாளைக்கும் இடைப்பட்ட பகுதியில் தான் இருந்திருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட ஊர்கள் அனைத்தும் கோட்டாற்றிற்கு மிக அண்மையிலிருப்பதால் இப்பள்ளிச் சந்தம் கோட்டாறு சமணப் பள்ளிக்குச் சொந்தமானதாக இருந்திருக்க வேண்டும் என்று கருதுவதில் தவறில்லை. இக்கருத்திற்கேற்ப கழுகுமலையிலுள்ள கி.பி.8–ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் கோட்டாறு சமணப் பள்ளி இருந்ததற்குக் கட்டட சான்றுகள் இல்லை எனினும், மேற்கூறிய கல்வெட்டுகளால் கி.பி.8–ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.12–ம் நூற்றாண்டுவரை சமணம் சிறந்திருந்தது என்பதும், பள்ளிச் சந்தங்கள் இருந்தனவென்பதும மறுக்க முடியாத உண்மைகளாகும்.

தற்போதைய நாகர்கோயிலின் (ஊரின் பெயர்) வடமேற்குப் பகுதியிலுள்ள நாகராசர் கோயில் முன்னர் சமணக் கோயிலாக இருந்திருக்கிறது. இக்கோயிலில் பல நாகதேவர்களின் சிற்பங்கள் உள்ளன. மேலும் கருவறையின் முன்னர் உள்ள மண்டபத்தில் பார்சுவநாதர், மகாவீரர் பத்மாவதி முதலியோரது சிற்பங்களும் காணப்படுகின்றன. இவையன்றி இக்கோயிலிலுள்ள சில 16, 17–ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள்[5] நாகதேவர்களுக்கு வழிபாடு நடத்த பள்ளிச் சந்த நிலம் வழங்கியதையும், அந்நிலங்கள் இரு சமண பண்டிதர்களிடம் ஒப்படைக்கப் பட்டதையும் குறிப்பிடுவதை நோக்குங்கால் இக்கோயில் முதலில் சமணர் கோயிலாக இருந்து 17–ம் நூற்றாண்டிற்குப் பின்னர் இந்து சமயக் கோயிலாக மாறியிருக்க வேண்டும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

## சிதறால்

குமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுக்காவைச் சார்ந்த இவ்வூர் மார்த்தாண்டத்திலிருந்து ஏறத்தாழ இரண்டுகல் வட கிழக்கிலுள்ளது. இங்குள்ள மலையில் இயற்கையாகவே உள்ள சில குகைகள் காணப்படுகின்றன. கல்வெட்டுகளில் இம்மலை **திருச்சாரணத்து மலை** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாரணர்களாகிய சமணப் பெரியோர் இங்கு வாழ்ந்து வந்ததால் இம்மலை திருச்சாரணத்து மலை எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும்.

இம்மலையின் முகப்பில் இரண்டு வரிசைகளாகச் சமணத் திருவுருவங்கள் உள்ளன. மேல் வரிசையில் பன்னிரண்டு தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. கீழுள்ள வரிசையில் ஐந்து பெரிய சிற்பங்கள் அழகுற வடிக்கப்பட்டுள்ளன. இவை நேமிநாதர், பார்சுவநாதர், மகாவீரர், பத்மாவதி அல்லது சித்தாயிகா முதலியோரைக் குறிப்பனவாகும். மேலும் இப்பெரிய சிற்பங்களுக்கிடையிலும் சில சிறிய சமண சிற்பங்கள் காணப்படுகின்றன.

திருச்சாரணத்து மலையில் முக்கியமாக மூன்று கருவறைகள் (Shrines) உள்ளன. நடுவிலுள்ள கருவறையில் பகவதி அம்மனின் சிற்பமும், பிற இரண்டு கருவறைகளிலும் மகாவீரர், பார்சுவநாதர் சிற்பங்களும் அழகுடன் திகழ்கின்றன.[6] இக்குகை கோயில்களில் கி.பி.9-ம் நூற்றாண்டில் சமண முனிவர் பலர் வாழ்ந்திருக்கின்றனர். ஆய் மன்னனாகிய விக்கிரமவரகுணனது கல்வெட்டுக்கள்[7] நடுவிலுள்ள கோயிலிலிருக்கும் இறைவிக்கு (பட்டாரிக்கு) அணிகலன்கள், பிற தானங்கள் கொடுத்ததைக் குறிப்பிடுவதால், இவ்விறைவி (பகவதி) முன்னர் சமண சமயத்தைச் சார்ந்த தெய்வமாக (யக்ஷி) இருந்திருக்க வேண்டும். இச்சிற்பத்தின் மீது தற்போது கதை (காரை) பூசப்பட்டிருப்பதால் உண்மை சரிவர அறிவதற்கில்லை. மேலும் இக் கோயில் இந்து சமயக் கோயிலாக 13-ம் நூற்றாண்டில் மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு இங்குள்ள கல்வெட்டொன்று மறைமுகமாகச் சான்று பகருகிறது. இக்கல்வெட்டு[8] கீழ் வேம்பாநாட்டைச் சார்ந்த நாராயண... தமிழ்ப் பல்லவரையன் என்பான் கி.பி.1250-ல்

இக்கோயிலுள்ள ‘பகவதி’ என்னும் இறைவிக்கு வழிபாடு நடத்தப் போதிய பணம் கொடுத்தான் எனக் கூறுகிறது. முன்னர் உள்ள கல்வெட்டுக்கள் இவ்விறைவியை ‘பகவதி’ என்று குறிப்பிடவில்லை, எனவே இது கி.பி.13–ம் நூற்றாண்டிற்கு முன்னர் சமண சமயத்தைச் சார்ந்த தெய்வமாக இருத்தல் வேண்டும் என்பதும், அதற்குப் பின்னர் இதற்குப் பகவதி என்ற பெயர் வழங்கப்பட்டு இந்து சமயக் கோயிலாக மாற்றப் பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவாகும்.

திருச்சாரணத்து மலை முகப்பிலுள்ள சமண சிற்பங்களின் கீழ் அவற்றைச் செதுக்குவதற்கு ஏற்பாடு செய்த சமணக் குரவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றில் தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த திருநறுங்கொண்டை, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த காட்டாம்பள்ளி[9] ஆகிய இடங்களில் வாழ்ந்த சமணக் குரவர்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பதால் கி.பி.9–ம் நூற்றாண்டில் திருச்சாரணத்து மலைக்குத் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலுள்ள சமணப் பள்ளிகளிலிருந்து சமயக் குரவர்கள் வந்துள்ளனர் என்பதும், இம்மலை சமண சமய முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் திகழ்கிறது என்பதும் நன்கு புலனாகும்.

## குரவர்களும் குரத்தியர்களும்

தமிழ் இலக்கியங்களும், கல்வெட்டுகளும் சமண முனிவர்களைக் **குரவர்** என்றும் பெண் துறவிகளைக் **குரத்தியர்** என்றும் அழைக்கின்றன. திருச்சாரணத்து மலையிலுள்ள வரகுணமன்னனது கல்வெட்டு பேரெயக் குடியை (கழுகுமலை)ச் சார்ந்த அரட்ட நேமிபட்டாரகரின் சிஷ்யை **குணந்தாங்கி** குரத்தியைக் குறிப்பிடுகின்றது.[10] இம்மலையிலுள்ள சமண சிற்பங்களின் கீழ், **அச்சநந்தி**, காட்டாம் பள்ளியைச் சார்ந்த **உத்தநந்தியடிகள்**, திருச்சாரணத்துப் **பட்டினிபட்டாரகர்**, இவரது சீடராகிய வரகுணன், திருநறுங்ககொண்டையிலுள்ள மேலிற் பள்ளியைச் சார்ந்த **வீர நந்தியடிகள்** முதலிய பெயர்கள் காணப்படுகின்றன.[11] இங்குக் குறிப்பிட்டுள்ள அச்சநந்தி என்பார் நெல்லை மாவட்டத்து ஏறவாடி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டிலும் இடம் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கழுகுமலையிலுள்ள கல்வெட்டுகள் இத்தலத்திலுள்ள சமண சிற்பங்களைச் செதுக்க ஏற்பாடு செய்த குரவர், குரத்தியர் பெயர்களைக் குறிக்கின்றன. இவர்களுள் **புட்பநந்தி**, **விமலச் சந்திர குரவடிகள்**, **உத்த நந்திக் குரவடிகள்**, **பாதமூலத்தாள் அரங்கன்மாறன்** ஆகியோர் **கோட்டாற்றைச் சார்ந்தவர்கள்.**[12] மேலும் இக்கல்வெட்டுகளில் **திருச்சாரணத்துப் பிடாரிகள், திருச்சாரணத்துக் குரத்திகள்** என்னும் இரு குரத்தியரின் பெயர்களும் காணக் கிடக்கின்றன.[13] கழுகுமலையிலுள்ள கல்வெட்டுகள் கி.பி.8–ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாதலால் மேற்குறிப்பிட்டுள்ள கோட்டாற்று குரவர்களும், திருச்சாரணத்துக் குரத்தியரும் கி.பி.8–ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களென்பது தெளிவாகும்.

நாகராசர் கோயிலிலுள்ள **16, 17**–ம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் **கமலவாகன பண்டிதர்**, **குணவீர பண்டிதர்** என்னும் இரு சமண அறிஞர்களைக் குறிப்பிடுகின்றன.[14] இதுகாறும் கூறியவற்றால் குமரி மாவட்டத்தில் கி.பி.8–ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.17–ம் நூற்றாண்டுவரை பல சமணக் குரவர்களும், குரத்தியர்களும் வாழ்ந்திருக்கின்றனரென்பது புலனாகும்.

## பள்ளிச் சந்தமும், தானங்களும்

**பள்ளிச் சந்தம் என்பது சமணப் பள்ளி அல்லது கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்தைக் குறிப்பதாகும்.** (புத்த சமயத்திற்கும் இது பொருந்தும்). இந்து சமயக் கோயில்களுக்கு வழங்கப்பட்ட பிரம்ம தேய, தேவதான நிலங்களைப் போன்று பள்ளிச் சந்தமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவற்றிலுள்ள வருவாய் சமணக் கோயில்களில் வழிபாடு முதலியவற்றிற்குச் செலவு செய்யப்பட்டது. கடியப்பட்டினத்திலுள்ள இராசராசன் கல்வெட்டு சேரமங்கலத்தின் அருகிலுள்ள பள்ளிச் சந்தத்தையும், பராந்தக பாண்டியனது கல்வெட்டு சுசீந்திரத்திற்கும், தோவாளைக்கும் இடைப்பகுதியிலுள்ள பள்ளிச் சந்தத்தையும், புரவசேரி கல்வெட்டு கோட்டாற்று சமணப் பள்ளிக்குச் சொந்தமான பள்ளிச் சந்தத்தையும் குறிப்பிட்டுள்ளமையை முன் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

நாகராசர் கோயிலுள்ள பல கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு நிலங்கள், பிற தானங்கள் முதலியவற்றைக் கொடுத்தது பற்றிக் கூறுகின்றன. **உதயமார்த்தாண்டன்** என்னும் மன்னன் இக்கோயிலுக்கு முளையனூர் பற்றில் 20மா. நிலம் பள்ளிச் சந்தமாகக் கொடுத்தான் எனவும், இவை **குணவீரன், கமலவாகனன்** ஆகிய இரு சமண பண்டிதர்களிடம் ஒப்படைக்கப்பட்டன எனவும் அறிகிறோம். மேலும் இந்நிலத்திலுள்ள வருவாயைக் கொண்டு கோயிலில் காலை வழிபாட்டிற்குப் பாயாசம் தயார் செய்யவும், பகலிலும், இரவிலும் விளக்கெரிப்பதற்கு எண்ணெய் வாங்கவும், தை மாத ஞாயிற்றுக் கிழமைகளில் மேற்குறிப்பிட்டவை இரண்டு பங்கு அளவில் வாங்கவும், கற்பூரம், பூ, பன்னீர், மாலை, துணிகள் முதலியன வாங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டன. இக்கோயிலில் வழிபாட்டிற்கென்று செய்யப்பட்ட படையமுதில் (Cooked rice) ஒரு பகுதி பூமாலை தொடுப்பவர்களுக்கும், மேளம் வாசிப்பவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.[15] உதையமார்த்தாண்டனது மற்றொரு கல்வெட்டு, இக்கோயிலிலுள்ள நாகருக்கும். நாகராசருக்கும் தினமும் வழிபாடு நடத்த சில நிலங்களையும், காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் வழிபாடு நடத்த ஒருபதக்கு (3 நாழி) நெல் கொடுத்ததையும், ஞாயிற்றுக் கிழமைகளில் இரண்டு பதக்கு நெல் வழங்கியதையும் குறிப்பிடுகின்றது.[16]

நாகராசர் கோயிலில் சாத்துப்படி செலவிற்காக தென்கரை நாட்டிலுள்ள தருவைப் பற்றில் பத்து மா நிலம் பள்ளிச் சந்தமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடமை, வினியோகம், உபாதி, கணக்கிலக்கை, கோமுறைப்பாடு என்னும் வரிகள் இக்கோயில் செலவிற்காகப் பயன்படுத்தப்பட்டன.[17] இவையன்றி சேரன்மாதேவி என்னும் ஊரிலுள்ள பதினைந்து மாநிலத்தைப் பள்ளிச் சந்தமாக வழங்கியதையும், இந்நிலங்கள் கமலவாகனன், குணவீரன் என்னும் சமணப் பெரியோர்களிடம் ஒப்படைக்கப்பட்டதையும், கடமை, வினியோகம், உபாதி, கோமுறைப்பாடு முதலிய வரிகள் இந்நிலங்களிலிருந்து வசூலிக்கப்படவில்லை என்பதையும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது.[18] கொல்லம் 696–ம் ஆண்டில் இக்கோயிலில் ஒரு நந்தா விளக்கெரிப்பதற்கும், தவறாது வழிபாடு நடத்துவதற்கும் ஒரு மாநிலமும், ஒரு தோட்டமும் தானமாக கொடுக்கப்பட்டன.[19]

**பூதல வீர உதைய மார்த்தாண்டன்** என்னும் மன்னன் இக்கோயிலுள்ள நாகருக்கு **வீரமார்த்தாண்டன் சந்தி** என்ற நண்பகல் வழிபாட்டிற்கு **மும்முடிச் சோழபுரப் பற்றில்** (கோட்டாறு பற்று) **இருபத்தொரு மா நிலத்தை வழங்கினான்.**[20] மேலும் சர்வ பிராயசித்தம் என்ற வழிபாட்டிற்காக தேரூர் பற்றில் சில நிலங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.[21] மாளுவநம்பியார் மாளுவ நம்பி என்பவனும், தம்பிரான்குட்டி சடையன் என்பவனும் சிலரிடமிருந்து பண உதவி பெற்று இக்கோயிலில் மகர தோரண விளக்கொன்று நிறுவினர் என்றும், தினமும் இவ்விளக்குக்குத் தேவையான இரண்டு நாழி எண்ணெயைக் கோயிலுக்குச் சொந்தமான 600 பணத்திலிருந்து கிடைத்த வட்டியைக் கொண்டு வாங்கிக் கொடுத்தனரென்றும் அறிகிறோம்.[22]

திருச்சாரணத்து மலையிலுள்ள கல்வெட்டுகளும் இங்குள்ள குகைக்கோயில்களுக்குத் தானம் வழங்கியதைக் குறிக்கின்றன. **முத்துவாளநாராயண குரத்தி** என்பவர் திருச்சாரணத்து ஸ்ரீகோயிலில் (தற்போதைய பகவதி கோயில்) ஒரு நந்தா விளக்கெரிப்பதற்குப் பணம் கொடுத்து உதவியுள்ளார்.[23] குணந்தாங்கி குரத்தி என்பவரும் இக்கோயிலுள்ள பட்டாரியாருக்குப் பொன்னால் செய்யப்பட்ட பூ ஒன்றினையும், சில அணிகலன்களையும் வழங்கியுள்ளார்.[24] **விஜயபத்ரவிபசித்** என்பவர் இக்கோயிலின் நுழைவாயிலை நிறுவினார்[25] என்றும் அறியக் கிடக்கிறோம்.

## சமண சமயத்தின் மறைவு

தமிழகத்தில் கி.பி.7–ம் நூற்றாண்டிற்குப் பின்னர் சைவ, வைணவ சமய மறுமலர்ச்சியால் சமண சமயத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. சைவ சமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் சமண சமயத்தை அழிப்பதில் அதிக கவனம் செலுத்தி வந்தனர். குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இப்பகுதியை ஆட்சி புரிந்து வந்த சோழ பாண்டிய மன்னர்கள் இந்து சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்ததால் சமண சமய வளர்ச்சி குன்றியது. மேலும் பிற்காலத்தில் ஆட்சி புரிந்து வந்த நாயக அரசர்களும் சமண சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. எனவே படிப்படியாக வளர்ச்சி குன்றிவந்த சமணமதம் குமரி மாவட்டத்தில் 17–ம் நூற்றாண்டிற்குப் பின்னர் நிலைத்து நிற்கவில்லை.

# அடிக்குறிப்புகள்

1. T. A.S. Vol. VI, p.163.
2. T. A.S. Vol. IV, pt. 2, No.105.
3. Ibid, No.153.
4. T.A.S. Vol. I. No.111
5. ARE 59, 63 of 1896.
6. T.A.S. Vol. I, p.194
7. T.A.S. Vol.IV, No.40 and Vol, I, pp.193-195.
8. T.A.S. Vol. I. p. 194-195
9. Ibid, p.194.
10. Ibid, p.194.
11. T.A.S. Vol, II, p.125
12. S.I.I. Vol, 1.5 Nos. 313, 316, 333, 358
13. Ibid, Nos.321, 324.
14. T.A.S. Vol. IV, pt.2 Nos. 115, 117, 118.
15. Ibid, No.115
16. Ibid, No.116
17. Ibid, No.117
18. Ibid, No.118
19. Ibid, No.119
20. Ibid, No.120
21. Ibid, No.121
22. Ibid, No.123
23. Ibid, No.40
24. T.A.S. Vol. I, pp.193-194
25. T.A.S. Vo. IV, No.41.

# 9. பகவதிமலையில் பண்டைய சமண சான்றுகள்

தமிழகத்தில் சமண சமய வரலாற்றுச் சிறப்புமிக்க மலைகள் ஏராளமாக உள்ளன. இயற்கையாக அமைந்த பல மலைகளைச் சிற்பங்கள் நிறைந்த கலைக் கூடங்களாக மாற்றியமைத்த பெருமை சமண சமயத்தவரை சாரும். இல்லற வாழ்வை வெறுத்த சமண முனிவர்கள் ஆங்காங்குள்ள பல மலைகளை நாடித் தவம் இயற்றலாயினர். வடஆர்க்காடு மாவட்டத்தில் **வள்ளிமலை, திருப்பாண்மலை, திருமலை, ஆண்டிமலை, அருகன்மலை** முதலிய பல மலைகளில் சமண சமய அறவோர் துறவறம் நோற்றுள்ளமையைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியக் கிடக்கிறோம். இம்மாவட்டத்தில் வேலூருக்கு அருகிலுள்ள **வேலப்பாடி** என்னும் ஊரில் காணப்படும் பகவதிமலையும் பண்டைக்காலத்தில் சமண சமய முக்கியத்துவம் வாய்ந்த தலமாக விளங்கியிருக்கிறது. இம்மலையிலுள்ள சமணப் படுக்கைகள், பாதங்கள் ஆகியவை பற்றிய செய்திகள் இருகாறும் வெளிக்கொணரப்படவில்லை.

## நுழைவாயில்கள்

பகவதிமலையில் கீழிருந்து மேலாகச் செல்லும் வழியில் இரு நழைவாயில்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்விரு நுழைவாயிலின் பெரும்பகுதியும் தற்போது சிதைவுற்றுக் காணப்படுகிறது. இவற்றின் உட்பகுதி கூம்பிய அரைவட்ட வடிவமாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மலையின் கீழ்ப்பகுதியிலிருந்து இவ்வாயில்களை அடைவதற்கு கற்களை அடுக்கி முன்னர் படிக்கட்டுகள் அமைத்திருக்கின்றனர். ஆனால் காலப்போக்கில் இப்படிக்கட்டுகள் மிகவும் சிதைந்துள்ளன.

## கோயில்கள்

இப்பகவதிமலையின் மேல் சமமான பகுதிகளில் நான்கு சிறிய செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்கள் உள்ளன. இரண்டாவது நுழைவாயிலுக்குச் சற்று மேலாக உள்ள பகதியில் இடிந்த நிலையிலுள்ள ஒரு கோயில் காணப்படுகிறது. முன்பு இக்கோயில் கருவறை, மண்டபம் முதலிய பகுதிகளைக் கொண்டதாகப் பெரிய அளவில் இருந்திருக்க வேண்டும். ஆனால் தற்போது கருவறையைத் தவிர எஞ்சிய பகுதிகள் அனைத்தும் அழிந்துவிட்டன. இக்கோயிலுக்குச் சற்று மேலாக இரண்டு சிறு கோயில்கள் அடுத்தடுத்து கட்டப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று சிறிது சிதைந்த நிலையிள்ளது. இக்கோயில்களின் முன்பகுதியில் தூண்கள் நடுவதற்காகப் பாறையில் வரிசையாகத் துவாரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருவிழாக் காலங்களில் மரத்தாலான தூண்களை நிறுவிப் பந்தல் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அறியற்பாலதாகும். மேற்கூறப்பட்டுள்ள இரு கோயில்களுக்கு மேலாக உயரமான பாறை ஒன்றில் மற்றொரு கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் இன்றளவும் தன்னிலையிலுள்ளதைக் காணலாம். இதன் விமானம் உருண்டை வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது தனிச்சிறப்பாகும். இரண்டாவது பகுதியிலுள்ள கோயிலின் அருகிலும், இக்கோயிலின் அருகிலும் இயற்கையாக அமைந்த கனைகள் உள்ளன. இதுகாறும் கூறப்பட்டுள்ள கட்டடக் கோயில்களில் தற்போது சமண சமய சிற்பங்கள் எதுவும் இல்லை.

## கற்படுக்கைகள்

இயற்கை எழில் நிறைந்த இம் மலையில் முக்கியமான மூன்று குகைகளில் கற்படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டடக் கோயிலின் அருகிலுள்ள குகை ஒன்றில் படுக்கை ஒன்று காணப்படுகிறது. இதன் ஒரு பகுதியில் சிறிய அளவில் சமண பாதங்கள் செதுக்கப்பட்டுள்ளன. குகையின் முன்பகுதியில் கற்களை அடுக்கிச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இதற்குச் சற்று மேலாகச் சென்றால் மற்றொரு குகையைக் காணலாம். குகையில் நீள்சதுர வடிவில் படுக்கை ஒன்று அழகுற வடிக்கப்பட்டுள்ளது. இப்படுக்கையின் ஒரு பகுதியில் இயற்கையாக அமைந்த சுனை ஒன்றும் காணப்படுகிறது. இதற்கு

மேலாகத் தனியான பாறை ஒன்றிற்கருகில் உள்ள குகையில் மூன்று கற்படுக்கைகள் அடுத்தடுத்து அமைக்கப்பட்டுள்ளன.

## சமண பாதங்கள்

தமிழகத்திலுள்ள பல மலைகளில் தீர்த்தங்கரர்களது திருவடிகளைச் செதுக்கி வைக்கப்பட்டிருப்பது போன்று பகவதிமலையில் இரு பகுதிகளில் பாதங்கள் காணப்படுகின்றன. முதலாவது கற்படுக்கையின் ஒரு பகுதியில் சிறிய அளவில் பாதங்கள் பொறிக்கப்பட்டுள்ள செய்தி முன்னரே கூறப்பட்டுள்ளது. இப்படுக்கையை அடுத்துள்ள இரு செங்கற் கோயில்களை ஒட்டி ஏறத்தாழ 5 1/2 அடி நீளமுள்ள இரு பாதங்கள் பெரிய அளவில் அழகுற செதுக்கப்பட்டுள்ளன. இப் பாதங்களின் மேற்பகுதியிலும், கீழ்ப்பகுதியிலும் வட்டங்களுக்குள் தாமரை மலர்கள் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. நடுப் பகுதியில் நாற்கோண அமைப்பு செதுக்கப்பட்டுள்ளது. இப்பாதங்களைச் சுற்றிலும் செங்கற்களைக் கொண்டு சிறிய சதுர வடிவமான சுவர் பிற்காலத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. **தமிழகத்தில் இதுவரை தெரிய வந்துள்ள சமண பாதங்களைக் காட்டிலும் பகவதிமலையிலுள்ள பாதங்களே அளவிலும், அமைப்பிலும் பெரியவையாகும்.**

## கல்வெட்டுகள்

பகவதிமலையின் இரண்டாவது பகுதியில் காணப்படும் கட்டடக் கோயில்களின் அருகிலுள்ள பாறைகளில் இரண்டு தமிழ்க் கல்வெட்டுகளும், சில தெலுங்கு கல்வெட்டுகளும் உள்ளன. முதலாவது கல்வெட்டு இராட்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ணனது 26–வது ஆட்சியாண்டில் (கி.பி.965) பொறிக்கப்பட்டதாகும். இக்கல்வெட்டில் நுளம்பன் திரிபுவன தீரன் என்பவன் பங்கள நாட்டுப் படுவூர்க் கோட்டத்தைச் சார்ந்த **வேலூர்ப்பாடி** என்னும் ஊரை (வேலப்பாடி) இம்மலையிலுள்ள **பன்னபேஸ்வரம்** என்னும் கோயிலுக்குத் தானமாக வழங்கிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இக்கோயில் **பன்னப்பை** என்பவரால் எடுப்பிக்கப்பட்டது என்றும், கல்வெட்டு காணப்படும் பாறை சூடாடும் பாறை என அழைக்கப்பட்டது எனவும் அறிய வருகிறோம். (S.I.I. Vol.I. No.51) இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பன்னபேஸ்வரம்

என்பது சிவன் கோயிலைக் குறிப்பதாகும். ஆனால் இம் மலையிலுள்ள கட்டடக் கோயில்கள் எதுவும் சிவன் கோயிலாக இருந்தமைக்குரிய சான்றுகள் தற்போது இல்லை. எனவே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சிவன் கோயில், கல்வெட்டு காணப்படும் பாறையுள்ள குகையாக இருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

பெரிய அளவில் காணப்படும் சமண பாதங்களுக்கும், இரு சிறிய கட்டடக் கோயில்களுக்கும் இடைவெளிப் பகுதியில் மற்றொரு தமிழ்க் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. சிதைந்த நிலையிலுள்ள இக்கல்வெட்டின் ஒரு பகுதியில் 'யக்கர்க்குர....' என்னும் சொல் காணப்படுகிறது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள 'யக்கர்' என்னும் சொல் சமண சமய 'யக்ஷரைக் (Yaksha) குறிப்பதாகும். இக்கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் கி.பி.13, 14 ஆம் நூற்றாண்டு எழுத்துக்களின் வரிவடிவம் பெற்றிருப்பதால் இத்தலம் கி.பி.13, 14–ஆம் நூற்றாண்டு வரையிலும் சமண சமய முக்கியத்துவம் பெற்றதாக விளங்கியிருத்தல் வேண்டும்.

இம்மலையிலுள்ள தெலுங்கு கல்வெட்டுகள் மிகவும் சிதைந்து காணப்படுகின்றன. சக வருடம் 1539–ல் பொறிக்கப்பட்டுள்ள இக் கல்வெட்டுகளில் நல்ல குருவையா என்பவர் குறிக்கப்பட்டுள்ளார். ஆனால் இக்கல்வெட்டுகள் சமண சமயத்தைச் சார்ந்தவையா என்பது அறிவதற்கில்லை.

## கல்வெட்டுகள் தரும் உண்மைகள்

கி.பி.10–ஆம் நூற்றாண்டில் இம் மலைக்குப் பகவதிமலை என்ற பெயர் இருந்ததாகத் தெரியவில்லை. இராட்டிரகூட மன்னனது கல்வெட்டு காணப்படும் பாறை சூடாடும் பாறை எனப் பெயர் பெற்றிருந்திருக்கிறது. முன்னர் சமண சமய தலமாக விளங்கிய இம்மலை கி.பி.10–ஆம் நூற்றாண்டில் சைவ சமயத் தலமாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். மூன்றாம் கிருஷ்ணனது கல்வெட்டு இத்தலத்துறையும் இறைவனை பன்னபேஸ்வரர் என்று குறிப்பிடுவதால், கி.பி.10–ஆம் நூற்றாண்டில் சைவ சமயத்தவர் வழிபாடு நடத்தியிருக்க வேண்டுமென்பது புலனாகும். ஆனால் சமண பாதங்களுக்கு அருகில் உள்ள 'யக்கர்...' என வரும் கி.பி.13, 14 – ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டினை நோக்கும்போது மறுபடியும் இத்தலம் சமண

# 10. சரவணன்பேடு பார்சுவநாதர் கோயில்

தமிழகத்தில் சமண சமயத்தவர் ஏராளமான குடைவரைக் கோயில்களையும் கட்டடக் கோயில்களையும் உருவாக்கி கலை, சமயம், சமுதாய வளர்ச்சி ஆகியவற்றிற்கு அரும்பெரும் தொண்டாற்றியுள்ளனர். இச் சமயத்தவரால் கட்டப்பட்ட பார்சுவநாதர் கோயில் ஒன்று செங்கற்பட்டு மாவட்டத்தில் கும்மிடிபூண்டி தாலுக்காவைச் சார்ந்த சரவணன்பேடு என்னும் ஊரில் காணப்படுகிறது. இக்கோயில் தற்போது மிகவும் சிதைந்த நிலையில் நன்கு கண்காணிக்கப்படாமல் உள்ளது.

## ஊரின் பெயர்கள்

அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழில் இத்தலத்திற்கு **சிறுவை, சிறுவாபுரி** என்னும் பெயர்கள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வூரிலுள்ள கொற்றவைக் கோயிலில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் இவ்வூருக்கு **சிவரம்பேடு** என்னும் பெயர் வழங்கிவந்ததமை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்காலத்தில் இப்பகுதி **சின்னம்பேடு** எனவும், சரவணன் பேடு எனவும் அழைக்கப்படுகிறது. சமண சமயத்தவராகிய ‘சிரவணர்’ வாழ்ந்து வந்ததனால் இவ்வூர் சரவணன்பேடு எனப்பெயர் பெற்றிருத்தல் வேண்டும். மேலும் சின்னம்பேடு என்னும் பெயரும் சினர் (ஜைனர்) பேடு என்பதன் மருவாக இருத்தல் வேண்டும். ஆனால் இவ்வூருக்கு எந்த நூற்றாண்டிலிருந்து சரவணன்பேடு அல்லது சின்னம்பேடு என்னும் பெயர் வழங்கப்பட்டது என்று அறுதியிட்டுக் கூறுவதற்குரிய சான்றுகள் எதுவும் தற்போது கிடைக்கவில்லை.

## பார்சுவநாதர் கோயில்

சரவணன்பேட்டிலுள்ள பார்சுவநாதர் கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. தற்போது இக்கோயிலின் மகாமண்டபமும், விமானமும் மிகவும் சிதைந்த

நிலையில் காணப்படுகின்றன. மேலும் முன்னர் இக்கோயிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த சுற்றுமதில் தற்காலத்தில் முற்றிலும் அழிந்து விட்டது.

இக்கோயில் முன்பு வேறுவிதமாகக் கட்டப்பட்டு பிற்காலத்தில் புதுப்பிக்கப் பட்டிருக்க வேண்டும். ஏனெனில் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றில் கூறையில் மிகவும் சிதைக்கப்பட்ட கல்வெட்டுக்களைக் கொண்ட கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. இக் கற்களும் சரிவர அடுக்கப்படாது மாறி மாறி வைக்கப்பட்டுள்ளன. முன்னர் இக் கல்வெட்டுக்களைக் கொண்ட கருங்கற்கள் கோயிலின் அடித்தளப் பகுதியில் இடம்பெற்றிருக்க வேண்டும். இக்கோயில் பழுதடைந்த பின்னர், புதுப்பித்தவர்கள் இக்கற்களைக் கூறை வேய்வதற்குப் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பது அறியற்பாலதாகும். மேலும் இக்கோயிலின் அமைப்பு தற்காலக் கலைப்பாணியை உடையதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மகாமண்டபத்திற்கு எதிராக பலிபீடம் காணப்படுகிறது. இதில் மேற்பகுதியில் சமண சமயச் சின்னமாகிய சுவஸ்திகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதனை ஒட்டிக் காணப்பட்ட கிணறு தற்போது முற்றிலும் மணலால் மூடப்பட்டுள்ளது.

## பார்சுவநாதர் சிற்பம்

இக்கோயிலின் கருவறையினுள் ஏறத்தாழ இரண்டரை அடிஉயரமுள்ள அழகுமிக்க பார்சுவநாதர் சிற்பம் பீடமொன்றில் காணப்படுகிறது. ஆடையின்றி நின்ற கோலத்தில் காட்சி அளிக்கும் தீர்த்தங்கரரது தலைக்கு மேலாக ஐந்துதலை நாகம் படம் விரித்த வண்ணம் காணப்படுகிறது. பாம்பின் உடல் தீர்த்தங்கரரின் பின்பகுதியில் வளைந்து வளைந்து கால்பகுதிவரையிலும் செல்வதைக் காணலாம். கருணைவடிவான முகமும், ஞானத்தைக் குறிப்பதற்காக மூடியவாறு அமைக்கப்பட்ட கண்களும், சற்று எடுப்பான மூக்கும், வடிக்கப்பட்ட காதுகளும் இச்சிற்பத்திற்கு அழகூட்டுவனவாகத் திகழ்கின்றன. இத் தீர்த்தங்கரரது வலது புறத்தில் பதும நிதியும், இடது புறத்தில் சங்க நிதியும் கைகளில் சாமரங்களை ஏந்திய வண்ணம் சிறிய அளவில் காட்சியளிக்கின்றனர். இவ்விருவரது தலைக்கு மேலாக முறையே தாமரை மலர், சங்கு ஆகியவை செதுக்கப்பட்டுள்ளன.

இவற்றிலிருந்து சிறிய இலைகளைக் கொண்ட கொடிபோன்ற அமைப்புகள் சங்கநிதி, பதுமநிதி ஆகியோர் அணிந்திருக்கும் கிரீடங்கள்வரை தொங்கியவாறு அமைக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்கரரின் உடல் அமைப்பு, சங்கநிதி, பதுமநிதி ஆகியோர் உடலிலுள்ள அணிகலன்கள், அலங்காரங்கள் முதலியவற்றின் அடிப்படையில் இச்சிற்பம் பிற்காலச் சோழராட்சியில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது நன்கு புலனாகும்.

## கல்வெட்டும் காலமும்

பார்சுவநாதர் கோயில் பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளதால் முன்பு கோயிலின் அடிப்பகுதியில் காணப்பட்ட கல்வெட்டுகளைக் கொண்ட கற்கள் கூரை வேயப்பயன் படுத்தப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டபோது சிதைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஒரு பகுதியில் மட்டும்

........., ......... 'சபையொம் .................. விரிச்சிக'

என்ற சொற்கள் காணப்படுகின்றன. மேலும் சில இடங்களில் ஓரிரு எழுத்துக்கள் மட்டும் எஞ்சியுள்ளன. இவ்வெழுத்துக்கள் அனைத்தும் கி.பி.12, 13–ம் நூற்றாண்டு வரிவடிவத்தினைப் பெற்றுள்ளன.

பார்சுவநாதர் சிற்பத்தின் கலைப்பாணி, சிதைந்த கல்வெட்டிலுள்ள எழுத்துக்களின் வரிவடிவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, இத்தலம் கி.பி.12, 13–ம் நூற்றாண்டிலேயே சமண சமய முக்கியத்துவம் வாய்ந்ததாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

## பாதுகாப்பு தேவை

தமிழகத்தில் சமண சமயத்தவர்களால் உருவாக்கப்பட்ட பல கோயில்களும், பாறைச் சிற்பங்களும் இன்னும் சரிவர கண்காணிக்கப்படாமல் உள்ளன. சரவணன் பேட்டிலுள்ள பார்சுவநாதர் கோயில் பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்ட பின்னரும் சரிவர கண்காணிக்கப்படாமையால் சிதைந்துள்ளது. அண்மையில் இக்கோவிலைச் சுற்றியுள்ள இடம் ஆக்ரமிக்கப்பட்டது போக மீதியுள்ள இடத்தில் சிறிய அளவில் கோவில் அமைக்கப்பட்டது. சுற்று சுவர் மற்றும் இரும்பு கதவுகள் அமைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.

# 11. புழல் ஆதிநாதர் கோயில்

தமிழகத்தில் சமண சமயம் நன்கு வேரூன்றத் தொடங்கிய திலிருந்து ஏராளமான கோயில்களும், கலைச் செல்வங்களும் உருவாக்கப்படலாயின. பொதுவாக கி.பி. 7– ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் குடைவரைக் கோயில்களையும், குகை கோயில்களையும் அமைக்கும் வழக்கம் குறைந்து, கட்டடக் கோயில்கள் அதிக அளவில் எழுப்பப்படலாயின. சமண சமயக் கோயில்கள் பல காலப்போக்கினால் அழிவுற்றதும், சமயக்காழ்ப்பினால் சிதைக்கப்பட்டதும் வரலாற்றினால் அறியப்படும் உண்மையாகும். இவற்றுள் சிலவற்றை கலையார்வமும், சமயப்பற்றும் கொண்ட பெரியோர் புதுப்பித்து நன்னிலைக்கு கொண்டு வந்துள்ளனர். இத்தகைய சமணக் கோயில் ஒன்று சென்னைக்கு வடக்கில் ஒன்பது கல்தொலைவிலுள்ள புழல் என்னும் ஊரில் காணப்படுகிறது.

## கோயில்

புழலில் உள்ள கோயில் ஆதிநாதர் என அழைக்கப்பெறும் ரிஷப தேவருக்கு எழுப்பப்பட்ட கோயிலாகும். தற்போது இக்கோயில் முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு தற்காலக் கலைப்பாணியில் காணப்படுகிறது. முன்பு சிதைந்த நிலையில் இருந்த இக்கோயிலினை வட இந்திய சமணப் பெருந்தகையோர் சில காலத்திற்கு முன்பு புதுப்பித்து சிறப்புற வழிபாடு நடைபெற ஏற்பாடு செய்துள்ளனர். கருவறை, மண்டபங்கள் ஆகிய அமைப்புகளைக் கொண்ட இக்கோயிலின் விமானம் தற்போது நாகர (Nagara) கலைப்பாணியில் கட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முன்பு இக்கோயில் எந்த அமைப்பினில், எத்தகைய சிறப்பு அம்சங்களைக் கொண்டிருந்ததென்று தற்போதுள்ள கோயிலின் கலைப்பாணியைக் கொண்டு கூறுவதற்கில்லை.

## கோயிலின் தொன்மை

புழல் சமணக் கோயிலைப்பற்றி வி.ஜி.நாயர் என்பார் எழுதியுள்ள புத்தகத்தின் தமிழாக்கத்தில்[1], கி.மு.முதல் நூற்றாண்டில் இக்கோயில் கட்டப்பட்டதென்றும், திருக்குறள் ஆசிரியராகிய திருவள்ளுவர் புழல் கோயிலுள்ள ஆதிநாதரைப் பூசிதது வந்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத்தினை ஏற்றுக் கொள்வதற்குத் தகுந்த ஆதாரங்கள் எதுவும் இல்லை.

மெக்கன்சி அவர்களது தொகுப்பில்[2] தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த குறும்பர்களைப் பற்றியும், அக்குறும்பர் தலைவன் ஒருவன் சமணத் துறவி ஒருவரால் சமணசமயத்தைத் தழுவினான் எனவும், குறும்பர்கள் புழலில் சமணசமய முனிவரின் பெயரால் கோயில் ஒன்று கட்டினர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் ஆதொண்ட சோழமன்னன் குறும்பர்களை வெற்றி கொண்டு திருமுல்லைவாயிலில் (சிவன்) கோயில் ஒன்று கட்டினான் எனவும் கூறப்பட்டுள்ளது. மெக்கன்சி தொகுப்பின் மற்றொரு பகுதியில்[3] ஆதொண்ட மன்னன் குலோத்துங்கனுக்குப் பிறந்தவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்டவைகளை ஆதாரங்களாக எடுத்துக் கொண்டாலும், ஆதொண்ட மன்னனால் அழிக்கப்பட்ட குறும்பர்கள் சோழர் காலத்தவர்களாக இருத்தல் வேண்டும் என்றும், அக்குறும்பர்கள் புழலில் கட்டிய சமணக் கோயிலும் அக்காலத்தைச் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்று கூற இயலுமே ஒழிய, கி.மு. முதல் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறுவதற்கியலாது. (மெக்கன்சி அவர்களின் தொகுப்பில் கல்வெட்டுப் பகுதிகளைத் தவிர எஞ்சியவை பொது மக்களிடமிருந்து சேகரித்த செய்திகளாக இருப்பதால் அவற்றை முழுமையாக வரலாற்றிற்குரிய மூலங்களாக எடுத்துக் கொள்வதற்கில்லை என அறிஞர்கள் கருதுகின்றனர்.)

தற்போது இக்கோயிலின் பிரகாரத்தில் காணப்படும் ஆதிநாதர் சிற்பத்தினை அடிப்படையாகக் கொண்டு, ஜீவபந்து டி.எஸ்.ஸ்ரீபால் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல,[4] இங்குச் சோழர் காலத்தில் சமணக் கோயில் இருந்தது எனக் கூறலாமே தவிர, அதற்கு முன்பு கோயில் இருந்ததென்று கூறுவதற்குரிய சான்றுகளில்லை.

## சிற்பங்கள்

புழல் கோயிலின் பிரகாரத்தினுள் கருவறைக்கு மேற்குப் பகுதியில் அழகிய ஆதிநாதரது சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இச்சிற்பத்தில் ரிஷபநாதர் யோக நிலையில் அமர்ந்தவண்ணம் காட்சியளிக்கிறார். இவரது தலைக்கு மேற்பகுதியில் முக்குடையும், இவரது இருமருங்கிலும் சாமரை வீசுவோர்களும் காணப்படுகின்றனர். இத்திருவுருவத்தின் தலைப்பகுதியில் அரைவட்டவடிவ வளைவும், அலங்கார வேலைப்பாடுடைய கொடி போன்ற அமைப்புகளும் இடம் பெற்றுள்ளன. அமைதிக்கும், அறிவுடைமைக்கும் இலக்கணமாகத் திகழும திருமுகமும், வடிக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் மூக்கும், உதட்டின் ஒரு பகுதியும், கையின் ஒரு பகுதியும் சிதைந்துள்ளன. இச்சிற்பத்தின் கலைப்பாணியை அடிப்படையாகக் கொண்டு இது கி.பி.10 அல்லது 11 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறலாம். இத்தீர்த்தங்கரரின் திருவுருவம் முன்பு கோயிலின் கருவறையினள் வைக்கப்பட்டு வழிபாட்டிற்குரியதாகத் திகழ்ந்திருக்க வேண்டும் எனவும், பின்னர் இச்சிற்பம் சிதைவுறவே அதற்குப் பதிலாக வேறொரு சிற்பத்தை நிறுவியிருக்க வேண்டும் எனவும் கருத இடம் உள்ளது.

தற்போதுள்ள கருவறையிலும் அழகிய ரிஷபநாதர் சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இது பிரகாரத்தினுள் காணப்படும் சிற்பத்தினைப் போன்ற அமைப்புகளுடன் சற்று பெரிய அளவில் திகழ்கிறது. இதிலும் ரிஷபநாதர் அமர்ந்த கோலத்தில், சாமரை வீசுவோர்களை இருமருங்கிலும் கொண்டவராய் விளங்குகிறார். இச்சிற்பத்தின் பீடத்தின் அடிப்பகுதியில் சிறிய அளவில் ரிஷபத்தின் புடைப்பியற் சிற்பம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத் தீர்த்தங்கரரது சிற்பம் காலத்தால் சற்று முந்தியது போலத் தோன்றினும், தற்போது மிகவும் மெருகூட்டப்பட்டும், அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டும் திகழ்வதால் உறதியாக இதன் காலத்தினைக் கூறுவதற்கில்லை.

இக்கோயிலின் முதலாவது மண்டபத்தூண்களுள் ஒன்றினில் அமர்ந்த கோலத்தில் தீர்த்தங்கரர் ஒருவரது சிறிய சிற்பமும், அத்தூணின் மறுபுறம் யானையின் மீதமர்ந்து மூவர் செல்லுவது போன்ற காட்சியினைக் குறிக்கும் சிற்பமும் காணப்படுகின்றன. இச்சிற்பங்களின்

மீது பலமுறை சுண்ணாம்பு பூசப்பட்டுள்ளதால் அவற்றைப் பற்றிய விளக்கமான செய்தியினை அறிவதற்கியலவில்லை.

## கல்வெட்டுகள்

புழல் ஆதிநாதர் கோயிலில் முன்பு கல்வெட்டுகள் இருந்தனவா என்று கூறவதற்குச் சான்றுகள் தற்போது இல்லை. இவ்வூரிலுள்ள திருமூலத்தானமுடையார் (சிவன்) கோயில் கல்வெட்டுகளில் இக் கோயிலுக்கு இம்மடிமங்கய தேவர், சம்புவராயர் முதலிய **12–ஆம்** நூற்றாண்டிற்குப் பிற்பட்ட அரசர்கள் நிலங்கள் முதலியன கொடுத்தமை பற்றிய செய்திகள் காணப்படுகின்றனவேயன்றி, ஆதிநாதர் கோயிலைப் பற்றியோ அல்லது அக்கோயிலுக்குரிய பள்ளிச்சந்த நிலங்களைப் பற்றியோ குறிப்புகளில்லை. எனவே ஆதிநாதர் கோயிலின் தொன்மையை அறிவதற்கு இக்கோயிலின் பிரகாரத்துள் காணப்படும் கி.பி.10 அல்ல 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆதிநாதர் சிற்பத்தைத் தவிர வேறு சான்றுகள் தற்போது இல்லை.

## அடிக்குறிப்புகள்

1. வி.ஜி.நாயர் – புழல், பக்.12,
2. T.V. Mahalingam (ed.) Mackenzic Manuscripts - MSS No.13
3. Ibid. MSS No.13, Section-2- p.93.
4. டி.எஸ். ஸ்ரீபால், எம்மான் கோயில் – பக்.2.

---

அண்மையில் புழலில் சதுர்முகசிந்தாமணி பார்சுவநாதர் திகம்பர ஜினாலயம் அமைக்கப்பட்டு வழிபாட்டிலுள்ளது.

# 12. சம்பந்தரும் சமணமும்

தமிழகத்தில் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து சமண சமயம் பரவத் தொடங்கியது. அறவாழ்க்கையை மேற்கொண்ட இச்சமயத்தவரின் கருத்துகளை அக்காலத் தமிழக மக்கள் பெருமளவில் ஏற்றுக் கொண்டதால் இந்து சமய வளர்ச்சி சற்று குன்றத் தொடங்கியது. இதனால் சைவ, வைணவ சமயக் குரவர்கள் சமண சமயத்தின் மீது காழ்ப்பு கொண்டனர். இக் காழ்ப்புணர்வால் சமயப் பூசல்கள் ஏற்பட்டு சமண சமயத்தவர் பல தொல்லைகளுக்கு ஆளாயினர். தேவாரம் பாடிய மூவருள் ஒருவராகிய **திருஞானசம்பந்தர்** சமண சமயத்தைப் பற்றி தேவாரத்தில் குறிப்பிட்டுள்ள செய்திகளை இங்குக் காண்போம்.

## சமணர் வாழ்க்கை

தேவாரப் பாடல்களில் சம்பந்தர் சமணர்களைப் பழித்துக் கூறியிருப்பினும் அவற்றிலிருந்து சமண சமயத்தவர்களது வாழ்க்கையினை ஓரளவு அறிய முடிகிறது. அக்காலச் சமணத் துறவிகள் கையினில் தடுக்கினையும், மயிற்பீலியினையும், குண்டிகையினையும் கொண்டிருந்தனர், (338:10), தலைமயிரைக்களைதலும் (15:10), வெற்றரையில் துயில்வதும் (109:10), பிறர் இடும் உணவினை உண்ணுதல் (180:10) இவர்களது வழக்கமாகும். இச் சமயத் துறவிகள் காட்டிலும் (325:10), பள்ளிகளிலும் (325:10) வாழ்ந்து வந்தனரென்று அறிகிறோம். மேலும் சமணத் துறவிகளுள் ஆடை அணியும் வழக்கமற்றோரும். (98:10), துண்டுகளாலாகிய ஆடையினை அணிபவரும் (15:10) அக்காலத்தில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளதை நோக்குங்கால் திகம்பர சமணத் துறவிகள் வாழ்ந்து வந்தனரென்பது நன்கு புலனாகும். இம் முனிவர்கள் சுடு நோன்பு மேற்கொள்பவர் என்றும் (361:10), வாது செய்வதில் வல்லவர்கள் என்றும் (77:10) சம்பந்தரே குறிப்பிட்டுள்ளார். தலைமயிரைக் களைதல், தரையில் துயிலுதல், நீராடாமை, ஆடையணியாதிருத்தல், முதலிய ஒழுக்கங்களைச் சமண முனிவர் கடைப் பிடிப்பது வழக்கமாகும்.

## சமணப் பெரியோர்கள்

பண்டைக் காலத்தில் பாண்டி நாட்டில் சமண சமயம் சிறப்புற்றிருந்தது. மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த கூன்பாண்டியனும் சமண சமயத்தைச் சார்ந்தவனாகும் இம்மன்னன் காலத்தில் சந்துசேனன், இந்துசேனன், தரும சேனன், கந்து சேனன், கனகசேனன், புட்பநந்தி, பவனநந்தி, கனகநந்தி, குணகநந்தி ஆகிய சமண சமயப் பெரியோர்கள் வாழ்ந்து வந்தனரென அறியவருகிறோம். (294 : 4; 297 : 6) (இங்குக் கூறப்பட்டுள்ள பெயர்களுள் சந்துசேனன், குணகநந்தி முதலியவை ஞானசம்பந்தர் சமண முனிவர்களைக் கேலி செய்வதற்காக உருவாக்கிய பெயர்களாகவும் இருக்கலாம்) பாண்டிய மன்னன் வெப்பு நோயால் உழன்றபோது இச்சமய அறவோர்கள் பெரிதும் உதவிபுரிந்துள்ளனர். மேலும், இவர்கள் ஞான சம்பந்தருடன் சமயவாது புரிந்ததாகவும் தேவாரப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

## மதுரையில் சமணம்

சம்பந்தர் காலத்தில் தமிழகத்தில் சமணம் மிகவும் சிறப்புற்றிருந்த தலம் மதுரையாகும். சம்பந்தரே ஆனைமலை முதலிய பல இடங்களில் சமணர் வாழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். (297:1). மதுரையை ஆண்ட பாண்டியன் சமண சமயத்தைத் தழுவியிருந்ததால், அவனைச் சைவநெறிக்குக் கொணர்வதற்காகப் பாண்டிய அரசியும், அமைச்சரும் சம்பந்தரை மதுரைக்கு வரப்பணித்துள்ளனர். ஆலவாயில் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குச் சமணர் தீயிட்டனரென்றும், இதனால் பாண்டிய மன்னனுக்கு வெப்புநோய் ஏற்படும்படிச் செய்தாரெனவும், பின்னர் சமணரை வென்று பாண்டியனைக் குணப்படுத்தி சைவத்திற்கு மீட்டார் எனவும் தேவாரம் கூறுகிறது. எவ்வாறாயினும், அக்காலத்தில் மதுரை மாநகர் சமண சமய முக்கியத்துவம் வாய்ந்த தலமாக விளங்கியதென்பதில் ஐயமில்லை.

## சமயக் காழ்ப்பு

அக் காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் சமண சமயம் தழைத்தோங்கியிருந்தது மட்டுமின்றி அரசர்களின் செல்வாக்கினையும் பெற்றிருந்தது. வேத முறைப்படி வேள்விகளையும், உயிர்ப்பலியினையும் செய்து வந்ததனை அறவாழ்வை மேற்கொண்ட சமண சமயத்தவர்

எதிர்த்திருக்கின்றனர் (366:1). இதனால்தான் இவர்கள் 'அந்தணாளர் புரியும் அருமறை சிந்தை செய்யா அருகர்' (366:5) எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். சமணர்கள் அஹிம்சை தர்மத்தை நிலைநாட்டி சாதி, சமய பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முற்பட்டதால், வேதமுறைப்படி வேள்வி செய்து வந்தவர்கள் அச்சமுற்றிருக்கின்றனர். இதனால் சைவ, வைணவ சமயத்தோர் சமண சமயத்தின் மீது அளவிலா வெறுப்பு கொண்டனர். மேலும் தேவாரப் பாடல்களில் சமண, புத்த சமயத்தவர்கள் சைவ சமயத்தின் பகைவர்கள் என்றோ, சைவ சமயத்தைப் பழித் துரைப்பவர்கள் என்றோ குறிப்புகளில்லை. உயிர்க் கொலைகளையும், வேத வேள்விகளையும் தான் சமணர் எதிர்த்து வந்துள்ளனர். எனவே, ஞானசம்பந்தரின் குறிக்கோள் வேத வேள்வியைப் பரப்புவதேயன்றி, உண்மையான சைவ சமயக் கொள்கைகளை நிலைநாட்டுவது இல்லை என்பது தெளிவாகும்.[1]

## சமணரைப் பழித்தமை

சமண சமயத்தின் மீது அளவற்ற வெறுப்பு கொண்டிருந்த ஞானசம்பந்தர் சமணரைப் பழித்துக் கூறியுள்ளமையைத் தேவாரப் பாடல்களில் காணலாம். சமணர் நாணமற்றவர்களென்றும், நல்லவை அறியாதவரென்றும் (72:10), செடி நுகரும் பழக்கம் உடையவரென்றும் (41:10), குளித்து உண்ணாதவர்களென்றும் (114:10), குண்டர்களென்றும் (138:10) பாவிகள் என்றும் (366:11), பொய்யரென்றும் (309:1) பலவாறு குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களது அறநூற்கள் புறங்கூறும் பொய் நூற்களென்றும் (107:10) சம்பந்தர் கூறியுள்ளார். அற வாழ்க்கையை மேற்கொண்ட சமண சமயத்தவரை புலால் நாற்றமுடையவர்களென்று (180:10) தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளமை ஞானசம்பந்தர் சமணர் மீது கொண்டிருந்த வெறுப்பினைக் காட்டுகின்றதேயொழிய வேறெதுவுமில்லை என்பது தெளிவாகும்.

## சமணப் பெண்டிரைப் பழித்தமை

சமணத் துறவிகளைத் தமது பாடல்களில் வசைமொழிகளால் குறிப்பிட்டது மட்டுமின்றி, சமண, புத்த சமயப் பெண்டிரைக் கற்பழிக்க வேண்டும் என சம்பந்தர் ஆலவாய் அழல் நிறக் கடவுளைப் பாடிப்

பரவியுள்ளார்; இதனை

*'பெண்ணகத் தெழிற் சாக்கியப் பேயமண்*
*தெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே'* .........

என்னும் அடிகள் நன்குணர்த்தும் **(305:3)**. சைவசமயத்தைச் சீர்படச் செய்யவந்த சீர்காழிச் செம்மலின் பாலறா வாயினின்றும் வெளிவந்த சொற்கள் தாம் இவை, தமிழர் பண்பாட்டில் கற்பிற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதை இலக்கியங்கள் இனிது எடுத்தியம்புகின்றன. கற்புக்கரசியாகிய கண்ணகியும், பாண்டியன் மாண்டவுடன் அவனுடன் உயிர் நீத்த பாண்டிமா தேவியும் வாழ்ந்த தமிழகத்தில் தோன்றிய ஞானசம்பந்தர் சமண, சாக்கியப் பெண்டிரைக் கற்பழிக்க வேண்டுமென இறைவனை நோக்கிப் பாடியிருப்பது மிகவும் வருந்தத் தக்க செய்தியாகும்.

## சமணரைக் கழுவேற்றியமையும், பள்ளிகளை இடித்தமையும்

பெரிய புராணத்தில் சம்பந்தர் வரலாற்றினைக் கூறுங்கால் மதுரை நகரத்தில் சம்பந்தருடன் சமயவாது செய்து தோல்வியுற்றதாகக் கூறப்படும் சமணர்களைப் பாண்டிய மன்னன் கழுவேற்றக் கட்டளை பிறப்பித்தான் எனவும், அமைச்சர் குலச்சிறையார் எண்பெருங்குன்றம் முதலிய இடங்களிலுள்ள எண்ணாயிரம் சமண சமயத்தவரைக் 'கழுத்தறி நிரையில்' ஏற்றிக் கொன்றார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.[2] இதுமட்டுமின்றி மதுரை நாகரின் புறத்தே இருந்த சமணப் பள்ளிகளை எல்லாம் இடித்து அழித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.[3] தமிழகத்தில் சமண சமயத்தின் மீது காழ்ப்பு கொண்டிருந்த இந்து சமயத்தவர் மதுரையைப் போன்று பல்வேறு இடங்களிலிருந்த பள்ளிகளை அழித்தமையும், சமண சமயத்தவரைக் கொடுமைப்படுத்தியமையும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

## சேக்கிழார் புனைந்துரை

திருஞானசம்பந்தரது தேவாரத்தில் காணப்படாத சில செய்திகளை சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் கற்பனைகளாகக் கூறியுள்ளார். சம்பந்தரது தந்தையாகிய சிவபாத இருதயர், இவ்வுலகில் சமண, சாக்கிய அறநெறிக் கொள்கைகள் மிகுதியாகப் பரவியிருப்பதால்,

அவற்றை அழித்து நீக்கத் தமக்கு ஓர் ஆண் மகவு பிறக்க வேண்டும் எனத் தவமிருந்ததாகவும் அதன் பயனாகத் தோன்றிய சம்பந்தர் சமண சமய நெறியினை ஊழிகள் தோறும் பாழ்படும்படிச் செய்வதற்காகவே அவதாரம் செய்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.[4] பிறந்த பொழுதே சம்பந்தர் சமண சமயத்தை அழிக்கத் தோன்றியவர் என்று கூறப்பட்டுள்ளது சேக்கிழாரது கற்பனையே ஆகும். மேலும் எண்பெருங்குன்றங்களில் வாழ்ந்த சமணர்கள் தங்களுக்குச் சம்பந்தரால் ஏற்பட இருந்த அழிவினை முன்னதாகவே கனவு கண்டதாகவும் கூறப்பட்டுள்ளது. சமணப் பள்ளிகளின் மேல் ஆந்தை, கூகை முதலிய புள்ளினங்கள் சண்டையிடுவது போன்றும், சமணத் துறவிகள் கையில் கொண்டிருந்த மயிற்பீலி, பாய் முதலியன கீழே விழுவது போன்றும், அசோக மரத்தின் கீழிருந்த அருகன் மீது அம்மரம் சாய்ந்து விழுவது போன்றும், இதனால் சமண முனிவர்களும் குரத்திகளும் அச்சமுற்று ஓடுவது போன்றும் கனவு கண்டதாகக் கூறப்பட்டுள்ள செய்திகள் சேக்கிழாரது புனைந்துரைகள் என்பதில் ஐயமில்லை.[5]

சம்பந்தரது இடைவிடா முயற்சிகளால் சமண சமய வளர்ச்சி சற்று பாதிக்கப்பட்டதேயன்றி முற்றிலும் தமிழகத்தில் அழிந்து விடவில்லை. சோழராட்சியில் சமண சமயக் கோயில்கள் பல கட்டப்பட்டுள்ளன. இவை போன்று விசயநகர அரசர் காலத்தில் முன்னரிருந்த சமணக் கோயில்களில் மண்டபங்கள் பல கட்டப்பட்டுள்ளன. மேலும் பல கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் பிற்காலத்திலும் சமண சமயம் தன்னிலையிலிருந்ததற்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. டி.எஸ்.ஸ்ரீபால், 'தமிழகத்தில் சைனம்', பக்.55
2. பெரிய புராணம், பா. 2756, 2758,
3. பெரிய புராணம், பா. 2774,
4. பெரிய புராணம், பா. 1922, 1929,
5. பெரிய புராணம், பா. 2534–2547

**குறிப்பு** 'சமணரைக் கழுவேற்றியமை' என்னும் தலைப்பிற்கு முன்னருள்ள பகுதியில் அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் ஞானசம்பந்தரது தேவாரப் பதிக, பாடல் எண்களைக் குறிக்கும்.

# 13. சமண சமயத்தில் யக்ஷி

சமண சமய நூற்களில், ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் ஒவ்வொரு யக்ஷி பணிபுரிபவர்களாகவும், காவல் தெய்வங்களாகவும் நியமிக்கப்பட்டனரென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சமயத்தில் கூறப்பட்டுள்ள இருபத்து நான்கு யக்ஷிகள் சக்ரேஸ்வரி, ரோகிணி, ப்ரக்ஞப்தி, வஜ்சிரிங்கலா, புருஷதத்தா, மனோவேகி, காளி, சுவாலாமாலினி, மகாகாளி, மாநவி, கௌரி, காந்தாரி, வைரோடினி, அனந்தமதி, மாநசி, மகாமாநசி, ஜயா, விஜயா, அபராஜிதா, பகுருபினி, சாமுண்டி, கூஷ்மாண்டி, பத்மாவதி, சித்தாயிகா ஆகியோராகும் இவர்களுள் தமிழகத்தில் அம்பிகா, பத்மாவதி, சித்தாயிகா முதலியோரது சிற்பங்கள் தீர்த்தங்கரார்களுக்கு அருகில் அமைக்கப்பட்டும்தனியாகச் செதுக்கப்பட்டும் வழிபாட்டிற் குரியனவாகத் திகழ்ந்திருக்கின்றன.

## இலக்கியச் சான்று

சங்க இலக்கியங்களில் யக்ஷியைப் பற்றிய குறிப்புகளில்லை எனினும், சற்று பிற்காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் யக்ஷி சமண சமயத் தெய்வமாகக் குறிப்பிடப்பட்டுள்ளாள். ஆயர் முதுமகளாகிய மாதரி என்பாள் யக்ஷிக்குப் பாற்சோறு படைத்து வழிபட்டமையை,

*'அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய*
*புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்*
*பால்மடை கொடுத்துப் பண்பிற் பெயர்வோன்*
*ஆயர்முது மகள் மாதரி என்போள்''*[1]

என்னும் பகுதியால் அறிய வருகிறோம். இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 'இயக்கி' என்னும் சொல் 'யக்ஷி' என்னும் வடமொழிச் சொல்லின் தமிழாக்கமாகும்.[2] எனவே சமண சமயத்தில் வழிபடப்பட்டு வந்த யக்ஷி தமிழகத்தில் இயக்கி என்னும் பெயரால் வழிபடப்பட்டுள்ளாள். மேற்கூறப்பட்டுள்ள பகுதியில் இயக்கியைப் பற்றிய

குறிப்பு மட்டும உள்ளதால் யக்ஷி தனியாக வழிப்படப்பட்டுள்ளாள் என்பதும் நன்கு புலனாகும். சிலப்பதிகாரச் சான்றினை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது தமிழகத்திற்கு யக்ஷி வழிபாட்டினைக் கொண்டு வந்தவர்கள் சமண சமயத்தவர் என்பது உறுதியாகும்.

## கல்வெட்டுகள்

வட ஆர்க்காடு மாட்டத்தைச் சார்ந்த பஞ்ச பாண்டவமலை, திருமலை, பொன்னூர் ஆகிய இடங்களிலுள்ள சமண சமயக் கல்வெட்டுகளிலிருந்து யக்ஷி வழிபாடு சிறந்திருந்தமையைத் தெரிய வருகிறோம். பஞ்சபாண்டவ மலையிலுள்ள மூன்றாம் நந்திவர்மன் காலக் கல்வெட்டொன்று, புகழாலை மங்கலத்தைச் சார்ந்த நாரணன் என்பவன் பொன் இயக்கியாரது திருவுருவத்தினையும், நாகநந்தி என்பவரது உருவத்தினையும் சிற்பங்களாகச் சமைக்க ஏற்பாடு செய்ததாகக் குறிப்பிடுகிறது.[3] திருமலைக் குடைவரையிலுள்ள கல்வெட்டொன்றால், அரிட்டநேமி ஆச்சாரியார் என்பவர் யக்ஷி சிற்பம் ஒன்றை நிறுவியதாக அறிய வருகிறோம்.[4] மேலும் இக்கோயிலிலுள்ள 10 –ம் நூற்றாண்டைச் சார்ந்த மற்றொரு கல்வெட்டு சேர அரச பரம்பரையைச் சார்ந்த **எழினி** என்பவரால் யக்ஷர், யக்ஷி சிற்பங்கள் நிறுவப்பட்டனவென்றும், பிற்காலத்தில் அவை பழுதடைந்து போகவே, **விடுகாதழகியப் பெருமாள்** என்பவர் அவற்றைச் சரி செய்து வழிபாட்டிற்குரியனவாகச் செய்தான் என்றும் கூறுகிறது.[5] பொன்னூர் ஆதிநாதர் கோயிலிலுள்ள 18–ம் நூற்றாண்டு கல்வெட்டில், இப்பகுதியிலுள்ள சமண சமயத்தவர் பார்ஸ்வநாதர், சுவாலமாலினியம்மன் (யக்ஷி) ஆகியோரது உலாகத் திருமேனிகளை ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் வழிபாட்டின்போது கனககிரியிலிருந்து (பொன்னூர்) நீலகிரிக் குன்றிற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்ல வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

மதுரை மாவட்டத்தைச் சார்ந்த ஐவர்மலையிலுள்ள வரகுண பாண்டியனது கல்வெட்டொன்றில் (கி.பி.870), **சாந்தி வீரக் குரவர்** என்பவர் பார்ஸ்வநாதர் சிற்பத்தினையும், யக்ஷிகளது சிற்பங்களையும் புதுப்பித்தாரெனக் கூறப்பட்டுள்ளது.[7] இது போன்று இன்னும் சில சமண சமயக் கல்வெட்டுக்களில் யக்ஷியைப்பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. மேற்கூறப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்திகளிலிருந்து

யக்ஷி வழிபாடு சமண சமயத்தில் சிறப்புற்றிருந்தமையை நன்கு உணரலாம்.

## யக்ஷி சிற்பங்கள்

தமிழகத்தில் காணப்படும் ஏராளமான யக்ஷி சிற்பங்களல் ஒரு சிலவற்றை மட்டும் இப்பகுதியில் காண்போம். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த ஆனந்த மங்கலம் சமணக் குடைவரைக் கோயிலிலுள்ள சிற்பங்களுள் நேமிநாதரும், அவரது அருகில் காணப்படும் **அம்பிகா யக்ஷி**யும் முக்கியமானவைகளாகும். இந்த யக்ஷி சிங்கத்தின் மீது நிற்பவளாகவும், தனது இடது கையால் குழந்தை ஒன்றின் தலையினைத் தொட்டவாறும் காணப்படுகிறாள். தலையில் அழகு மிக்க மகுடமும், உடலில் பல்வேறு அணிகளும் திகழ்கின்றன. பொதுவாக யக்ஷி சிற்பத்தைத் தீர்த்தங்கரர் சிற்பத்திற்கு இடது புறத்தில் அமைப்பதுதான் வழக்கம். ஆனால் இங்கு அம்பிகா நேமிநாதரது வலப்புறத்தில் காணப்படுகிறாள்.

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த பஞ்ச பாண்டவமலையிலுள்ள குடைவரைச் சிற்பங்களில் இடம் பெற்றுள்ள யக்ஷி அமர்ந்த வண்ணம் காட்சியளிக்கிறாள். இவளது வலது கை இவள் அமர்ந்திருக்கும் பீடத்தின் மீது வைக்கப்பட்டும், இடது கை பழம் ஒன்றினைப் பெற்றும் காணப்படுகின்றன. பீடத்தின் அருகில் மூன்று வழிபடுவோர் சிற்பங்கள் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. இக்குடைவரையிலுள்ள மூன்றாம் நந்திவர்மன் காலக் கல்வெட்டில் குறிக்கப்படும் '**பொன் இயக்கி**' இதுவேயாகும். இத்தெய்வம் மகாவீரரது யக்ஷியாகிய சித்தாயிகாவாக இருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.[8]

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த சோழபாண்டி புரத்திலுள்ள ஆண்டிமலையில் பல சமண சிற்பங்கள் உள்ளன. இவற்றுள் தர்மதேவி யக்ஷியின் சிற்பமும் ஒன்றாகும். கி.பி.10–ம் நூற்றாண்டைச் சார்ந்த இச்சிற்பம் காளியம்மன் என்றழைக்கப்படுகிறது.[9]

மதுரையை அடுத்துள்ள ஆனைமலையில் வரிசையாகப் பல சமண சமய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அமர்ந்த நிலையில் காணப்படும் பத்மாவதி யக்ஷியின் சிற்பம் முக்கியமாகக்

குறிப்பிடத்தக்கதாகும். இவளது வலதுகை பழமுடனும், இடது கை மடியின் மீது வைக்கப்பட்டும் உள்ளன. இத் தெய்வம் அமர்ந்திருக்கும் பீடத்தில் கந்தர்வர் சிற்பங்கள் சிறிய அளவில் செதுக்கப்பட்டுள்ளதையும் காணலாம். இக்குடைவரையிலுள்ள தீர்த்தங்கரர்களது சிற்பங்களைப் போன்று பத்மாவதியின் சிற்பம் பெரிதாகவே அமைக்கப்பட்டுள்ளதால், இந்த யக்ஷிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகும்.

மதுரை மாவட்டத்து செட்டிப்பொடவிலுள்ள மலையில் சமண சமய தீர்த்தங்கரர்கள், யக்ஷிகள் ஆகியோரது சிற்பங்களைக் காணலாம். இவற்றுள் முதலாவதுள்ள யக்ஷி சிங்கத்தின் மீதமர்ந்து, ஒரு கையில் வில்வினையும், மற்றொரு கையில் அம்பினையும் பெற்று விளங்குகிறாள். மற்றிரு கரங்களிலுள்ள படைக்கலன்கள் இன்னதென அறிவதற்கில்லை. சிங்கத்திற்கெதிரில் யானை மீது வாளும், கேடயத்துடன் விளங்கும் வீரனொருவனைப் போன்ற சிற்பம் உள்ளது. போர்க் கோலத்தில் காட்சியளிக்கும் இந்த யக்ஷி மகாவீரரது யக்ஷியாகிய சித்தாயிகாவாக இருக்கக் கூடும் என பி.பி. தேசாய் அவர்கள் கருதுகின்றனர்.[10] இம் மலையில் பத்மாவதி யக்ஷியின் சிற்பமும் காணப்படுகிறது. இவ்வியக்கியின் உருவம் வலது காலைத் தொங்கவிட்டு, இடதுகாலை மடக்கிப் பீடத்தில் வைத்தவண்ணடம் உள்ளது.[11]

நெல்லை மாவட்டத்தில் கழுகுமலை சமண சமய முக்கியத்துவம் வாய்ந்த தலமாகும். இம்மலையில் ஏராளமான சமணத் திருவுருவங்களும், கல்வெட்டுக்களும் உள்ளன. இங்குள்ள சிற்பங்களில் நேமிநாதரது யக்ஷியாகிய அம்பிகாவும், பார்ஸ்வநாதரது யக்ஷியாகிய பத்மாவதியும் இடம் பெற்றிருத்தலைக் காணலாம்.

குமரி மாவட்டத்தைச் சார்ந்த திருச் சாரணத்து மலையில் பத்மாவதி (அல்லது சித்தாயிகா), அம்பிகா முதலிய யக்ஷிகளின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள குடைவரையில் காணப்படுமூ மூன்று கருவறைகளில் ஒன்றினுள் யக்ஷி சிற்பம் காணப்படுகிறது. பிற்காலத்தில்தான் இது இந்து சமயத் தெய்வமாக மாற்றப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தைச் சார்ந்த நாகராசர் கோயிலில் பத்மாவதியின் சிற்பமும், தீர்த்தங்கரர்களது சிற்பங்களும்

காணப்படுகின்றன. மேற்கூறப்பட்டுள்ள செய்திகளிலிருந்து தீர்த்தங்கரர்களுக்கும், யக்ஷிகளுக்கும் தமிழகத்தில் ஏராளமான சிற்பங்கள் செதுக்கப்பட்டமை அறியற்பாலதாகும்.

## தமிழகத்தில் சிறப்புற்ற யக்ஷிகள்

சமண சமயத்தில் ஒவ்வொரு தீர்த்தங்கரருக்கும் ஒவ்வொரு யக்ஷி கூறப்பட்டிருந்தபோதிலும், தமிழகத்தில் **அம்பிகா, பத்மாவதி, சித்தாயிகா, சுவாலமாலினி** முதலிய யக்ஷிகளே முக்கிய மானவர்களாகக் கருதப்பட்டுள்ளனர். இவர்களுக்குள் அம்பிகாவிற்கே முதலிடம் கொடுக்கப்பட்டதையும் அறிய வருகிறோம். எடுத்துக்காட்டாக, திருச்சாரணத்து சமணக் குடை வரையிலுள்ள மூன்று கருவறைகளில் ஒன்று அம்பிகா யக்ஷிக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. கி.பி.13 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் இது பகவதியம்மனாக மாற்றப்பட்டு இந்துக்களால் வழிபடப்பட்டிருக்கிறது. மேலும், அம்பிகா, சித்தாயிகா ஆகிய இருவரது சிற்பங்கள் இந்து சமயத்தில் வழிபடப்பட்டுவந்த கொற்றவை, பார்வதி முதலியோரது சிற்பங்களைப் போன்று போர்க்கோலத்திலும், கருணை வடிவத்திலும் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சுவாலமாலினி வழிபாடு தமிழகத்தில் சற்று பிற்காலத்தில்தான் தோன்றியிருக்கிறது. மேலும், தாந்திரீக வழிபாட்டின் தொடர்பினால் இத் தெய்வத்திற்கு நான்கிற்கு மேற்பட்ட திருக்கரங்களும் அவற்றில் பல்வேறு படைக்கலன்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

## யக்ஷி, கொற்றவை, பகவதி

சமண சமயத்தில் 'பட்டாரியார்' என்பது முக்கியமான பெண் துறவியையோ அல்லது யக்ஷியையோ குறிப்பிடுவதாகும். திருச் சாரணத்து மலைக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள பட்டாரியார் சமண சமய யக்ஷியைக் குறிக்கிறது. இந்து சமயத்தில் 'பிடாரியார்', 'பட்டாரியார்' என்னும் பெயர்கள் கொற்ற வைக்கும், பகவதியம்மனுக்கும் இருந்ததாகத் தெரியவருகிறது. பல்லவ அரசன் கம்பவர்மன் காலக் கல்வெட்டொன்றிலும்,[12] முதலாம் இராசேந்திரன் காலக் கல்வெட்டொன்றிலும்[13] துர்க்கை (கொற்றவை) பட்டாரியார் என்றழைக்கப்படுகிறார். இதுபோன்று கன்னியாகுமரிப் பகவதியம்மன்

கோயிலிலுள்ள மிக்கவாறான கல்வெட்டுகளில் மூலத்தானத்திலுறையும் தெய்வம் 'கன்யா பட்டாரியார்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.[14] எனவே யக்ஷிகளுக்கும் கொற்றவைக்கும், பகவதிக்கும் பட்டாரியார் என்ற பெயரளவில் ஒரு தொடர்பிருப்பதைக் காணலாம்.

மேலும் யக்ஷிகளின் சிற்பங்கள் சில கொற்றவையைப் போன்று சிங்கத்தினை ஊர்தியுடையதாகவும், அம்பு, வில், முதலிய படைக்கலன்களைக் கொண்டதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இவையன்றி சில யக்ஷி சிற்பங்கள் அமர்ந்த நிலையில் அருள் வடிவாகக் காணப்படும் பகவதி (பார்வதி)யின் சிற்பங்களை ஒத்தவைகளாகத் திகழ்கின்றன. எனவே சிற்ப அமைப்புகளின் அடிப்படையிலும் யக்ஷிக்கும், இந்து சமயப் பெண் தெய்வங்களுக்கும் ஒற்றுமை உள்ளதை அறியலாம்.

சங்க காலத்திலிருந்தே கொற்றவை வழிபாடு தமிழகத்தில் சிறந்திருந்ததை சங்க இலக்கியங்களின் மூலம் அறியவருகிறோம். இவ்விலக்கியங்களில் யக்ஷியைப் பற்றிய செய்திகளிலில்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் ஓரிடத்தில் யக்ஷி (இயக்கி)யைப் பற்றிய குறிப்பும், பல்வேறு இடங்களில் கொற்றவையின் பல்வேறு திருவுருவ அமைப்புகளைப் பற்றிய செய்திகளும் உள்ளன. முக்கியமாகக் கொற்றவை சிங்கத்தின் மீதமர்ந்து அம்பு, வில் முதலிய படைக்கலன்களைக் கொண்டவளாகக் கூறப்பட்டுள்ளாள். இவ்விலக்கியச் சான்றுகளையும், பிற்காலத்தில் சமைக்கப்பட்ட கொற்றவை, யக்ஷி சிற்பங்களையும் ஆராயுமிடத்து இரண்டிற்கு மேற்பட்ட திருக்கரங்களுடன், வில், அம்பு முதலிய படைக்கலன்களைக் கொண்ட யக்ஷி சிற்பங்களுக்குக் கொற்றவை சிற்பங்கள் முன்னோடியாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

## கிராமப்புற யக்ஷி (இயக்கி)

குமரி மாவட்டத்தில் இந்து சமயத்தவரால் வணங்கப்பட்டு வரும் கிராமப்புற பெண் தெய்வங்களுள் முக்கியமானது இயக்கி (இசக்கி)யாகும். இவள் தற்போது காளியின் ஒரு அம்சமாகக்

கருதப்படுகிறாள். ஊரின் புறத்தே இத் தெய்வத்திற்குச் சிறிய அளவில் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் மிக்கவாறும் இயக்கியின் சுடுமண் உருவங்களே காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம் தாலுகாக்களைச் சார்ந்த ஊர்களில் இயக்கி வழிபாடு மிகவும சிறப்புடன் நடைபெறுகிறது. இத்தெய்வம் இந்து சமயத்தவரால் இப்பகுதியில் வழிபடப்பெறினும், 'யச்சி' (யக்ஷி) என்றே அழைக்கப்படுகிறது. சமண சமயத்தில் வழிபடப்பட்டுவந்த யக்ஷியே நாளடைவில் 'யச்சி' எனவும், 'இசக்கி' எனவும் பெயரிடப்பட்டு இந்து சமயத்தவரால் வழிபடப்பட்டு வருகிறதென்பது தெளிவாகும்.

இந்து சமயத்திற்குள் கொண்டுவரப்பட்ட இத்தெய்வம் அச்சத்தைக் கொடுப்பவளாகவும், தீயவர்களை அழிப்பவளாகவும் கருதப்படுகிறது. பொதுவாக அறுவடை காலத்திற்குப் பின்னர் இவளுக்கு விழாவெடுத்தலையும், அவ்விழாவின்போது கோழி, கிடா முதலியவற்றைப் பலியிடுவதையும் காணலாம். மகப்பேறற்ற மகளிர் இத் தெய்வத்தை வழிபட்டு மரத்தால் செய்யப்பட்ட சிறு தொட்டிலைக் காணிக்கையாகச் செலுத்தினால் மகப்பேறடைவர் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

சில கோயில்களிலுள்ள இயக்கி குழந்தை ஒன்றினை இடுப்பில் வைத்தவண்ணம் காட்சியளிப்பதை நோக்கும் போது, சமண சமயத்திலுள்ள அம்பிகா யக்ஷி வழிபாட்டிலிருந்தான் தற்கால இந்து சமயத்தில் இசக்கி வழிபாடு தோன்றியிருக்க வேண்டும் என்று கூறலாம். (அம்பிகா யக்ஷி இடதுகையால் குழந்தை ஒன்றின் தலையைத் தொட்டு கொண்டிருப்பதாக ஆனந்த மங்கலத்தில் சிற்பம் உள்ளது) இத்தெய்வத்தைப் பற்றிப் பல்வேறு விதமாக மக்களால் கூறப்பட்டு வருகிறது. முக்கியமாக இசக்கி ஊர் காவல் தெய்வம் எனவும், இந்து சமயத்திலுள்ள பெருந்தெய்வங்களின் பரிவார தெய்வம் எனவும், காளி எனவும், பேய் எனவும் பலவாறாகக் கூறப்படுகிறது. எவ்வாறாயினும் தமிழகத்தில் இசக்கி வழிபாடு சமண சமயத்திலிருந்து தோன்றிய பின்னர் பல மாறுதல்களுக்குள்ளாகியிருக்கிறதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

# அடிக்குறிப்புகள்

1. சிலம்பு, வரிகள் 2445–2448
2. N.Subramanian, Pre-Pallavan Tamil Indiex. p.107.
3. Epi.Indica, Vol, IV, p.137.
4. S.I.I, Vol. I, No.73.
5. Epi. Indica, Vol. VI, p.331,
6. ARE, 416/1926.
7. ARE. 705/1906.
8. P.B. Desai. Jainism in South India and some Jaina Epigraphs p.40.
9. Ibid. p.49.
10. Ibid. pp. 58-59.
11. மயிலை, சீனி, வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக் 157.
12. S.I.I., Vol. 12, No,106.
13. ஏ.ஏகாம்பரநாதர், 'கருக்கினிலமர்ந்தவள்' கோயில் திருக்கோயில் செப்டம்பர், 1975. பக்.31,
14. கன்னியாகுமரி மாவட்டக் கல்வெட்டுகள், பாகம் 1, எண் 20,29,31.

# 14. சிலப்பதிகாரத்தில் சமணம்

எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கிற்கு ஏராளமான இலக்கியங்களைச் சமண சமயத்தவர் உருவாக்கிச் சூட்டி மகிழ்ந்துள்ளனர். அவற்றுள் இளங்கோவடிகள் யாத்த சிலப்பதிகாரம் சிறப்புமிக்க காவியமாகும். அரச வாழ்வை வெறுத்துத் துறவறம் பூண்ட இளஞ்சேரனின் இதயக்கிடக்கையே இதன் பிரதிபலிப்பாகும். இக்காப்பியம் சமணசமயக் கருத்துக்களை மட்டுமின்றி, அக்கால மக்கள் வாழ்க்கை, அரசியலமைப்பு, பிறசமயங்கள், கலைகள் முதலியனவற்றையும் விளக்கிக் காட்டும் காலக் கண்ணாடியாக விளங்குகிறது. இந்நூலில் பிறசமய தெய்வங்களைப் பற்றிய செய்திகள் இடம்பெற்றிருந்த போதிலும் **இளங்கோவடிகள் சமணசமயக் கோயில்கள், சமண சமய உட்கருத்துக்கள் முதலியனவற்றை ஆங்காங்கே திறம்பட தீட்டியுள்ளார்.** அன்புக்கு இலக்கணமாக கவுந்தியடிகளை அருளறம் பூண்ட அன்னையாகவும், தவ வலிமைமிக்க மூதாட்டியாகவும் படைத்து அவர் வாயிலாக அருகனது அருள்நெறிகளைப் பரப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இறுதியாக யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை என்பதனைச் சுட்டிக்காட்டி, மானிடப் பிறவியெடுத்தோர் நல்வாழ்வு பெற சமணசமய நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

## சமணசமயக் கோயில்கள்

பண்டைக்காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்த சமணசமயக் கோயில்களைப் பற்றி சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளமையைக் காணலாம். அக்கோயில்கள் காலப்போக்கில் அழிவுற்ற பின்னரும் அவற்றைப் பற்றி ஓரளவு அறிய இலக்கியங்கள் சான்றுகளாகத் திகழ்கின்றன. சிலப்பதிகாரத்தின் பதிகத்தில் முதன் முதலாக **குணவாயிற் கோட்டம்** பற்றிய செய்தி காணப்படுகிறது.[1] மூத்தோன் இருக்க இளையோன் அரசுரிமை பெறுவது

முறையல்ல எனக்கூறி அரச வாழ்வை வெறுத்த இளங்கோ துறவறம் பூண்டு குணவாயிற்கோட்டத்தை அடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இக்குணவாயிற்கோட்டம் மிக்கவாறும் சமணசமயக் கோயிலாக அல்லது பள்ளியாக இருந்திருக்க வேண்டும்.

சேரநாட்டில் கொடுங்களூருக்கு அருகில் குணவாய் என்னும் பெயருடைய ஊர் ஒன்றுள்ளது. இங்குச் சிதைந்த நிலையில் கருங்கல்லினால் கட்டப்பட்ட கோயில் ஒன்று காணப்படுகிறது. தற்போதைய குணவாய் என்னுமிடத்திலுள்ள கோயில் குணவாயிற் கோட்டமாக இருக்கவேண்டுமென ஆய்வாளர் கருதுகின்றனர்[2]. இங்குக் கூறப்பட்டுள்ளபடி குணவாயும், குணவாயிற்கோட்டமும் ஒன்றெனக் கருதுவதில் தவறில்லை. ஆனால் குணவாயிலுள்ள கற்கோயில் சிலப்பதிகார காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட கோயில் அல்ல. பொதுவாக தென்னிந்திய கட்டடக்கலை வரலாற்றில் கற்களைப் பயன்படுத்திக் கோயில் கட்டியுள்ளமை கி.பி.7 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் எனலாம். இதற்கு முன்னர் கற்கோயில்கள் இருந்ததற்குத் தற்போது போதிய சான்றுகளும் இல்லை. எனவே குணவாயிலுள்ள கோயில் முன்பு செங்கல்லால் கட்டப்பட்ட கோயிலாக இருந்து, பிற்காலத்தில் கருங்கல்லால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என கூறுதலே முறையாகும்.[3] எவ்வாறாயினும் குணவாயிற்கோட்டம் சமண சமயத்தைச் சார்ந்த கோயில் அல்லது பள்ளி என்பதனை வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்திரவிழா சிறப்புற கொண்டாடப்பட்ட பூம்புகார் நகரில் பிறவாயாக்கைப் பெருமான் கோயிலும், அறுமுகச்செல்வேள் அணிதிகழ் கோயிலும் வால்வளைமேனி வாலியோன் கோயிலும் இருந்தன. இவையன்றி இந்நகரில் அறத்தினைக் காக்கும் அறவோர் பள்ளியும் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது .[4] இது அறநெறிகளைக் காத்தோம்பும் சமணசமயத்தவரது பள்ளியாகும். கனாத்திறமுரைத்த காதையில் **நிக்கந்தகோட்டம்**[5] எனும் அருகன் கோயிலைப்பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளதால் புகார் நகரில் சமணக்கோயில் இருந்ததென்பது தெளிவாகும். மேலும் கண்ணகியும், கோவலனும் புகார் நகரைவிட்டு மதுரைக்குச் செல்லப் புறப்படுங்கால் ஐவகை நின்ற அருகதானத்தையும், இலங்கொளிசிலாதலத்தையும் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.[6]

இங்குக் குறிப்பிட்டுள்ள அருகதானம் (அருகஸ்தானம்) சமணக்கோயில் எனவும், இலங்கொளி சிலாதலம் என்பது சமண சமயச் சான்றோர் கூடி அறவுரை பகருதற்கென கட்டப்பட்ட மேடை எனவும் கருதப்படுகிறது.[7]

சிலப்பதிகார காலத்தில் உறையூர் சமணசமய முக்கியத்துவம் வாய்ந்த தலமாகத் திகழ்ந்தது. இங்குத் திங்கள் மூன்றடுக்கிய திருமுக்குடையின் கீழ் அமர்ந்த கோலத்திலிருந்த அருக தேவனின் திருவுருவம் இடம் பெற்றிருந்தது.[8] இத்திருவுருவம் பிண்டி எனப்படும் அசோக மரத்தின் நிழலிலிருந்ததெனக் கூறப்பட்டுள்ளதால் இங்கிருந்த கோயில் கட்டடக் கோயிலாக அன்றி, இயற்கையான சூழ்நிலையுடையதாய் அசோக மரத்தின் நிழலிலிருந்ததெனக் கூறப்பட்டுள்ளதால் இங்கிருந்த கோயில் கட்டடக் கோயிலாக அன்றி, இயற்கையான சூழ்நிலையுடையதாய் அசோக மரநிழலில் அமைந்த கோயிலாக இருந்திருக்க வேண்டும். பண்டைத் தமிழகத்தில் கோயில்கள் மரங்களின் கீழ் அமைக்கப்பட்டதையும் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய வருகிறோம்.

கவுந்தியடிகளிடம் கண்ணகியை ஒப்படைத்துவிட்டு கோவலன் மதுரை மாநகரைக் காணச் சென்றான். அந்நகரில் அவன் நுதல்விழிநாட்டத்திறையோன் கோயிலையும், உவணச் சேவலுயர்த்திய திருமால் கோயிலையும், மேழி வலனுயர்த்த பலராமன் கோயிலையும், அறுமுகச் செவ்வேள் கோயிலையும், அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியையும் காண்கிறான்.[9] இங்கு அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளி எனக் குறிப்பிட்டிருப்பது சமணசமயப் பள்ளியாகும். மதுரையில் சமண சமயக் கோயில் இருந்ததைக் கவுந்தியடிகள் வாயிலாகவும் அறிய வருகிறோம். கண்ணகியுடன் கோவலன் மதுரைநகருக்குச் செல்லும் விருப்பத்தினைத் தெரிவிக்குங்கால், கவுந்தியடிகளும் ஆடல் மதுரையிலிருந்த அருகக்கடவுளை வணங்கும் பேறு பெற வேண்டும் என்னும் தன் எண்ணத்தினை வெளிப்படுத்தி, அவர்களுடன் மதுரை நகருக்குச் செல்கிறார்.[10] சிலப்பதிகார காலத்திற்கு முன்னரே மதுரையும், அதனை அடுத்துள்ள பகுதிகளும் சமண சமயத்தலங்களாக விளங்கியதற்குக் கல்வெட்டுக்களும், கற்படுக்கைகளும் சான்றுகளாகத் திகழ்கின்றன. மதுரையில் திருப்பரங்குன்றம், ஆனைமலை, அரிட்டாபட்டி, மாங்குளம், முத்துப்பட்டி ஆகிய இடங்களில்

பிராமி கல்வெட்டுக்களும், சமண அறவோர் வாழ்ந்த கைகளில் கற்படுக்கைகளும் உள்ளன. இக்கல்வெட்டுக்கள் கி.மு.2 ஆம் நூற்றாண்டிலிருந்து (கி.பி.2 ஆம் நூற்றாண்டு வரைக்குட்பட்ட காலத்தினைச் சார்ந்தவையாதலின், மதுரையும் அதனையடுத்துள்ள சில பகுதிகளும் சிலப்பதிகார காலத்திற்கு முன்னரே சமணசமயம் சிறப்புற்றிருந்த தலங்களென அறியலாம்.

அடைக்கலக் காதையில், ஆயர் முதுமகளாகிய மாதிரி என்பாள் பூங்கண் இயக்கியை வழிபட்டுள்ளமை கூறப்பட்டுள்ளது.

*'அறம்புரி நெஞ்சின் அறவோர் பல்கிய*
*புறஞ்சிறை மூதூர்ப் பூங்கண் இயக்கிக்குப்*
*பால்மடை கொடுத்துப் பண்பிற வெர்வோள்*
*ஆயர் முதுமகள் மாதிரி என்பாள்'*[11]

அதாவது அறத்துறை மக்களாகிய சமணசமயத்தவர் புறஞ்சிறை மூதூரில் உருவாக்கிய பூங்கண் இயக்கிக்குப் பாற்சோறு படைத்து மாதரி வழிப்பட்டாள் என்பது இதன் பொருளாகும். இங்குக் கூறப்பட்ட இயக்கி என்பது சமண சமயத்தவர் வழிபட்டுவந்த யக்ஷியேயாகும். எனவே மதுரை நகரில் யக்ஷிக்கும் கோயில் இருந்தமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## அருளறம் பூண்டோர்

பூம்புகார் நகரில் சமண சமயத்தவர் வாழ்ந்து வந்தமை சிலப்பதிகாரத்தின் வாயிலாக அறியப்படும் செய்தியாகும். இவர்கள் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று சமண அறநெறிக் கருத்துக்களைப் பரப்பி வந்தனர். பட்டினப்பாக்கத்தில் இருந்த சமண அறவோர் திருவரங்கத்தை அடுத்துள்ள பூம்பொழிலின்கண் வந்து சமண நெறிகளைப் போதித்துள்ளனர். இச் சமய அறவோர் பொய்யாத விரதத்தினை மேற்கொண்டு புலாலுணவைத் துறந்தவர்களாகும். கொல்லாமையைத் தலையாய அறம் என்று கருதினர். ஐம்பொறிகளையும் அடக்கி மெய்ப்பொருளினை நன்குணர்ந்தவராவர். இச்சாரணர்கள் அருகனது அருளால் பொன்னை ஒத்த பூக்களைப் பூக்கும் அசோக மரத்தின் நிழலிலிருந்த அருகக் கடவுளை விழுநீரினால் திருமுழுக்காட்டி

விழா கொண்டாடும் காலத்தும், நெடுந்தேர் விழாவெடுத்தபோதிலும் ஒருங்குடன் கூடி மகிழ்வர், அச்சமயத்தில் உலக நோன்பிகள் பாங்குற அமைத்த இலங்கொளிச் சிலாதலத்தில் இனிது வீற்றிருந்து அருகப்பெருமானின் அருள்நெறிக்கருத்துக்களை உலகிற் கெடுத்துரைப்பார்கள்.[12] சமண சமயத்தவர் அருகக் கடவுளை நன்னீராட்டி வழிபடும் வழக்கமும், கோயிலில் தேர்த்திருவிழா வெடுத்து மகிழ்ந்தமையும் மேற்கூறப்பட்டவற்றினால் அறியற்பாலதாகும்.

கண்ணகி, கவுந்தியடிகள், கோவலன் ஆகியோர் காவிரியின் வடக்கரை வழியாக மதுரைக்குச் செல்லுங்கால் ஆற்றுவீயரங்கமாகிய திருவரங்கத்தின் அண்மையிலுள்ள பூம்பொழிலில் சமண சமயச் சான்றோர்களைச் சந்தித்தனர். இவர்கள் பூம்புகாரின் புறத்திருந்த பட்டினப்பாக்கத்தில் முன்பு அறவுரை பகன்றவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளதால், இச்சாரணர்கள் சமண சமயத்தை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பரப்புவதற்குக் காரணமாகத் திகழ்ந்தனர் எனலாம். இவர்களைக் கண்ட கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மகிழ்ச்சி பொங்க சாரணர் தலைவனை வணங்கினர். இத்தரும தலைவன் முக்காலத்தினையும் உணரவல்ல ஆற்றல் படைத்தவனாதலின் கோவலன், கண்ணகி ஆகியோரது முற்பிறப்பு வினைகளையும், அது இப்பிறப்பில் விளைக்கவிருக்கும் இன்னல்களையும் நன்றாக உணருகிறான். மேலும் இவ்வறவீரன் விருப்பம், வெறுப்பு முதலிய குணங்களைக் கடந்தவனாதலின் கோவலனது இடர்களை எண்ணிக் கலங்காது. அம்மூவருக்கும் அறவுரை பகருகின்றான்.[15] சிலப்பதிகார காவியத்தில் சமண சமயச் சான்றோர்களைப் பற்றிய குறிப்புகளில் அவர்கள் கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய தீயவழக்கங்களை ஒழித்தவர்களாகவும், விருப்பு, வெறுப்பு முதலியவற்றைக் கடந்த நிலையிலிருப்பவர்களாகவும், அறநெறிக் கொள்கைகளைத்திறம்பட செயல்படுத்தும் அருளறம் பூண்ட அண்ணலாராகவும் விளங்குவதைக் காணலாம்.

## கவுந்தியடிகள்

இங்கோவடிகள் கவுந்தியடிகள் என்னும் சமண சமயப் பெண் துறவியை நல்லறம் போற்றும் குணநலன்களையுடைய பாத்திரமாகப்

படைத்துள்ளார். தவவலிமை, அன்பு, அருளொழுக்கம், அறிவு முதிர்ச்சி ஆகியவற்றின் முழு வடிவமாகக் காட்சியளிக்கும் கவுந்தியடிகள் காப்பிய ஆசிரியரின் உள்ளக் கிடக்கையின்றும் உதித்த ஓர் உன்னத படைப்பெனில் அது மிகையாகாது. மேலும் கண்ணகிக்கு வழித் துணையாகவும், ஒரு தாயைப் போன்று அன்பு செலுத்தும் அருள் வடிவமாகவும் திகழ்கிறார். தான் இழந்த பொருளை மீட்டும் பொருட்டு கோவலன், காவியத் தலைவியுடன் பூம்புகாரை விட்டு மதுரைக்குச் செல்ல புறப்பட்டான். வழியில் தவவொழுக்கமுடைய கவுந்தியடிகளைச் சந்தித் வணங்குவதாக இளங்கோ கட்டுரைக்கின்றார். தம்மை வணங்கிய அவர்களிடம அன்பு காட்டி, அவர்களது துன்பத்திற்குக்கான காரணத்தை கவுந்தியடிகள் வினவ, கோவலன் தன் சலம்புணர் கொள்கை சலதியோடாடிக் குலந்தருவான் பொருளை இழந்தமை பற்றியும், அதனை மீண்டும் பெறும் பொருட்டு நான்மாடக் கூடலுக்கு மனையாளுடன் செல்ல விருப்பத்தையும் கூறுகிறான். முன்வினைப்பயனால் இன்னலுறும் அவ்விருவருக்கும் அறிவுரை கூறி, தானும் மதுரையிலுள்ள மறவுரை நீத்த மாசறு கேள்வியோர் ஏத்தும் அருகக் கடவுளை வணங்கும் விருப்பம் உடையவராய் இருத்ததால், அவ்விருவருடன் மதுரைக்குச் செல்ல கவுந்தியடிகள் உடன்படுகிறார்.

காடுகளையும், சோலைகளையும் கடந்து அம்மூவரும் அரவணைத் துயிலும் அரங்கப்பெருமான் கோயிலுக்குச் சற்று தொலைவிலுள்ள பொழிலிலிருந்த சாரணர்களைக் கண்டு வணங்குகின்றனர். ஆங்கிருந்த சமணத் தலைவனிடம் அறவுரை கேட்ட கவுந்தியடிகள் தன் தலைமேற் கரங்குவித்து அருகன் அருள் முனியின் பெருமைகளைப் போற்றிக் கூறுகிறார். இப்பகுதியில் கவுந்தியடிகள் சமயப் பற்று மிக்க ஒரு பெண் துறவியாகவும், அருகக் கடவுளின் மீது அசையா நம்பிக்கை கொண்ட பெண்மணியாகவும் காட்சியளிக்கிறார். காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றினையும் ஒழித்த அருகதேவனது திருவாக்கிற்கன்றி பிறவற்றிற்குத்தான் செவி சாய்ப்பதில்லை என்றும், காமனை வென்ற கடுந்திறலோனின் ஆயிரத்தெட்டு நாமங்களையன்றி பிற பெயர்களைத் தனது நாவால் உச்சரிப்பதில்லை என்றும், ஐம்புலன்களையும் வென்ற ஐயனது திருவடிகளன்றி பிற திருவடிகளைத் தமது கண்கள் காண்பதில்லை

எனவும், தமது கரங்கள் அருளறம் பூண்ட அண்ணலின் திருவுருவத்தை வணங்குமேயன்றி, பிற தெய்வங்களை வணங்காது என்றும் கவுந்தியடிகள் கூறுகின்றார். மேலும் திரு முக்குடைக்கீழ் திகழொளியின் திருவடிகளே தமது தலையில் சூடப்பெறும் அணியாகும் என்றும், சமண அறநெறி நூற்களன்றி பிற நூற்களைக் கற்றலால் தம்மனம் நிறைவு பெறுவதில்லை எனவும் நெஞ்சம் நெக்குருகி நிர்மலனின் புகழ் பாடுகின்றார்.[14]

பூவிரி சோலைகள் புடைசூழ்ந்த காவிரியின் தென் கரையினை அடைந்தபோது வம்பப்பரத்தையும், வறுமொழியாளனும் கவுந்தியடிகளை நோக்கி காமனும், இரதியும் போன்றிருந்த கோவலனையும் கண்ணகியையும், யார் என வினவ, அவர்கள் தம் மக்கள் என்று கூறுகிறார். இதனைக் கேட்ட அவ்விரு சிற்றறிவுடையோர், ஒரு வயிற்றிற் பிறந்த மக்களெனில் கணவனும், மனைவியுமாக வாழ்தல் எங்ஙனம் என்னும் நகைமொழி கூறியதால், கவுந்தியடிகள் சினந்து அவர்களை முதுநரிகளாகுமாறு சபித்தார். பின்னர் கண்ணகி, கோவலன் ஆகியோரது வேண்டுகோளுக்கிணங்க அவர்களது சாப நீங்குமாறு செய்தார்.[15] இவ்வாறு தவத்திறத்தில் சிறந்தவராக விளங்கியதால்தான் கவுந்தியடிகள் அல்லவை கேட்டுச் சினந்து சாபமிடுபவராகவும், பின்னர் சாபவிமோசனம் அளிக்கும் ஆற்றல் பெற்றவராகவும் திகழ்ந்துள்ளார்.

மதுரைப் புறஞ்சேரியில் தங்கியிருந்த சமயம் கோவலன் தனக்கேற்ற துன்பங்களை எண்ணித் துயருற்றபோது கவுந்தியடிகள் அவனுக்கு ஆறுதல்மொழி கூறுகிறார். இப்பிறப்பில் நல்லவை. தீயவை நிகழ்வதற்குக் காரணம் முற்பிறவியில் அவரவர் செய்த செய்கைகளைப் பொறுத்ததாகும். கோவலன் படும் துயரத்திற்கு காரணம் அவன் முற்பிறவியில் செய்த தீவினையாகும். எனவே நன்மையும், தீமையும் அவரவர் முன்வினைப் பயன்களாகும். தயரதன் சொற்படித் தன் மனைவியுடன் இராமன் கானகம் சென்று கடுந்துயர் எய்தியதும், நளமன்னன் தன் தேவியைப் பிரிந்து இன்னலுற்றதும் அவர்களது முன்வினைப் பயனேயாகும். இவ்வாறு முன்வினையால் ஏற்படும் தொல்லைகளை எண்ணிக் கவலைப்படுவதில் பயனில்லை என இன்மொழி கூறி கவுந்தியடிகள் கோவலனை அமைதியுறுமாறு செய்கிறார்.[16]

காவியப் புலவர் கவுந்தியடிகளை அறத்துறை மேம்பட்டு விளங்கிய துறவியாகவும், மூதாட்டியாகவும், கோவலன், கண்ணகி ஆகியோரிடம் அன்பு காட்டி அருள் வழங்கும் அன்னையாகவும், தகவிலாரைச் சபிக்கும் தவவலிமைபெற்ற தன்மையராகவும் உருவாக்கி, சமண சமயக் கருத்துகள் பலவற்றை அவர் வாயிலாக உலகுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## அடைக்கச் சிறப்பு

சமண சமயத்தவர் துன்புற்று வாழும் உயிரினங்களின் துயர் களைவதனைச் சிறந்த அறமெனக் கருதினர். இதனால் தான் நால்வகை தானங்களுள் அடைக்கலதானமும் ஒன்றெனக் கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் அடைக்கலச் சிறப்பினை மாடல மறையோன் வாயிலாக அறிய வருகிறோம். கோவலன் தன் மகளாகிய மணிமேகலைக்குப் பெயர் சூட்டும்போது தானங்கள் பல வழங்கியுள்ளான். அப்போது தானம் பெற வந்த அந்தணன் ஒருவன் யானையிடம் அகப்பட்டுத் துன்புறவே, கோவலன் யானையை அடக்கி அத்தணனை அதனிடமிருந்து காத்தருளினான். பார்ப்பினி ஒருத்தி கீரிப்பிள்ளையினைக் கொன்றதற்காகத் தன் கணவனால் வெறுத்து ஒதுக்கப்பட்டபோது, அவள் கணவனுக்கு நல்லுரை கூறி மனைவியுடன் ஒற்றுமையாக வாழவழி செய்தான். மேலும் கற்புடைய பெண்ணொருத்தியின் கணவன் பூதத்தினால் இறந்தொழிந்தகாலை, அவளையும், அவளது உற்றாரையும் கோவலன் ஆதரித்துக் காப்பாற்றி வந்தான். இவ்வாறு யானை வாய்ப்பட்ட அந்தணன், கணவனால் வெறுக்கப்பட்ட பார்ப்பினி, கணவனை இழந்த பத்தினி ஆகியோரை அடைக்கலப்பொருட்களாகக் கொண்டு கோவலன் காத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயர் முதுமகளாகிய மாதரியிடம் கவுந்தியடிகள் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்து காக்குமாறு வேண்டுகிறார். மேலும் மாதிரி மடந்தையிடம் கண்ணகியை நன்னீராட்டி, செங்கயல் நெடுங்கண்களுக்கு அஞ்சனம் தீட்டி, தேமென் கூந்தலில் மலர்பெய்து, ஒரு தாய் மகளுக்குச் செய்யும் பணிகளனைத்தும் செய்து உதவுமாறு கவுந்தியடிகள் வேண்டுகிறார். தவத்தில் சிறத்தோர் கொடுப்பது

சிறியதாயினும் அதனைக் காத்தலால் பேரின்பம் அமையப் பெறுவார்கள் என்பதனை இப்பகுதியில் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இதனை வலியுறுத்த ஆசிரியர் எட்டிச் சாயலனது வரலாற்றை விளக்கிக் கூறியுள்ளார்.

எட்டிச்சாயலன் வணிகன் சமணத்துறவி ஒருவருக்கு உணவளிக்கும்போது பசியால் வாடிய கருவிரல்குரங்கு ஒன்று அம்முனிவன் சாப்பிட்டு எஞ்சிய உணவினை உண்டு அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கியது. இதனைக் கண்ட முனிவன் சாயலனது மனைவியை நோக்கி அக் குரங்கினைக் குழந்தையினைப் போன்று காத்துவருமாறு கூறினார். சாயலன் மனைவியால் கனிவுடன் காக்கப்பட்டு வந்த அக்குரங்கு வயது முதிர்ச்சியால் இறந்தபோது, அவள் தனது உடமைகளில் ஒரு பங்கு அக்குரங்கினையும் சாரும் என்ற கருத்தினில், அதனைத் தானம் செய்தாள். மறுபிறவியில் அக்குரங்கு வாரணவாசியில் உத்தர கௌத்தன் என்னும் அரசனுக்கு மகவாகத் தோன்றி, அரசுரிமையும் பெற்று முப்பத்திரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் மானிட உடம்பை நீத்து தெய்வ வடிவம் பெற்றது என்று கூறப்பட்டுள்ளது.[17] இக்கதை, சாயலன் மனைவி முனிவன் அருளால் பெற்ற சிறிய குரங்கினைப் பாதுகாத்துத் தன் சொத்துக்களில் ஒரு பகுதியினை அது இறந்தபின்னர் தானமாக அளித்ததன் சிறப்பினை உணர்த்துகிறது. எனவே அறவோர் கொடுக்கும் அடைக்கலப்பொருள் சிறியதாயினும் அதனை காத்தோம்புதாலால் பேரின்ப வாழ்வு கிடைக்கப்பெறும் என்பது இதன் உட்கருத்தாகும்.

## அருகன் திருப்புகழ்

திருவரங்கத்தின் அருகினிலிருந்த பூம்பொழிலில் குழுமியிருந்து அறம் உரைத்த அறவோர்கள் அருகக்கடவுளின் பெருமையினைக் கூறுவதாகக் சிலப்பதிகார ஆசிரியர் காட்டியுள்ளார்.

*‘அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்*
*செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்*
*தரும முதல்வன் தலைவன் தருமன்*
*பொருளன் புனிதன் புராணன் புலவன்*

*சினவரன் தேவன் சிவகதி நாயகன்*
*பரமன் குணவதன் பரத்தி லொளியோன்*
*தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்*
*சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி*
*இறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்*
*குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்*
*சங்கரன் ஈசன் சுயம்பு சதுமுகன்*
*அங்கம் பயந்தோன் அருகன் அருள்முனி*
*பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்*
*விண்ணவன் வேதமுதல்வன் விளங்கொளி*
*ஓதிய வேதத் தொளியுறி னல்லது*
*போதார் பிறவிப் பொதிய றையோர்'*[18]

எல்லாப் பொருட்களையும் அறியும் தன்மையுடையவனும், அறஞ் செய்தலையே சிறந்ததெனக் கருதுபவனும், எல்லையற்ற அறிவினையுடையவனும், எண்வகை வினைகளை வென்றவனும், சித்தனும், பகவனும், தருமத்தின் தலைவனும், மெய்ப் பொருளானவனும், அருங்கல்விச் செல்வம் உடையவனும், தூய்மையுடையவனும், உலகவாழ்விற்குப் பின்னர் முத்தியளிப்பவனும், பரம்பொருளானவனும், பரத்தில் சிறந்த ஒளியாகத் திகழ்பவனும், குறைவில்லாத புகழையுடைய குணப்பொருள் கோமானும், சங்கரனும், ஈசனாக விளங்குபவனும், தானாகத் தோன்றியவனும், எல்லா திசைகளையும் ஓரிடத்தே காணும் தன்மையுடையவனும், அங்கங்களை அருளிச் செய்தவனும், எண் குணங்களை உடையவனும், வேதமுதல்வனும், முழுமுதற் பொருளாகத் திகழ்பவனும் அறநெறிகாக்கும் அருகக் கடவுளாகும். இவ்வருக தேவன் அருளிச் செய்த ஆகமமாகிய விளக்கொளியினைப் பெற்றவர்கள் வீடு பேறடைவார்கள் என்பதாகும். இப்பகுதியில் அருகக்கடவுளின் அருங்குணங்களும், அவன் அருளிய தத்துவச் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. இது அறநெறி பரப்பும் சாரணர்கள் கூற்றாக இருந்த போதிலும் அரசநெறி துறந்து துறவறம் பூண்ட இளங்கோவின் உள்ளக்கிடக்கையாகும். சமணசமயத்தின் மீது ஆசிரியர் கொண்டிருந்த சிறந்த பற்றினை விளக்குவதற்கு இது போதிய சான்றாகத் திகழ்கிறது.

## அறநெறிக்கருத்து

சிலப்பதிகாரம் சமண சமய அறநெறிக் கருத்துக்களை கொண்ட அருங்காப்பியமாகும். இதன் மூலகருத்து 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' என்பதாகும். இவை காப்பிய நலன்களுக்கென வகுக்கப்பட்ட உட்கருத்துகளாகும். ஆனால் இளங்கோவின் எண்ணம் இக்கருத்துக்களை மட்டிலும் கூறுவதன்று. ***அவர் பின்பற்றிய சமணசமயம் சிறந்த அறநெறிகளைக் கொண்டது என்பதனை ஆங்காங்கே காப்பியத்தில் புகுத்தியுள்ளார்***. பல்வேறு சமயங்களையும், கடவுளர்களையும் சிலப்பதிகாரம் உட்கொண்டிருப்பினும், பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை முறைகளைக் கொண்ட மக்களைப் பற்றிக் கூறியிருப்பினும் இறுதியில் சமணசமய அறங்களைத் தன்வாயிலாகக் கூறுவது போன்று உரைத்திருக்கின்றார். இதனால் தான் சிலப்பதிகாரம் தமிழ் இலக்கியங்களுள் தனித்தன்மை பெற்று விளங்குகிறது எனலாம்.

மனையறம்படுத்த காதையில் கண்ணகியும், கோவலனும் கடிமணம் புரிந்து காமனும், இரதியும் போல் கருத்தொருமித்து, உலகியல் வாழ்க்கை நிலையாதது என்பதனையும் மறந்து அனுபவித்தனர் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு **இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை** எனும் அரிய கருத்துக்களை கோவலன், கண்ணகி ஆகியோரது இடைவிடாத இன்பவாழ்வின் மூலம் நமக்கு இனிதுணர்த்தியுள்ளார். இவர்களது இல்லற இன்பத்தில் சிறிது காலத்திற்குள் இடைவெளி ஏற்பட்டதனைப் பின்னர் விளக்கிக் காட்டியும் உள்ளார். மேலும் யாக்கை, இளமை, செல்வம் ஆகியவற்றின் நிலையற்ற தன்மை நடுகற் காதையிலும் கூறப்பட்டுள்ளது.

சேரன் செங்குட்டுவன் கோப்பெருந்தேவியுடன் அரசுகட்டிலிலிருந்தகாலை, கஞ்சுமாக்கள் வாயிலாக சோழனும், பாண்டியனும் இகழ்ந்து கூறியமை கேட்டு சினந்தெழுந்தான். அப்போது நான் மறையாளனாகிய மாடலன் அரசனது சினத்தைத் தணிவித்து இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாத் தன்மையை இனிது கூறுகிறான். மேலும் மானிட வாழ்க்கையை நீத்தபின்னர் மக்கள்

மறுபிறவியில் விண்ணவர்களாகவும், விலங்கினங்களாகவும் தோன்றக் கூடும். உயிரானது ஒரு பிறவியில் செய்த வினைக்குத் தகுந்தாற்போல் அவ்வினை வழியே இயங்கும் எனவும் கூறுகிறான்.[19] அதாவது மானிட வாழ்க்கையில் நல்லவை செய்தால் பிற பிறவிகளிலும் அது நன்மையையே பயக்கும் என்பதும், தீவினை செய்தால் தீயவையே நிகழும் என்பதும் இதன் பொருளாகும்.

## இளங்கோவின் உள்ளக்கிடக்கை

சிலப்பதிகாரத்தில் வரந்தருகாதையின் இறுதிப் பகுதியில் இளங்கோவடிகள் தன் உள்ளத்தின் பிரதிபலிப்பைப் படம் பிடித்துக் காட்டுகிறார். இது மக்கள் நல்வாழ்வு பெற கடைப்பிடிக்கவேண்டிய அறநெறி சாரமாகும்.

*பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்*
*தெய்வந்தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்*
*பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்*
*ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்*
*தானஞ் செய்மின் தவம்பல தாங்குமின்*
*செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்*
*பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்*
*அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்*
*பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்*
*பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்*
*அறமனை காமின் அல்லவை கடிமின்*
*கள்ளும் களவும் காமமும் பொய்யும்*
*வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்*
*இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா*
*உளநாள் வரையா தொல்லுவ தொழியாது*
*செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்*
*மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்'*[20]

மனிதவாழ்க்கைச் சிறப்புற அமைய வேண்டுமெனில் பிறருக்குத் தீங்கு ஏற்படாதவாறு இருத்தல் வேண்டும். தெய்வம் உண்டென்பதனை மெய்யறிவால் உணர வேண்டும். ஈண்டு தெய்வம் எனக்

குறிப்பிடப்பட்டுள்ளது அருகக்கடவுளையாகும். அவ்வருக தேவனைப் பற்றி அறிந்தோரது அறிவுரைப்படி நடத்தல் நலமாகும். பொய்யுரையும், புறங்கூறுதலையும் விட்டொழித்தல் வேண்டும். கொலையைத் தவிர்த்து ஊனுணவை அறவே ஒழித்தல் வேண்டும். தானம் செய்வதும், தவமியற்றுதலும் சிறந்த செயல்களாகும். பிறர் செய்த உதவியினை மறத்தலும் தீயோர்களுடன் நட்பு கொள்ளுதலும் தீயவையாகும். பொய்யானவற்றைக் கூறி வாழ்தல் கேடாகும். அறவோர் கூடியிருக்கும் அவையினை விட்டகலாமல் அவர்களுடன் ஒத்து வாழ்தல் சிறப்பு தருவதாகும். பிறர்மனையாளின் மீது காமுறுதல் மிகப் பெரிய தவறாகும். அறத்தால் மணம்புரிந்த துணைவியைக் கைவிடாது காத்தல் வேண்டும். வரைவின் மகளிரைச் சேருதல், கள்ளுண்ணுதல், களவுசெய்தல் ஆகிய தீய காரியங்கள் அனைத்தும் அறவே ஒழிக்க வேண்டும். இவ்வுலக வாழ்வில் பெற்ற யாக்கையும், இளமையும் செல்வமும் நிலையற்றவையாதலால் வாழ்நாட்களை வீணாக்காமல் தம்மாலியன்ற நல்லறங்களைச் செய்து வந்தால் இறந்தபின்னர் நற்கதிஅடைவது திண்ணம். இங்குக் கூறப்பட்டுள்ள அனைத்தும் சமண சமயக் கோட்பாடுகளாகும். காவியப் புலவன் இதனைத் தன் கருத்தினில் கொண்டு மக்கள் நல்வாழ்வுபெற இவற்றைப் பின்பற்ற வேண்டுமென விண்ணப்பம் செய்கிறார்.

## அடிக்குறிப்புகள்

1. சிலம்பு, பதிகம் 1–2.
2. M.G.S. Narayanan- 'New light on Kunavayirkottam and the date of Silappadikaram' - Journal of Indian History XLVIII, 1970-pp.691ff.
3. R.Champakalakshimi - Jain Art and Architecture, Vol.I-p.95.
4. சிலம்பு, 3 : 179–180.
5. சிலம்பு, 9 : 13.
6. சிலம்பு, 10 : 15–25.
7. சிலம்பு, சைவசித்தாந்தக் கழக வெளியீடு – பக்.357.
8. சிலம்பு, 11 : 1–5.
9. சிலம்பு, 14 : 7–11.

10. சிலம்பு, 10 : 55–59.
11. சிலம்பு, 15 : 115–118.
12. சிலம்பு, 10 : 15–25.
13. சிலம்பு, 10 : 146–175.
14. சிலம்பு, 10 : 192–208.
15. சிலம்பு, 10 : 219–245.
16. சிலம்பு, 14 : 25–60.
17. சிலம்பு, 15 : 149–190.
18. சிலம்பு, 10 : 176–191.
19. சிலம்பு, 28 : 149–158.
20. சிலம்பு, 30 : 185–202.

# 15. மெக்கன்சி தொகுப்பில் சமணம்

ஆங்கிலேயர்கள் நம் நாட்டை ஆட்சிபுரிந்தபோது நில அளவைத்துறை தலைமை அதிகாரியாக **கர்ணல் மெக்கன்சி** என்பவர் பணியாற்றி வந்தார். இந்திய வரலாற்றிலும், கலைச் செல்வங்களிலும், பிற பண்டைய பொருட்களிலும் ஆர்வமிக்க இவர் ஏராளமான சுவடிகள் முதலிய பொருட்களைச் சேகரிக்கலானார். இவ்வாறு 1810லிருந்து 1815வரை இவரால் சேகரிக்கப்பட்ட செய்திகள் **மெக்கன்சி தொகுப்பு** என அழைக்கப்பெறும், அண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினர் அவற்றைச் சுருக்கமாக ஆங்கிலத்தில் இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளனர். இத்தொகுப்புகளில் வரலாறு, சமயம், கர்ணபரம்பரைச் செய்திகள் முதலியன இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பல குறிப்புகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக இல்லாமல், பொது மக்களிடமிருந்து கேட்டறிந்தவையாகும். அவ்வாறிருப்பிவம் சில பகுதிகளில் வரலாற்றுண்மை புதைந்து கிடப்பதைக் காணலாம். சமண சமயம் பற்றிய பல சுவடிகள், அக்காலத்தில் சிறப்புற்றிருந்த சமண தலங்கள், சமண ஆசிரியர்கள், நூற்கள் முதலியன பற்றிய செய்திகளைக் கொண்டுள்ளன. இங்குச் சமண சமயம் பற்றிக் கூறப்பட்டுள்ள தொகுப்புகளில் காணப்படும் சில செய்திகள் மட்டும் இடம் பெறுகின்றன.

## தொகுப்பு எண் : 6 - பிரிவு : 2

இத்தொகுப்பு கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருப்பாலைவனம் ஆகிய ஊர்களைப் பற்றிய செய்திகளைக் கொண்டதாகும். இதில் பொன்னேரியிலிருந்து மூன்று நாழிகை நேரம் மேற்காக நடந்து சென்றால் சமண சமயக் கோயில் ஒன்று தென்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிட்டுள்ள சமணக் கோயில் சரவணன் பேட்டிலுள்ள பார்சுவநாதர் கோயிலாக இருக்க வேண்டும். இக்கோயில்

பொன்னேரியிலிருந்து மேற்கில் ஏறத்தாழ நான்கு கல்தொலைவிலுள்ளது. இதனையடுத்துள்ள பிற பகுதிகளில் வேறு சமண சமயக் கோயில்கள் இல்லையாதலின், மெக்கன்சி தொகுப்பில் கூறப்பட்டுள்ள கோயில் சரவணன் பேட்டிலுள்ள பார்சுவநாதர் கோயில் என்பது புலனாகும். தற்போது இக்கோயில் மிகவும் பழுதடைந்த நிலையில், கருவறையில் பார்சுவநாதர் சிற்பம் ஒன்றை உடையதாகக் காணப்படுகிறது.

## தொகுப்பு எண் : 10 - பிரிவு : 3

தென்னார்க்காடு மாவட்டத்தில் சதுரங்கப்பட்டினத்திற்கு அண்மையிலுள்ள புதுப்பட்டினத்தைப் பற்றிய குறிப்பினைக் கொண்டது இப்பிரிவாகும். இதில் சமணசமயத்தவர் புதுப்பட்டினம் என்னும் ஊரினை உருவாக்கினர் என்றும், பின்னர் மண்மாரி பொழிந்ததாலும், கடல் கொண்டதாலும் இவ்வூர் அழிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.

இங்குக் கூறப்பட்டுள்ள செய்தி எந்த அளவிற்கு உண்மை என்று கூறுவதற்கில்லை. மேலும் தற்போது இவ்வூரில் சமண சமயக் கோயிலோ அல்லது பிற சின்னங்களோ எவையும் இல்லை. முன்பு சமணர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதற்கும் போதிய பிற சான்றுகள் இல்லை.

## தொகுப்பு எண் : 10 - பிரிவு : 7

வடஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த படவூரைப் பற்றிய செய்திகள் இப்பிரிவிலுள்ளது. முன்பொருகால் படவூர் முதலிய இடங்களில் கொண்டைகட்டி குறும்பர்களும், சமணர்களும் வாழ்ந்து வந்தனர். அப்போது அரசாட்சி செய்த பாண்டிதேவன் என்னும் சமண அரசன் சமணக் கோயில் ஒன்றைக் கட்டினான். மேலும் இங்குச் சமணத்திருவுருவம் ஒன்று இருந்ததெனவும், படவூர் கோயிலுக்குத் தானம் வழங்கிய செய்தியினைக் கொண்ட கல்வெட்டொன்றிருந்த தென்றும் இக்குறிப்பு கூறுகிறது. சோழ அரசன் ஒருவன் இப்பகுதியினைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த பின்னர், சமணர்களை அழித்தான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

படவூரில் முன்பிருந்த சமணக் கோயிலைப் பற்றியோ அல்லது அங்கிருந்த திருவுருவம், கல்வெட்டு ஆகியவை பற்றியோ தற்காலத்தில் அறிவதற்கில்லை.

## தொகுப்பு எண் : 10 - பிரிவு : 8

குறும்பர் என்னும் இனத்தவர் காஞ்சிபுரத்திலும், அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் சமண சமயத்தவர்களாதலின், சைவ சமயத்தைச் சார்ந்த மன்னன் ஒருவனால் பல இன்னல்களுக்கு ஆளாயினர். இக்குறும்பர்கள் மாமல்லபுரம் முதலிய பல இடங்களில் சமணக் கோயில்களைக் கட்டினர். இக்கோயில் சிலவற்றிலுள்ள சமண சிற்பங்களைப் பிராமணர்கள் அழித்தனர். துன்புறுத்தப்பட்ட சில சமணர்கள் வைணவ சமயத்தைத் தழுவினரென்றும், வெள்ளாளர், முதலியார் ஆகியோரின் மீது இவர்கள் வெறுப்பு கொண்டிருந்தனராதலின் வீழ்ச்சியுற்றனரென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறும்பர்கள் மாமல்லபுரத்தில் சமணக் கோயில் கட்டினரா என்பது வினாவிற்குரிய ஒன்றாகும். ஏனெனில் மகாபலிபுரத்தில் சமண சமயக் தனிக் கோயில்கள் எவையும் இருந்ததற்குச் சான்றுகள் இல்லை.

## தொகுப்பு எண் : 11 - பிரிவு எண் : 1-4

இத்தொகுப்பின் பெரும்பகுதி சமணர்களையும், சமண சமயத்தையும் பற்றியதாகும். இதன் முதற்பிரிவில் பூவுலகில் ஏற்பட்ட பிரளயம் பற்றிய செய்தி காணப்படுகிறது.

இரண்டாவது பிரிவு அரசன் ஒருவன் சமணர்களுக்கு இழைத்த கொடுமைகளைப் பற்றியதாகும். அதாவது சகஆண்டு 1400-ல் செஞ்சியை ஆட்சிபுரிந்த கவரை வெங்கடபதிநாயகர், அந்தணர்களிடம் தனக்குப் பெண் கொடுக்குமாறு வேண்ட, அவ்வந்தணர்கள் சமணசமயத்தவர் தங்கள் சமுதாயத்தினின்றும் அரசிக்கு ஒரு பெண் கொடுக்க முன்வருவார்களாயின், தாங்களும் ஒரு அந்தணப் பெண்ணை அரசனுக்கு மணம் முடித்துத் தருவதாகக் கூறினர். இதனைக் கேட்ட மன்னன் சமணர்களிடம் கூறவும், அவர்களும்

திண்டிவனத்திலிருந்த சமணத் தலைவரும் தங்கள் சம்மதத்தினைத் தெரிவித்தனர். ஆனால் அரசன் சமணப் பெண்மணியைத் திருமணம் புரிய வேண்டிப் பெண்வீட்டிற்குச் சென்றபோது அங்குள்ள சமணர்கள் திருமணப்பந்தலில் ஒரு பெண் நாயினைக் கட்டிவைத்துவிட்டு அவ்வூரை விட்டகன்றனர். இதனால் அவமானமுற்ற நாயக்க மன்னன் சமணர்கள் அனைவரையும் கொன்றுவிடுமாறு ஆணை பிறப்பித்தான். இதற்கு அஞ்சிய சிலர் சைவராக மாறினர்; சிலர் வேறு நாட்டிற்குச் சென்றனர். இன்னும் சிலர் ரகசியமாகவே சமண சமயத்தவராக வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு நான்கு ஆண்டுகள் கழிந்தன. மன்னனது கொடுமைக்கு அஞ்சி சரவணபெல்கோலாவிற்குச் சென்ற உப்புவேலூரைச் சார்ந்த ஒருவர் அங்குச் சாத்திரங்கள் பல கற்று **வீரசேனாச்சாரியார்** என்னும் பெயர் பெற்றுத் துறவற நோன்பினை மேற்கொண்டார். சில காலத்திற்குப் பின்னர் வீரசேனாச்சாரியார் சமண சமயத்தைப் பரப்புவதற்காகத் தெற்கு நோக்கி வந்தார். ஒரு சமயம் இவர் காஞ்சிபுரத்திலிருந்து தாதாசாரியார் என்பவரைச் சமய வாதில் வென்றார். இவரைப் போன்று தாயனூரைச் சார்ந்த **காங்கய உடையார்** என்னும் சமணர் உடையார்பாளையத்திற்குச் சென்று அங்கு வாழலானார். பின்னர் ஒரு சமயம் அவர் முகமதியமன்னனையும், பாளையக்காரர் தலைவனையும் ஆர்க்காட்டில் சந்தித்தபோது, மன்னன் அவரைச் சிறப்பு செய்து சில நிலங்களை அவருக்குத் தானமாக வழங்கினான்.

இத்தொகுப்பின் மூன்றாவது பிரிவில் ரிஷபநாதர் காலத்தில் பரத அரசனின் மைந்தனாகிய மரீசிகுமாரர் சமணத்துறவியான செய்தியும், பார்சுவநாதர் காலத்தில் வாழ்ந்த புத்திகீர்த்தி என்னும் முனிவர் புத்திமடம் என்னும் மடத்தினை ஆரம்பித்தமையும் கூறப்பட்டுள்ளன. மேலும் இதில் சாங்கியம், சௌகதம், யோகம், மீமாம்சம் ஆகியவை பற்றி குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

நான்காமது பிரிவில் சமண சமய முனிவர்களது நற்குணங்கள், சமண சமூகத்திலுள்ள உட்பிரிவுகள், பூர்வகர்மம், அபவர்ககர்மம் எனப்படும் இறந்தவர்களுக்குச் செய்யப்படும் சடங்குகள் முதலியன

பற்றிக் கூறப்பட்டுள்ளன. இவை பற்றிய செய்திகளை **சினசேனாச்சாரியார்** என்பவர் ஆயிரத்திற்கு மேற்பட்ட சுலோகங்களாக எழுதினார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொகுப்பு எண் : 11 - பிரிவு : 5

இப்பிரிவு சித்தாமூர் மடத்திற்குச் சரிவர மானியங்கள் வழக்கப்படாமலிருந்ததை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக எழுதிக் கொடுத்த விண்ணப்பமாகும்.

சேத்துப்பட்டு பகுதியில் நெடுங்காலமாக சமண சமயம் சிறப்புற்றிருந்ததால் கோயில்களும், மடங்களும், சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டன. பின்னர் சைவ சமயத்தவர்களும், வைணவர்களும் அப்போது ஆட்சிபுரிந்த மன்னர்களைத் தங்கள் சமயங்களைத் தழுவும்படிச் செய்தனர். இவ்வாறு அரசர்களின் உதவியினால் இந்து சமயத்தவர் சமணர்களுக்கு இடையூறுகள் விளைவித்ததோடு மட்டுமின்றி, அவர்களது கோயில்களையும், மடங்களையும் அழித்தனர். ஆனால் சில அரசர்கள் சமணத்தின் தொன்மையினையும், சமணர்களது சகிப்புத் தன்மையினையும் அறிந்திருந்ததால் அவர்களைப் பாதுகாத்து வந்தனர். இந்நிகழ்ச்சிகளுக்கு 1100–ஆண்டுகளுக்குப் பின்னர் இமசீதளன் என்னும் மன்னன் ஏராளமான சமணர்களுடன் தென்னாடு வந்தடைந்தார். இவர் நாட்டின் ஒரு பகுதியிலுள்ள காடுகளை அழித்து, அதற்குத் தொண்டை மண்டலம் எனப் பெயரிட்டு, அங்குச் சமணர்களைக் குடியேறச் செய்தார். இதற்குச் சற்று பிற்பட்ட காலத்தில் குலோத்துங்க சோழனும், அவனது வழிவந்த ஆதொண்டை மன்னனும் சமணர்களைத் துன்புறுத்தி அவர்களது கோயில்களையும் அவற்றிலுள்ள திருவுருவங்களையும் அழித்து, அவற்றிற்குப் பதிலாக புதிய சைவசமய சிற்பங்களை நிறுவினர்.

இத்தகைய கொடுமைகளுக்கு இலக்காகாமல் சித்தாமூர், திருநறுங்கொண்டை, திருமலை, திருப்பருத்திக்குன்று, கரந்தை ஆகிய இடங் களிலுள்ள கோயில்களும், மடங்களும் நன்னிலையிலிருந்தன. இவற்றிற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து ஆண்டுதோறும் 4000 வராகன் வருமானம் கிடைத்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த விக்கிரமசோழன் சித்தாமூர் மடத்திற்கு 2500 வராகன் மதிப்புள்ள

நிலங்களையும், விஷ்ணுதேவராயர் 2400 வராகன் பெறுமான நிலங்களையும், ஸ்ரீரங்கராயர் 1400 வராகன் விலை மதிப்புள் நிலங்களையும், வெங்கடபதிராயர் 100 வராகன் மதிப்புள்ள நிலங்களையும் வழங்கியிருந்தனர்.

இவர்களுக்குப் பின்னர் சேத்துப்பட்டு பகுதி முகமதியராட்சிக்குட்பட்டது. அப்போது அவர்களுக்கு உதவியாக இருந்த பிராமணர்கள் சைன மடத்திற்குக் கொடுத்துவந்த மானியங்களை அரசனுக்குத் தெரியாமலே 100 வராகன் அளவிற்குக் குறைந்தனர். நவாப் காலத்தில் மேலும் இது 40 வராகனாகக் குறைக்கப்பட்டதால் நவாப்பிடம் சமணர் முறையிடவே, சமணர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாயினர். ஆங்கிலக் கம்பெனி ஆட்சியில் சமணர்களுக்குத் தொல்லைகள் அதிகம் இல்லை எனினும், சைவ, வைணவ இயக்கங்களே அதிக நன்மையடைந்தன. ஆங்கில ஆட்சியில் தொன்மைவாய்ந்த சித்தாமூர் கோயில் 60 வராகன் மட்டுமே பெற்றுவந்தது. இவ்வாறு பழமையான சித்தாமூர் கோயிலுக்கு அரசு தகுந்த நிதி உதவி செய்து மேம்படச் செய்ய வேண்டும என விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பத்திலிருந்து சித்தாமூர் தொன்மைவாய்ந்த தலம் என்பதையும், பலமன்னர்கள் அதற்குத் தானங்கள் புரிந்தமையும் அரிய வருகிறோம். மேலும் சமணர்களைக் குலோத்துங்கன், ஆதொண்டை மன்னர் இந்து சமயத்தவர்கள் துன்புறுத்தியதாகவும் கூறப்பட்டுள்ளது. சமண சமயத்தவர்கள் துன்பமுற்றது நாடறிந்த ஒன்றாகும். ஆனால் இங்குக் கூறப்பட்டுள்ள குலோத்துங்கன் சமண சமயத்தவர்களையும், அவர்களது கோயில்களையும் அழித்தான் என்ற செய்தியினை வரலாற்றுண்மையாக எடுத்துக் கொள்வதற்குப் போதிய சான்றுகளில்லை. ஆதொண்டை மன்னனைப் பற்றிய கர்ணபரம்பரைச் செய்திகளும், தலப்புராணச் செய்திகளும் உள்ளனவேயன்றி, பிற தகுந்த ஆதாரங்கள் எவையும் இல்லை.

## தொகுப்பு எண் : 11 - பிரிவு : 9

இப்பிரிவு ஆரணிக்கு அருகிலுள்ள பூண்டியைப் பற்றியசைன தலபுராணமாகும். இரும்பன், பாண்டன் என்னும் இருவேடர்கள்

வள்ளிக்கிழங்கினைப் பூமியிலிருந்து அகழ்ந்து எடுக்கும்போது அருகிலிருந்த எறும்புப்புற்றினை அழித்தனர். இவர்கள் அழித்த புற்றினுள் முனிவர் ஒருவர் தவம்புரிந்து கொண்டிருப்பதைக் கண்ட இரு வேடர்களும் ஆச்சரியமுற்று, தேன் பழம் முதலியனவற்றை அவருக்குப் படைத்துவழிபட்டனர். சில காலத்திற்குப் பின்னர் சமய நாதர் என்னும் மற்றொரு முனிவர் அங்கு வரவே, வேடர்கள் இருவரும் அவரை எறும்புப் புற்றினில் தவம் செய்து கொண்டிருந்த முனிவரிடம அழைத்துச் சென்றனர். சமய நாதர் தவம் செய்யும் முனிவரைக் கண்டவுடன் அருக தேவன் தான் முனிவர் வடிவில் தவம் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதனை உணர்ந்து, அவரை வழிபட்டு அப்பகுதியில் கோயில் ஒன்றைக் கட்ட வேண்டுமென விரும்பினார். இதனை அறிந்த வேடர்கள் அரசனிடம் (ராயரிடம்) சென்று முறையிடவே, மன்னனும் இங்குச் சமணக் கோயில் ஒன்றினைக் கட்டினான். முனிவரது விருப்பம் நிறைவேறியதால் அவர் வேடர்களிருவருக்கும் நல்லாசி கூறி, அவர்களது பெயர்களால் இரு ஊர்களும் (இரும்பேடு, பூண்டி) அழைக்கப்படுமாறு செய்தார்.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள கோயில் மிக்கவாறும் பூண்டியிலுள்ள பொன்னிவனநாதர் கோயிலாக இருக்க வேண்டும. ஆனால் இக்கோயிலிலுள்ள கல்வெட்டில் வீரவீரன் என்னும் மன்னன் காலத்தில் சமண முனிவர் ஒருவரது விருப்பத்திற்கிணங்க கட்டப்பட்டது என்று கூறப்பட்டுள்ளதேயன்றி, மெக்கன்சி தொகுப்பில் குறிப்பிட்டிருப்பது போன்ற செய்தி இடம்பெறவில்லை. எனவே பூண்டியிலுள்ள பொன்னிவனநாதர் கோயிலின் தோற்றம் பற்றிய பிற்கால மரபுவழிச் செய்தியே மேற்கூறப்பட்டது எனலாம்.

## தொகுப்பு எண் : 11 - பிரிவு : 12

வந்தவாசி பகுதியினைச் சார்ந்த திறக்கோல் என்னுமிடத்திலுள்ள சமணதலத்தைப் பற்றியதாகும். முதலாவதாக இங்குள்ள கல்வெட்டு பற்றிய குறிப்பு உள்ளது. ஆனால் இது பற்றிய பிற விபரங்களை அறிவதற்கியலவில்லை. அடுத்துமெக்கன்சி அவர்களின் உதவியாளராகப் பணிபுரிந்த அப்பாவு என்பவர் எழுதிய குறிப்பாகும். அது பின்வமாறு:–

‘திறக்கோல் மலையின் மேல் அழகிய சமணக் கோயில் ஒன்றிருக்கிறது. இம்மலையின் கீழ்ப்பகுதியிலும் மூலத்தானத்தில் நேர்த்தியான சிற்பங்களைக் கொண்ட மற்றொரு கோயிலும் உண்டு. இதற்கு அடுத்துள்ள குன்றில் கன்னடம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மலையின்மேல் நான்கு தூண்களைக் கொண்ட மண்டபம் ஒன்றுள்ளது. இது மகாபலிபுரத்திலுள்ள மண்டபத்தை ஒத்தாகும். மேலும் இம்மலையில் மூன்று குகைகளும், அவற்றில் சிற்பங்களும் காணப்படுகின்றன. பண்டையக் காலத்தில் இங்குச் சமண சங்கம் இருந்ததாகக் கூறுவர்.’

வந்தவாசிக்குத் தென்மேற்கில் எட்டரைகல் தொலைவிலுள்ள திறக்கோல் என்னும் ஊர் பண்டைக் காலத்திலிருந்தே சமண சமயத் தலமாகத் திகழ்ந்தமை யாவரும் அறிந்த செய்தியாகும்.

## தொகுப்பு எண் : 12 - பிரிவு : 2

கடற்கரை ஓரத்தில் அமைந்த பத்மநாதபுரம் என அழைக்கப்பெற்ற வாமநாதபுரத்தில நேமிநாத தீர்த்தங்கரரது கோயில் ஒன்றிருந்தது. மயிலமான் என்னும் சமண அரசனிடம், முனிவர் ஒருவர் மூன்று நாட்களுக்குள் அவ்வூர் கடலால் அழிக்கப்பட விருப்பத்தைத் தாம் கனவு கண்டதாகக் கூறினார். எனவே அரசனும் மக்களும் கோயிலிருந்த நேமிநாதர் திருவுருவத்தினை எடுத்துக் கொண்டு அவ்வூரை விட்டகன்றனர். முனிவர் கூறியபடியே அவ்வூரும் கடலால் அழிக்கப்பட்டது. சிலகாலத்திற்குப் பின்னர் அரசன் மயிலைமாநகரம் என்னும் நகரத்தைத் தோற்றுவித்து, அங்கு ஐந்து சமணக் கோயில்களைக் கட்டினான். முன்பு போலவே முனிவர் கனவு கண்டு இந்நகரமும் கடலால் அழிக்கப்படும் என்று கூறவே, மக்கள் நேமிநாதர் திருவுருவத்துடன் வேறொருபகுதிக்குச் சென்றனர். இப்போதுள்ள மயிலாப்பூர் முன்பு கடலால் அழிக்கப்பட்ட நகரின் ஒரு பகுதியாகும். பிற்காலத்தில் சோழ நாட்டிலிருந்து பிராமணர்கள் இங்கு வந்து குறியேறி சமணர்களை இந்துக்களாக மாற்றியும், சமணக் கோயில்களில் இந்து சமயசிற்பங்களை நிறுவியும் உள்ளனர். அப்போது ஆண்ட அரசனும், அவனது மைந்தனாகிய கந்தப்பராயனும் சைவர்களாக மாறினர். ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நேமிநாதரது சிற்பம்

சித்தாமூருக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு நிறுவப்பட்டது. கோயிலின் பழுதுபார்க்கும் வேலைகளை மயிலாப்பூரைச் சார்ந்த வணிகர் ஒருவர் கவனித்துவந்தார் எனவும் இத்தொகுப்பினில் கூறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள மயிலாப்பூர் சென்னையின் ஒரு பகுதியாகிய மயிலாப்பூராகும். இங்குச் சமணக் கோயில்கள் முன்பு இருந்ததென்பதும், இங்கிருந்த நேமிநாதரது திருவுருவம் சித்தாமூருக்குக் கொண்டு செல்லப்பட்டதும் வரலாற்றாசிரியர்கள் ஏற்றுக் கொண்ட கருத்தாகும். மேலும் **நேமிநாதம்** என்னும் நூல் மயிலாப்பூரில் வழிபட்டுவந்த நேமிநாத தீர்த்தங்கரர் பெயரால் பாடப்பட்ட நூல் என்றும் கூறப்படுகிறது.

## தொகுப்பு எண் : 12 - பிரிவு : 5

திராவிடதேசத்தில் சிறப்புடன் வாழ்ந்த சில சமணசமய முனிவர்களையும், புலவர்களையும் பற்றிய செய்தியினைக் கொண்டது இப்பகுதியாகும்.

வர்த்தமான மகாவீரர் முக்தியடைந்த பின்னர் கலியுகம் தொடங்கியது. மகாவீரருக்குப் பின் வழிவழியாக வந்த முனிவர்களுள் கவுதமர் முதலானோர் 683 ஆண்டுகள் சமண சமய தர்மத்தினைப் போதித்து வந்தனர். இம்முனிவர்களுள் நான்கு பேரைக் கொண்ட நான்கு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. சம 820 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நாட்டில் குழப்பங்கள் நிறைந்ததால் சமண முனிவர்கள் பலர் நாட்டின் மேற்குப் பகுதிக்குச் சென்றனர். பின்னர் அமைதியான சூழ்நிலை நாட்டில் ஏற்பட்ட போது வீரசேனாச்சாரியார் முதலியோர் திரும்பி வந்து சித்தாமூரில் தங்கியிருந்து சமண சீடர்களுக்கு அறவுரை போதித்து வந்தனர்.

## தொகுப்பு எண் : 12 - பிரிவு : 7

இது கர்ணல் மெக்கன்சியிடம் சித்தாமூர் முதலிய இடங்களிலுள்ள கோயில்கள் பழுதடைந்த நிலையிலிலிருந்ததால் அவற்றைச் சீர் செய்ய வேண்டுமெனக்கோரி எழுதிக் கொடுத்த விண்ணப்பத்தின் விரிவுரையாகும்.

சித்தாமூர் முதலிய ஊர்களிலுள்ள சமணக் கோயில்கள் சரிவர கண்காணிக்கப்படாமையால் மிகவும் சிதைந்த நிலையிலிருந்தன. செஞ்சியை ஆண்டுவந்த மாதங்கா என்பவன் கொலியனூர் முதலிய இடங்களிலுள்ள சமணக் கோயில்களை அழித்தும், சமணர்களைக் கொன்றும் இன்னல்கள் பல விளைவித்தான். அச்சமயத்தில் சித்தாமூர், கொலியனூர் ஆகிய இடங்களை விட்டு சமணர்கள் வேறுபகுதிக்குச் சென்றனர். இத்தகைய நிலை ஏற்பட்டதால் இக்கோயில்கள் சரிவர கண்காணிக்கப்படாமல் போயின என்றும், இவற்றைச் சரிசெய்து நன்னிலைக்குக் கொண்டு வரவேண்டுமெனவும் விண்ணப்பம் எழுதப்பட்டுள்ளது.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சித்தாமூர் கோயில் திண்டிவனம் தாலுக்காவையும், கொலியனூர் கோயில் விழுப்புரம் தாலுக்காவையும் சார்ந்தவையாகும். சித்தாமூர் கோயில் சரிபார்க்கப்பட்டு இன்றளவும் நன்னிலையில் வழிபாட்டிற்குரியதாகத் திகழ்ந்து வருகிறது. கொலியனூர் கோயில் பழுதடைந்த நிலையிலே பல ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் இருந்தது எனக் கூறப்படுகிறது. அண்மை காலத்தில் அதே இடத்தில் புதியதாக ஆலயம் அமைக்கப்படுகிறது.

## தொகுப்பு எண் : 13 - பிரிவு : 7

தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த குறும்பர்கள் தாங்கள் ஆண்டுவந்த பகுதியினை இருபத்துநான்கு பிரிவுகளாகப் பிரித்து அவற்றில் கோட்டைகள் கட்டி அரசுபுரிந்து வந்தனர். இவர்கள் சமண முனிவர் ஒருவரால் சைன சமயத்திற்கு மாற்றப்பட்டதால், பல சமணக் கோயில்களைக் கட்டினர். இவர்கள் கட்டிய கோயில்களுள் ஒன்று புழலில் இருந்தது. இவர்கள் மக்களைச் சமண சமயத்தைத் தழுவச் செய்ததாலும், பாண்டிய, சோழ அரசர்கள் அடிக்கடி இவர்களுடன் போர் செய்ததாலும் வீழ்ச்சியடைந்தனர்.

இங்குக் குறிப்பிட்டுள்ளபடி சென்னைக்கு ஒன்பது கல்தொலைவிலுள்ள புழல் என்னும் ஊரில் சமணர் கோயில் ஒன்றுள்ளது. இக்கோயில் தற்போது முற்றிலும் புதுப்பிக்கப்பட்டுள்ளதால், அதன் காலத்தினை வரையறுக்க இயலவில்லை. ஆனால் இங்குக் காணப்படும் தீர்த்தங்கரரது சிற்பத்தின் கலைப்பாணியை

அடிப்படையாகக் கொண்டு, புழலில் சோழர் காலத்திலிருந்தே கோயில் இருந்திருக்க வேண்டும் என்று கூறலாம். குறும்பர்கள் முன்பு இக்கோயிலைக் கட்டினர் என்று கூறுவதற்குப் போதிய பிற சான்றுகள் எவையும் கிடைக்கவில்லை.

## தொகுப்பு எண் : 14 - பிரிவு : 3

இச்சுவடி **அகளங்கர், நிஷ்களங்கர்** ஆகிய சமண முனிவர்களைப் பற்றிய செய்தியினைக் கொண்டதாகும். அழிப்படைதாங்கி என்னும் புத்த சமயதலம் சினகாஞ்சிக்கும், ஆர்க்காட்டிற்கும் இடைப்பட்ட பகுதியிலிருந்தது. இங்குள்ள மடத்தில் அறிவாற்றல் மிக்க புத்த முனிவர்கள் வாழ்ந்து வந்தனர். இம்மடத்திற்கு வடநாட்டிலிருந்தும் மாணவர்கள் புத்த சமய அறத்தினைக் கற்பதற்கென வந்தனர். இவர்களுடன் அகளங்கர், **நிஷ்களங்கர்** என்னும் இரு சமண முனிவர்கள் சமயவாதம் செய்தனர். பின்னர் அகளங்கர் சரவணபெல்கோலவிற்குச் சமணசமய தத்துவங்களைக் கற்பதற்காகச் சென்றார். அங்குக் கற்ற பின்னர் மறுபடியும் திரும்பிவந்து புத்தர்களுடன் அரச அவையில் சமயவாதம் புரிந்து வெற்றி பெற்றார் எனக் கூறப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிடப்பட்ட அகளங்கர் காஞ்சிபுரத்தினை ஆண்ட இமசீதளமகாராசன் அவையில் புத்தர்களைச் சமயவாதத்தில் வென்றதாக அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் வரலாற்றில் இமசீதள மன்னனைப் பற்றியும், அவனது காலத்தினைப் பற்றிய செய்திகளும் இடம்பெறவில்லை.

## தொகுப்பு எண் : 18 - பிரிவு : 15

தாராபுரத்திற்கு அண்மையிலுள்ள வெஞ்சமாக்கூடலிலுள்ள கோயிலைப் பற்றிய செய்தியினைக் கொண்டது இப்பிரிவாகும். இங்குள்ள சிவன் கோயில் சுந்தரமூர்த்தியால் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். முன்பொருகாலத்தில் வெஞ்சமான் என்னும் சமண அரசன் இங்குள்ள சிவன் கோயிலைச் சமணக் கோயிலாக மாற்றியமைத்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையறிந்த சோழ மன்னன் வெஞ்சமானுடன் போர் செய்து அவனைக் கொன்றதோடு மட்டுமின்றி,

அக்கோயிலை மறுபடியும் இந்துக் கோயிலாக ஆக்கினான். இவ்வூர் வெஞ்சமான் மன்னனது நினைவாக வெஞ்சமான்கூடல் என அழைக்கப்பெறலாயிற்று.

வெஞ்சமான் கூடலிலுள்ள கோயில் முன்பு சமணக் கோயிலாக இருந்தமைக்கு தற்போது எந்தச் சான்றுகளும் இல்லை. எனவே இக்குறிப்பு செவிவழிச் செய்தியாக இருக்க வேண்டும்.

## தொகுப்பு எண் : 19 - பிரிவு : 7

இச்சுவடிகள் திருநறுங்கொண்டைதலத்திலுள்ள பார்சுவநாதர் கோயிலைப்பற்றியதாகும். பண்டைக் காலத்திலிருந்தே திருநறுங்கொண்டை மலையிலிருந்த பார்சுவநாதரை மக்கள் சிறப்புற வழிபட்டு வந்தனர். இங்கு வாழ்ந்த மக்கள் மேலைப்பள்ளியும், கீழைப்பள்ளியும் சமணமுனிவர்கள் வாழ்ந்த இடங்கள் என்பதனையும் அறியவந்தனர்.

8000 சமண முனிவர்களைக் கொண்ட சமணசங்கத்தில் ஒருவராகிய அப்பர் சமணத்திலிருந்து விலகி சைவவமயத்தைத் தழுவினார். பின்னர் அவர் சமணர்களுக்கு எதிரியாகத் திகழ்ந்து சமண சமயத்தை அழிப்பதில் ஈடுபடலானார். அக்காலத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் பஞ்சம் ஏற்பட்டதால் சமணர்கள் சோழநாட்டிற்குச் சென்றனர். அப்பர் சோழமன்னன் ஒருவனுக்கு ஏற்பட்ட தீராத தலைவலியினைக் குணப்படுத்தி, அவனைச் சைவ சமயத்தினனாக்கினார். மேலும் அவ்வரசனது உதவியினால் பல சமண சமயக் கோயில்களைச் சைவ கோயில்களாக மாற்றியமைத்தார். ஒரு சமயம் அப்பர் திருநறுங்கொண்டைக்கு வந்திருந்த போது கண்பார்வையினை இழந்தார். கண்பார்வை இழந்த அவர் அருகக்கடவுளை வாழ்த்தி வணங்கவும், அப்பாண்டைநாதர் இந்து சமயக் கோயில்களாக மாற்றப்பட்ட கோயில்களையும் முன்பு போலவே சமணக் கோயில்களாக்கினால் கண்பார்வை பெறும் என்று கூற, அப்பர் அதற்கிசைந்ததால் கண்பார்வையினைப் பெற்றார். ஆனால் சுந்தரமூர்த்தியும், ஞானசம்பந்தரும் அவரைச் சுண்ணாம்புக் காளவாயிலிட்டுக் கொன்றனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளாகிய அப்பர் முன்பு சமணசமயத்திலிருந்தமை, அவருக்கும் திருநறுங்கொண்டைத் தலத்திற்கு மிகுந்த தொடர்பு முதலியவற்றை வரலாற்றாசிரிர்கள் ஏற்றுக் கொண்டவையாகும். ஆனால் அவர் திருநறுங்கொண்டையில் கண்பார்வை இழந்தமைக்கும், சுந்தரர், சம்பந்தரால் கொல்லப்பட்டதற்கும் சான்றுகள் இல்லை. பொதுவாக சமணத்தைச் சார்ந்த பல்லவ அரசன் ஒருவன் அப்பரைச் சுண்ணாம்புக் காளவாயிலிட்டும், கல்லுடன் அவரைச் சேர்த்துக் கட்டி கடலில் மூழ்கடிக்கச் செய்தும், யானையை ஏவிக் கொல்ல முயற்சி செய்தும் வெற்றிபெற முடியவில்லை எனப் பெரிய புராணம் கூறகிறது. மேலும் இங்குக் குறிப்பிட்டுள்ளபடி சோழ அரசனுக்கு தீராத தலைவலி ஏற்பட்டதனை அப்பர் குணப்படுத்தினார் என்பதற்கு வேறு ஆதாரங்கள் இல்லை. அப்பர் மட்டுமின்றி ஞான சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் சமண சமயத்தின் வளர்ச்சியினைத் தடுப்பதற்கெடுத்த முயற்சிகள் அவர்களது தேவாரப் பாடல்களின் வாயிலாக அறிய வருகிறோம்.

## தொகுப்பு எண் : 22 - பிரிவு : 3

இதன் முதற்பகுதியில் காஞ்சி முதலிய இடங்களில் வாழ்ந்த சமணர்கள் நெடுங்காலமாகப் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது எனக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் பாலாற்றிற்கும், வடபெண்ணையாற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் வாழ்ந்த சமண சமயத்தவர் அவ்வின்னல்களை எல்லாம் பொறுமையுடன் ஏற்றுத் தங்கள் சமயத்தில் பற்றுடையவராகவே திகழ்ந்தனர். வீரசேனாச்சாரியார் தென்னகம் திரும்பி வந்து சித்தாமூரிலுள்ள மடத்தினைத் தோற்றுவித்து, சமயம் மாறாமலிருந்த சமணர்களுக்குச் சமய தீட்சை அளித்து வந்தார். இவருக்குப் பின் வந்த சமண குருக்களம் இவ்வாறே செய்து வந்தனர்.

முகமதியர் ஆட்சி புரிந்த காலத்தில் சமணர்கள் நஞ்சை நிலத்தின் மீது வாரம் என்னும் வரியையும், புஞ்சை நிலத்திற்குத் தீர்வையும் செலுத்தி வந்தனர். ஆனால் ஆங்கிலக் கம்பெனி காலத்தில் மொத்தமாக ரொக்கத் தீர்வை செலுத்தப்பட்டது. சித்தாமூரிலுள்ள கோயிலுக்கு 40 காணி நஞ்சையும், புஞ்சையும் இருந்தன. இதன் மூலமாகக் கிடைத்த மானியம் தினமும் அக்கோயிலில் நடைபெற்று வந்த

வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டது. இக்கோயிலில் நடைபெற்ற தேர்த்திருவிழாவிற்கு ஊர் மக்களிடமிருந்து வசூலித்த வரி செலவிடப்பட்டது. திருப்பருத்திக்குன்றத்திலுள்ள கோயிலுக்கு ஆங்கிலக் கம்பெனி ஆட்சி வரையிலும் பல நிலங்களிலிருந்து கிடைத்த வருமானம் செலவிடப்பட்டு வந்தது. அச்சமயத்தில் ஸ்ரீமூலசங்கத்திற்குட்பட்டு 100 சமண ஊர்களும், பல கோயில்களும் இருந்தன.

இச்செய்திகளிலிருந்து சித்தாமூர் மடம் வீரசேனாச்சாரியார் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டதெனவும், சமணர்கள் செலுத்தி வந்த சில வரிகள் முதலியனவும், ஸ்ரீமூலசங்கம் ஒன்றிருந்ததெனவும் அறிய வருகிறோம். சித்தாமூர் கோயிலில் தேர்த்திருவிழா நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இதைத்தவிர பிற எந்தச் சமணக் கோயில்களிலும் தேர்த்திருவிழா நடைபெற்றதாக குறிப்புகளில்லை.

## தொகுப்பு எண் : 67

வர்த்தமான மகாவீரர் முக்தியடைந்த பின்னர் அவரது சீடர்கள் ஏழு பேர் 140 ஆண்டுகளாக சமண தர்மத்தினைப் போதித்து வந்தனர். பாடலிபுத்திரத்தை ஆண்ட சந்திரகுப்த மன்னன் தான் கண்ட கனவில் பலனை பத்ரபாகு முனிவரிடம் கேட்டபோது, அவர் நாட்டில் பன்னிரண்டாண்டு காலம் பஞ்சம் ஏற்பட இருப்பதை முன்னதாகவே அறிவித்தார். இதனால் மனம் நொந்த மன்னன் அரச பதவியினைத் தன் மகனாகிய சிம்மசேனனுக்கு அளித்துவிட்டு துறவறம் பூண்டான். பின்னர் அவன் பத்ரபாகு முனிவருடன் 12000 சமணர்கள் புடைசூழ தெற்கு நோக்கிப் புறப்பட்டான். வழியில் ஒரு குகையில் பத்ரபாகு முனிவர் உயிர் துறந்ததால், சந்திரகுப்தனைத் தவிர பிற சமணர்களனைவரும் சோழ நாடு நோக்கிப் புறப்பட்டனர். விசாகாச்சாரியார் முதலியோர் சோழ நாட்டில் தங்கி சமண சமயத்தைப் பரப்பினர்.

பஞ்சம் தீர்ந்தபின்னர் இவர்கள் வடநாட்டிற்குச் சென்றனர். இங்கு இவர்களுக்குள் வெண்மையான ஆடை அணிவது பற்றிய பிரச்சினை எழவே, சிம்மசேன மன்னன் அதனைத் தீர்த்து வைத்தான்.

சிம்மசேனனுடைய மகளாகிய ஜாஸ்வலதேவி சுவேதம்பர பிரிவைச் சார்ந்தவள். ஆனால் இவளது கணவனாகிய ராஜேந்திரபாலன் சுவேதம்பரர்களை, வெறுப்பவன் அரசி ஜாஸ்வலதேவியின் அறிவுரைப்படி சுவேதம்பரர்கள் ஆடையணிதலைத் துறந்து யாபனீயர் என அழைக்கப்படலாயினர். இன்னும் சிலர் தாங்கள் வைத்திருந்த மயிற்தோகைகளையும் விட்டொழிந்து விட்டு நிசபிஞ்சர் என அழைக்கப்பெறுவாராயினர். மேலும் இச்சுவடியில் திராவிடச்சாரியார் என்பவர் திராவிடப் பிரிவு சமணத்தை ஏற்படுத்தினார் எனவும், இவர் வஜ்ரந்தாச்சாரியாரின் காலத்தவர் எனவும் கூறப்பட்டுள்ளது.

இச் சுவடிகளில் இடம் பெற்றிருக்கும் முக்கியமான செய்தி சமண சமயம் தமிழகத்திற்குப் பரவியமை பற்றியதாகும். கி.மு.4–ம் நூற்றாண்டில் சந்திரகுப்த மன்னன், பத்ரபாகு முனிவருடனும், பிற சமணர்களுடனும் தென்னகம் நோக்கிப் புறப்பட்டு கர்நாடக மாநிலத்திலுள்ள சரவணபெல்கோலாவிற்கு வந்தான் எனவும், பின்னர் சமண முனிவர்கள் கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து சமண சமயத்தைப் பரவச் செய்தனர் என்றும் வரலாற்று நூற்கள் கூறுகின்றன. மேலும் இத்தொகுப்பினில் சுவேதம்பரர்கள், திராவிட சங்கத்தைச் சார்ந்த சமணர் ஆகியோரைப் பற்றிய செய்திகளும் குறிப்பிடத் தக்கவையாகும்.

## தொகுப்பு : 68

அறுபத்தெட்டாவதாகிய இத்தொகுப்பிலுள்ள செய்தி பதினெட்டு ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டதாகும். இது மெக்கன்சியவர்களிடம் **முனிபத்திரதேவ ஆச்சாரிய சுவாமி** என்பவர் கூறியவற்றைக் கொண்டுள்ளது.

வர்த்தமானர் நிர்வாணமடைந்த பின்னர் கலியுகம் தொடங்கியது. கலியுகத்தில் அவரது சீடர்கள் பல ஆண்டுகளாகச் சமண தர்மத்தினைப் போதித்து வந்தனர். பத்ரபாகு முனிவரின் சீடராகிய **அர்கத்பலி** ஆச்சாரியார் **வீரசங்கம், சேனசங்கம், தேவசங்கம், நந்திசங்கம்** முதலிய நான்கு சங்கங்களை ஏற்படுத்தி அவற்றில் நான்கு ஆச்சாரியர்களைத் தலைமைப் பீடத்திலமர்த்தினார். இவ்வாறு வல்லிகிராமத்து பரபரதேவாச்சாரியாரும், சித்ர கூடத்து

வீரசேனாச்சாரியாரும் சினசேனாச்சாரியாரும் சமண அறங்களைப் போதித்து வருங்கால், அமோகவர்ஷனுக்கு அறவுரை பகரும் பொருட்டு சினசேனாச்சாரியார் மகாபுராணத்தை இயற்றினார். சக **1438**–ம் ஆண்டில் குழப்பம் ஏற்பட்டதால் மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். சமண சமய ஆச்சாரியர்களும் பிறபகுதிகளுக்குச் செல்லலாயினர். பின்னர் நாட்டில் அமைதி நிலவிய பிறகு **வீரசேனாச்சாரியார்** என்பவர் சித்தாமூர் மடத்தில் வந்து தங்கி நல்லறங்களைப் போதித்து வந்தார்.

இச்சுவடியின் மற்றொரு பகுதி சமண சமய நூற்களின் பெயர்களைக் கொண்டுள்ளது. இதில் மகாபுராணம் எனப்படும் புராணமும், சத்ரசூடாமணி, முனிஸ்விரதம், நாககுமாரகாவியம், சந்திரபிரபா காவியம், பார்சுவபுயுதம் முதலிய காவியங்களும்; சக்தாயனம், கௌமாரம், அமரம், தனஞ்சயம் ஆகிய வியாக்கரண நூற்களும், அஷ்டசகஸ்ரீ, கமலமார்த்தாண்டா, நியமனிதீபிகை, நியாயகுமுத சந்திரிகா, நியாயமார்த்தாண்டா, தர்க்கபரிபாஷா, லகுவிருத்தி பிரமயரத்னாமாலா எனப்படும் தர்க்க நூற்களும்; யதியாசாரம், ஸ்ராவகாசாரம், சபானசாரம், ஆத்மானுசாசனம் திரைவர்ணிகா, சினசம்கிதா, ஏகசந்தி, ரத்னகிரந்தா முதலிய ஆசாரவிதி நூற்களும்; தர்ம பரிக்ஷா, கௌமுதிகிரந்தா ஆகிய கதைகளும்; ஸ்ரீபுராணம், ஹரிவம்சா, புண்யசா, கௌமுதி முதலிய சரிதைகளும்; **சிந்தாமணி, சூடாமணி, மேருமந்தரம், யசோதரம், குறள், உதயணகுமாரகாவிம், கலிங்கத்துப்பரணி, மண்டபுருஷநிகண்டு, ஜினேந்திர மாலை, நீலகேசி** முதலிய நூற்களும் கூறப்பட்டுள்ளன. இவையன்றி இன்னும் சில பிராகிருத நூற்களின் பெயர்களும், அஸ்டகம் முதலியவற்றின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. சமண சமயத்தவர் தமிழ் மொழிக்கும், வட மொழிக்கும் செய்த தொண்டு மேற்கூறப்பட்ட நூற்களின் வாயிலாகத் தெள்ளிதின் விளங்கும்.

## மெக்கன்சி தொகுப்பிலிருந்து அறியப்பெறுபவை

மெக்கன்சி அவர்கள் தொகுத்துள்ள செய்திகள் பொது மக்களிடமிருந்து பெற்றவையாக இருப்பினும், அவற்றை முற்றிலும் வரலாற்றிற்குப் புறம்பானவை என்று கூறுதல் இயலாது. சமயம் பற்றிய செய்திகள் காலப்போக்கில் மாறுபட்டும், திரிந்தும் காணப்பட்ட போதிலும் அவற்றில் வரலாற்றுண்மைகள் இடம்பெற்றிருத்தலை நன்கு ஆராய்ந்து பார்க்கும் போது காணலாம்.

சமண சமயக் கோயில்கள் பற்றிய செய்திகளில் சில வேறுபாடுகள் காணப்படினும், காஞ்சி, கரந்தை, புழல், சித்தாமூர், கொலியனூர், பூண்டி, திருநறுங்கொண்டை, திறக்கோல் முதலிய இடங்களில் சமணக் கோயில்கள் இருந்தனவென்பதை எவரும் மறுக்க இயலாது. இவ்வூர்களிலுள்ள கோயில்கள் இன்றளவும் நன்னிலையிலும், வழிபாட்டிலும் உள்ளன. சித்தாமூர், திருநறுங்கொண்டை ஆகிய இடங்களில் சமணமடம், சங்கம் முதலியன இருந்தமையும் வரலாற்றுண்மையாகும்.

சமயக் காழ்ப்பினால் சமண சமயத்தவர் அடைந்த இன்னல்கள் ஏராளம். தேவாரமூவர் காலத்தில் சமணம் தழைத் தோங்கியதால், அதன் வளர்ச்சியினைக் குன்றச் செய்யும் பொருட்டு எத்தனையோ முயற்சிகள் எடுக்கப்பட்டன. மெக்கன்சி தொகுப்பின் பல சுவடிகளிலும் சமண சமயத்தவர் இந்துக்களால் இன்னலுற்றமை கூறப்பட்டுள்ளது. சமணர்கள் கொல்லப்பட்டமை, அவர்களது கோயில்கள் அழிக்கப்பட்டமை ஆகியவற்றிற்கு இத்தொகுப்பு மட்டுமன்றி, இந்து சமய இலக்கியங்களாகிய தேவாரம், பெரிய புராணம் முதலியனவும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

மேலும் சில சமணக் கோயில்கள் இந்து சமயக் கோயில்களாக மாற்றப்பட்டமைக்கு அக்கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களும், சில இடங்களிலுள்ள சிற்பங்களும் சான்றுகளாக உள்ளன.


தமிழகத்திற்கு வடநாட்டினின்றும் எவ்வாறு சமண சமயம் பரவியது என்பதனை இத்தொகுப்பு திறம்பட சுட்டிக்காட்டுகிறது. வரலாற்றாசிரியர்களும் சந்திரகுப்தன், பத்ரபாகு முனிவருடன் கர்நாடகத்திலுள்ள சரவணபெல்கோலாவிற்கு வந்த பின்னரே அங்கிருந்து தமிழ் நாட்டிற்கும் பரவியிருக்க வேண்டும் என்னும் கருத்துடையவராக இருக்கின்றனர்.

சமண சமயத்தவர் தமிழ்மொழியிலும், வடமொழியிலும் இயற்றிய நூற்கள் எண்ணிறந்தவை. இந்நூற்களின் பெயர்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது. இதில் கூறப்பட்டுள்ள தமிழிலக்கியங்கள் அனைத்தும், நமக்கு இன்றளவும் கிடைத்திருப்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

மன்னார்குடி திருமதி. இராஜம்மாள் அய்யண்ண உபாத்தியாயர்

அ. மல்லிநாத உபாத்தியாயர் நினைவு வெளியீடு

தாயும் தனயனமும்



திருமதி. இராஜம்மாள்

1893 – 1978



திரு. அ. மல்லிநாத உபாத்தியாயர்

1914 – 1995

தன் பாட்டி மற்றும் தந்தையின் நினைவைப் போற்றும்

**பொறியாளர் ம.பூபாலன்** அவர்களின்

திருவற நூல் நன்கொடை **"கல்வெட்டில் சமணம்"**